# பகுதி II

# பகுதி II

## மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்


| | பக்கம் |
|---|---|
| கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும் | III |
| நாணய வெளியீடு | X |
| வங்கித் தொழில் அபிவிருத்தி | XI |
| வங்கி மேற்பார்வை | XII |
| வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் | XVI |
| அபிவிருத்தி நிதி | XVII |
| கிராமியக் கொடுகடன் | XXIX |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | XXXVI |
| கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி | XXXVIII |
| ஊழியர் சேம நிதியம் | XXXVIII |
| செலாவணிக் கட்டுப்பாடு | XL |
| பொதுப் படுகடன் | XLII |
| பிரதேச அலுவலகங்கள் | XLVIII |
| செயலகம் | L |
| தகவலும் வெளியீடுகளும் | LI |
| ஆராய்ச்சி நடவடிக்கைகள் | LI |
| அளவீடுகளும் தரவுச் சேகரிப்புகளும் | LIII |
| தரவு செய்முறைப்படுத்தல் | LIV |
| பயிற்சி | LVI |
| முகாமைத்துவ கணக்காய்வு | LVI |
| பணிமனை | LVI |
| நலன்புரி | LVII |
| பாதுகாப்பு | LVIII |
| ஆளணி | LIX |

# 1996 சனவரி 31 குண்டு வெடிப்பு நிகழ்வின் பின்னர் வங்கியின் மீட்சி

1996 சனவரி 31 ஆம் நாள் காலையில் சனாதிபதி மாவத்தையிலுள்ள மத்திய வங்கியின் முதன்மைக் கட்டடத்தின் மீதும் சுற்றியுள்ள நிறுவனங்களின் மீதும் பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல் ஒன்று இடம் பெற்றது. குண்டு வெடிப்பும் தீயும் மத்திய வங்கிக் கட்டடத்தையும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள பல நிறுவனங்களையும் கடுமையான சேதத்துக்கு உள்ளாக்கியது. நாற்பத்தொரு ஊழியர்கள் கொல்லப்பட்டதுடன் பல நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். வங்கியின் தளபாடங்களும், சாதனங்களும் கடுமையாக சேதமடைந்தன. சமூக அறிவியல் மீதான வேலைகளுக்கு முக்கிய கருவூலமாக விளங்கிய மத்திய வங்கியின் நூல் நிலையமும் தீயினால் சேதமடைந்தது. கட்டடத்தை மீள அமைப்பதற்கான செலவு ஏறத்தாழ ரூ. 18,000 இலட்சமெனவும் அழிக்கப்பட்ட தளபாடங்களினதும் சாதனங்களினதும் பெறுமதி ரூ. 500 இலட்சமெனவும் மதிப்பிடப்பட்டது.

இந் நிகழ்வின் பின்னர் வங்கி எதிர்நோக்கிய உடனடி முன்னுரிமையாக அதன் தொழிற்பாடுகள் மீளத் தொடங்கப்பட்டமை விளங்கியது. பல துறைகளில் அவசர நடவடிக்கைகளும் தேவைப்பட்டன. ஊழியர்கள் உடல் நலம், நலன்புரி, காசோலைத் தீர்ப்பனவு, நாணய வழங்கல் மற்றும் உள்நாட்டு சருவதேச கொடுப்பனவுகளின் தீர்ப்பனவு, போன்ற நாளாந்த தொழிற்பாடுகளை மீளத் தொடங்குதல் ஆகியவற்றை இவை உள்ளடக்கியிருந்ததோடு இது ஒரு தற்காலிக பின்னடைவு மட்டும் என்பதனையும் இதை மிக விரைவில் வெற்றி கண்டுவிடலாம் என்பது பற்றியும் பொதுமக்களுக்கு உறுதி வழங்குவது மிக முக்கியமானதாக இருந்தது. வங்கியின் பெரும்பாலான திணைக்களங்கள், இராசகிரியாவிலுள்ள கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் உடனடியாக மீள அமைக்கப்பட்டன. மாற்று அமைவிடங்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ஊழியர்கள் வேலைக்கமர்த்தப்பட்டதுடன் வங்கியின் தொழிற்பாடுகள் மீளத் தொடங்கின.

மறு நாளில் இருந்து பெரும்பாலான ஊழியர்கள், காயப்பட்ட சில ஊழியர்களும், காயங்களினால் இன்னமும் துன்பப்பட்டோரும் உட்பட கடமைக்குத் திரும்பினர். வேலை ஒரு நாள் மட்டுமே முழுமையாகத் தடைப்பட்டது. வங்கியின் வேலை ஓர் நாளின் பின்னர் குறைந்த அலுவலர் அடிப்படையில் மீளத் தொடங்கியது.வங்கியின் நாணய நிலவறையும் அதன் அனைத்து முக்கிய ஆவணங்களும் பாதுகாப்பாக இருப்பதாக ஆளுநர் பொது மக்களுக்கு மீண்டும் உறுதி வழங்கியதுடன் வங்கியின் முக்கிய தொழிற்பாடுகள் பெரும்பாலும் உடனடியாகத் தொடங்கின.

அதே நேரம் வங்கி ஊழியர்களின் நலன்புரியினை குறிப்பாகக் குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களையும் குண்டு வெடிப்பில் இறந்தவர்களையும் வங்கி மறந்து விடவில்லை. இவ்வூழியர்களினதும் அவர்களை அண்டியிருப்போரினதும் தேவைகளைக் கவனிப்பதற்காக வங்கி அலுவலர்களிலிருந்து தெரிந்தெக்கப்பட்ட செயலணிக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. தேவையானவிடத்து மருந்தகங்களிலும், வைத்தியசாலைகளிலும் சிறந்த மருத்துவ சிகிச்சையைப் பெற அவர்களை இயலச் செய்யும் விதத்தில் செயலணிக் குழுவினூடாக உதவிகள் வழங்கப்பட்டன. மற்றும் பலர் வெளிநாட்டு வைத்தியசாலைகளில் மருத்துவ சிகிச்சைகளைப் பெற நிதியுதவிகள் வழங்கப்பட்டன. இழப்பீட்டுத் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இது இறந்த ஊழியர்களில் அண்டியிருந்தவர்களுக்கும் அதே போன்று நிரந்தர அல்லது ஓரளவு ஊனமடைந்த ஊழியர்களுக்கும் நன்மைகளை வழங்கியது.

குண்டு வெடிப்பில் மரணமடைந்த ஊழியர்களில் தங்கியிருப்போருக்கு அத்தகைய ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதுவரை (தற்போதைய ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் பெறக் கூடிய சம்பளங்களும் ஏனைய நன்மைகளும் வழங்கப்பட்ட வேளையில் நிரந்தரமாக ஊன

மடைந்த ஊழியர்களும் அவர்கள் ஓய்வுபெறும் வயது வரை கிட்டத்தட்ட இதே போன்ற நன்மைகளைப் பெற்றுக் கொண்டனர். இதற்கு மாற்று வழியொன்றாக ஐந்து வருட மொத்தச் சம்பளத்தை முழுமையான நன்மைத் தொகையாக பெற்றுக் கொள்வதற்கான விருப்பத் தேர்வும் வழங்கப்பட்டது. ஓரளவு ஊனமடைந்த ஊழியர்களுக்கு வைத்தியசாலையில் விதந்துரைக்கப்பட்டவாறு அவர்களது ஊதியம் பெறும் இயலளவின் இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்கப்பட்டது. குண்டுவெடிப்பினால் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் தேகநலன் மற்றும் நலன் புரியினை வங்கி தொடர்ந்தும் கவனித்தது.

கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி ஒன்பது மாதங்களாகத் தற்காலிக தலைமை அலுவலமாகத் தொழிற்பட்டது. இலகுவாக மாற்றத்தக்கதாக இருந்த சில திணைக்களங்கள் வேறு இடங்களில் மீள அமைக்கப்பட்டன, எனினும், பெரும்பாலான திணைக்களங்கள் ஒற்றோபர் இறுதிவரை கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியிலேயே இருந்தன, பல திணைக்களங்களில் இட வசதி மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக சில ஊழியர்கள் முறைமாற்று ஒழுங்கில் வேலைக்குச் சமுகமளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

குண்டுவெடிப்பினைத் தொடர்ந்து உடனடுத்து வந்த நாட்களில் வங்கி எதிர் நோக்கிய பிரச்சனைகளானது கணனிகள் கருவிகளின் அழிவு, வங்கியின் தரவுத் தளத்தினை பதிவேடுகளின் இழப்பு என்பன வற்றிற்கானதே மிகப் பாரியதாக இருந்தன. எனினும், கடுமையாக வேலை செய்தமையின் காரணமாக இப் பிரச்சனைகளில் பெரும்பாலானவை வெற்றி கொள்ளப்பட்டதுடன் வங்கித் தொழிற்பாடுகளை மீளத் தொடங்குவதும் சாத்தியமாயிற்று.

ஒரு சில நாட்களில் வங்கித்தொழில் மற்றும் நாணயத் திணைக்களம், ஊ. சே. நிதித் திணைக்களம் போன்ற மிகமுக்கிய திணைக்களங்கள் தொழிற்படத் தொடங்கின.

பரீட்சிக்கப்பட்ட ரெலக்ஸ் செய்திகளினூடாக பெறுமதி நாளன்று சர்வதேசத் தீர்ப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. சுவிப்ற் மற்றும் ரொயிட்டர் முறைகளும் விரைவாக மீளமைக்கப்பட்டன. வங்கியின் அனைத்து தொழிற்பாடுகளும் அடுத்து வந்த இரண்டு மூன்று மாதங்களில் முழுமையாகத் தொழிற்படத் தொடங்கின. இவை உள்நாட்டு கொடுப்பனவுகள் மற்றும் / சருவதேச தீர்ப்பனவு முறை நாணய வழங்கல் தொழிற்பாடுகள், நாணய மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளில் வங்கியின் தொழிற் பாடுகள் மற்றும் பொதுப்படுகடன் முகாமைத்துவம் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இத்துறைகளின் தொழிற்பாடுகள் மிக விரைவில் குண்டு வெடிப்பிற்கு முன்னர் நிலவிய மட்டங்களுக்கு மீண்டும் அடையப் பட்டன. மாதாந்த ஐந்தொகை, ஆண்டறிக்கை போன்ற வங்கியின் நியதிச் சட்டரீதியான வெளியீடுகள் வெளியடப்பட்ட வேளையில் ஏனைய நடவடிக்கைகள் வழமை போன்று தொடர்ந்தன.

மத்திய வங்கிக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள நிதியியல் சமூகத்தினால் அதரவு வழங்கப்பட்டது. மத்திய வங்கி நாணய வழங்கல் ஊ. சே. நிதிய வேலை போன்ற அதன் நாளாந்த இன்றியமையாத சில தொழிற்பாடுகளை நடத்துவதனை இயலச் செய்யும் வகையில் இரு அரச வங்கிகளும் சில தனியார் வர்த்தக வங்கிகளும் வசதிகளை வழங்கின. நிதியியல் சமூகத்தின் வலுவான ஆதரவு சந்தையில் உறுதிப்பாட்டையும், நம்பிக்கையையும் உறுதிப்படுத்த உதவியது.

1996 நவெம்பரில், வங்கி எச்சலன் சதுக்கத்திலுள்ள உலக வர்த்தக நிலையத்தின் வாடகை இடத்திற்கு அதன் தலைமை அலுவலகத்தை மாற்றிக்கொண்டது. கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் தற்காலிகமாக அமைந்திருந்த வங்கியில் பெரும்பாலான திணைக்களங்கள் உலக வர்த்தக நிலையத்தின் மேற்குக் கோபுரத்தின் 10 மாடிகளில் மீள அமைக்கப்பட்ட வேளையில் ஒரு சில திணைக்களங்கள் தொடர்ந்தும் கிராமிய வங்கித்தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியிலேயே அமைந்திருந்தன.

# கணக்குகளும் வங்கித் தொழில் தொழிற்பாடுகளும்

1996 சனவரி 31 ஆம் நாளன்று வங்கியின் தலைமை அக பணிமனையில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் விளைவாக வங்கித் தொழில் திணைக்களம் பெருமளவு சேதமடைந்தது. எனினும் 2 – 3 நாட்களுக்குள் திணைக்களம் தனது தொழிற்பாட்டினை மீளத்தொடங்கியது வெளிநாட்டுச் செலாவணிப்பிரிவு மறு நாளே தனது தொழிற்பாட்டினைத்தொடங்கியதுடன் வெளிநாட்டுப் பொதுப்படுகடன் மீளச்செலுத்தல் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல் மற்றும் முதலீடுகள் தொடர்பான அனைத்துக் கடப்பாடுகளும் தவறுகள் எதுவுமின்றி குறிப்பிட்ட நாட்களில் தீர்ப்பனவு செய்யப்பட்டன. நடை முறைக் கணக்குப் பிரிவு கொழும்பு கோட்டையில் உள்ள இலங்கை வங்கி தலைமையகக் கட்ட டத்தில் தற்காலிக அலுவலகம் ஒன்றில் தனது தொழிற்பாட்டை ஆரம்பித்த வேளையில் ஏனைய பிரிவுகள் இராசகிரியாவிலுள்ள கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் தொழிற் பாடுகளைத் தொடங்கின. வங்கித் தொழில் திணைக்களத்திலிருந்து மீட்கப்பட்ட கணனி வன் தட்டிலிருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 1996 சனவரி 25 ஆம் நாளில் உள்ளவாறான மாதாந்த ஐந்தொகை தயாரிக்கப் பட்டு வெளியிடப்பட்டது. பொதுப் பேரேட்டை தயாரித்த கணனி முதன்மை அடிச்சட்டம் முழுமையாகவே சேதமடைந்தமையினால் வங்கி யின் பேரேடுகளை புதுப்பிப்பதற்காக தனிப்பட்ட கணனிகளைப் பயன்படுத்தி மென்கல செயல் முறையொன்று திணைக்களத்தில் விருத்தி செய்யப்பட்டது. இதன் மூலம் மாதாந்த ஐந் தொகைகளை சரியான நேரத்தில் தயாரிப்ப தற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

1996 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் ரூ. 1,815,640 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 4.6 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தன. 1996 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறான மத்திய வங்கியின் ஐந்தொகையும் 1996 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறான வங்கியின் இலாப நட்டக் கணக்கும் அட்டவணை II.1 இல் காட்டப்பட்டுள்ளன.

சொத்துக்கள் பக்கத்தில், வங்கியின் சருவ தேச ஒதுக்குகள் ரூ. 1,056,470 இலட்சத்திலிருந்து ரூ. 1,030,800 இலட்சத்திற்கு 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டுகளைப் போன்றே சருவதேச ஒதுக்குகளின் அளவு தனிப்பெரும் சொத்து வகையாக விளங்கி மொத்தச் சொத்துக்களில் 1995 இறுதியின் 60.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 56.8 சதவீதத்திற்கு வகை கூறியது. அதே வேளை உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 399,500 இலட்சத்தி லிருந்து ரூ. 479,650 இலட்சத்திற்கு 20.1 சத வீதத்தினால் அதிகரித்தன.

உள்நாட்டுச் சொத்துக் களில், அரசிற்கான கடன்கள், முற்பணங்கள் மற்றும் அரச, அரச உத்தரவாதப் பிணைகள் என்பன முறையே 16.6 சதவீதத்தினாலும் 36.5 சதவீதத்தினாலும் உயர் வடைந்தன. வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கொடுகடன் நிறுவனங்க ளுக்குமான நடுத்தர, நீண்டகால கொடுகடன் வசதிகள் 19.7 சத வீதத்தினால் வீழ்ச்சியடைந்த மைக்கு தேறிய மீள் கொடுப்பனவுகளும் செயற்படாக் கடன் களின் பேரிலான ஒதுக்குகளுமே காரணங்க ளாகும். இதே போன்று 1996 இல் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்களும் 14.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், சுற்றோட்டத்தி லுள்ள நாணயம் ரூ. 466,850 இலட்சத்திலிருந்து ரூ. 494,800 இலட்சத்திற்கு 6.0 சதவீதத்தினால் அதிகரித்தன. வைப்புக்கள் ரூ. 733,200 இலட்சத்தி லிருந்து ரூ. 747,580 இலட்சத்திற்கு 2.0 சத வீதத்தினால் அதிகரித்து பொறுப்புக்களில் பெரும் வகையை உள்ளடக்கியிருந்ததுடன் மொத்தப் பொறுப்புக்களில் 41.2 சதவீதத்திற்கும் வகைகூறின. இவ்வகையில் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளின் கீழ் வர்த்தக வங்கிகளின் வைப்புப் பொறுப்புக் களுக்கெதிராக மத்திய வங்கியுடன் அவை பேணும் வைப்புக்கள் 12.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அவற்றின் ரூபா வைப்புப் பொறுப்புக்கள் அதிகரித்தமையே முக்கிய காரண மாகும். சருவதேச அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் என்பனவற்றின் வைப்புக்கள் 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. வங்கியின் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் முக்கிய கூறுகளின் ஒப்பீடு அட்டவணை II.2 இல் காட்டப்பட்டுள்ளது.

## இலங்கை

### 1996 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறு

| 1995 திசெம்பர் 31 | | பொறுப்புக்கள் | 1996 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| | | **மூலதனக் கணக்கு** | | |
| 15,000,000 | | மூலதனம் | 15,000,000 | |
| 985,000,000 | 1,000,000,000 | மிகை | 985,000,000 | 1,000,000,000 |
| | | **சுற்றோட்டத்திலுள்ள நாணயம்** | | |
| 44,886,101,205 | | தாள்கள் | 47,566,904,953 | |
| 1,798,401,234 | 46,684,502,439 | குத்திகள் | 1,913,084,940 | 49,479,989,893 |
| | | **வைப்புக்கள்** | | |
| 3,039,394,302 | | அரசு | 3,509,584,531 | |
| 48,879,581 | | அரச முகவர் நிலையங்களும் நிறுவனங்களும் | 12,661,615 | |
| 31,852,685,006 | | வர்த்தக வங்கிகள் | 35,906,962,913 | |
| 36,742,536,986 | | பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசு, வெளிநாட்டு வங்கித் தொழில் நிறுவனங்கள் | 34,546,267,006 | |
| 739,368 | | திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்யப்பட்ட ரூ. 43,479,700/- நீங்கலாக கட்டாய சேமிப்பு நிதி | 1,025,595 | |
| 1,635,464,646 | 73,319,699,789 | ஏனையவை | 672,758,388 | 74,758,260,048 |
| | 4,925,000,000 | நடுத்தர நீண்டகால கொடுகடன் நிதியம் | | 4,925,000,000 |
| | 560,190,000 | மூலதன உதவுதொகைக் கணக்கு | | 560,157,500 |
| | 47,016,155,976 | ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் | | 50,840,266,330 |
| | 173,505,548,204 | | | 181,563,673,771 |

### 1996 திசெம்பர் 31ஆம் நாள் முடிவுற்ற

| 1995 | | 1996 |
|---|---|---|
| 20,802,418,205 | பொதுச் செலவுகளுக்கும் (சம்பளங்கள், நாணயத் தாள்கள், குத்திகள் மீதான செலவையும் காணியும் கட்டடங்களினதும் அலுவலகத் தளபாடங்களினதும் மீதான பெறுமானத் தேய்வையும் உள்ளடக்கும்) நாணயவிதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட ஒதுக்குகளும் | 17,211,291,355 |
| 1,700,000,000 | **ஆண்டுக்கான தேறிய இலாபம்** நாணயவிதிச் சட்டத்தின் பிரிவு 39(இ) இன் நியதிகளின்படி அரசிடமிருந்து மத்திய வங்கிக்கு வரவேண்டிய பொறுப்புக்களின் ஒரு பகுதியைத் தீர்ப்பதற்கு. | 1,500,000,000 |
| 22,502,418,205 | | 18,711,291,355 |

குறிப்பு : *1996 சனவரி 31ஆம் நாளன்று வங்கிக் கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதம் காரணமாக 1996 திசெம்பர் 31ஆம் நாளில் உள்ளவாறான ஐந்தொகை வங்கித் தொழில் திணைக்களத்திலிருந்து மீட்கக்கூடியதாயிருந்த கணனிப் பதிவுத் தட்டிலிருந்து பெறப்பட்ட தகவல்களினதும் அதன் பின்னர் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலின் அடிப்படையிலும் தயாரிக்கப்பட்ட 1996 சனவரி 25ஆம் நாளில் உள்ளவாறான ஐந்தொகையில் எடுத்துக்காட்டப்பட்ட நிலுவைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகும். 1996 சனவரி 26ஆம் நாளிற்கும் 1996 பெப்புருவரி 1ஆம் நாளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய வங்கியின் அடையாளம் காணப்படாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி தொங்கற் கணக்குகளின் கீழ்க் காட்டப்பட்டுள்ளன.*

ஏ. எஸ். ஜயவர்த்தன
ஆளுநர்

எம். பீ. திசாநாயக்க
முதன்மைக் கணக்காளர்

அட்டவணை **II.1**

## மத்திய வங்கி
## ஐந்தொகை

(ரூபாய்கள்)

| 1995 திசெம்பர் 31 | | சொத்துக்கள் | 1996 திசெம்பர் 31 | |
|---|---|---|---|---|
| | | **பன்னாட்டு ஒதுக்கு** | | |
| 39,681,917,863 | | வெளிநாட்டிலுள்ள பணங்களும் நிலுவைகளும் | 35,078,617,381 | |
| 65,916,311,198* | | வெளிநாட்டிலுள்ள பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் | 67,896,066,443* | |
| 48,629,262 | 105,646,858,323 | சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமைகள் | 105,585,513 | 103,080,269,337 |
| | | **உள்நாட்டுச் சொத்துக்கள்** | | |
| 24,053,099,947 | | அரசாங்கத்துக்கான முற்பணங்களும் கடன்களும் | 28,045,799,947 | |
| | | ஏனையவற்றிற்கு | | |
| 2,750,193,526 | | - நடுத்தர நீண்ட தவணை | 2,207,066,200** | |
| 61,326,176 | | - குறுந் தவணை | 52,162,093 | |
| 12,525,189,273 | | அரச, அரச உத்தரவாதப் பிணைகள் | 17,100,292,629 | |
| 560,190,000 | 39,949,998,922 | நிதி ஏனைய நிறுவனங்களுக்கான உதவுதொகைகள் | 560,157,500 | 47,965,478,369 |
| | 27,908,690,959 | ஏனைய சொத்துக்களும் கணக்குகளும் | | 30.517,926,065 |
| | 173,505,548,204 | | | 181,563,673,771 |

* அரச நிறுவனங்களிலிருந்து 1964 பெப்புருவரி 1 இல் ரூ. 5,527,675/= முகப்புப் பெறுமானத்திலும் 1965 மே 24இல் ரூ. 57,450/= முகப்புப் பெறுமானத்திலும் பெற்ற பிணைகளை உள்ளடக்கும். (இப்பிணைகளின் மதிப்பிடப் பட்ட சந்தைப் பெறுமானங்கள் மேற்குறித்த திகதிகளில் முறையே ரூ. 2,933,697/= ஆகவும், ரூ. 34,340/= ஆகவும் இருந்தன.

** ரூ. 1,000 இலட்சம் கொண்ட சிறப்புக் கடன்கள் மீதான வெளிநின்ற தொகையை உள்ளடக்கும் வெளிநின்ற தொகையானது கடன் இழப்புக்களின் ஏற்பாடுகளின் ரூ. 1,252,596,137/- இருந்து தேறியதாகும்.

## ஆண்டுக்கான இலாப நட்டக் கணக்கு

| 1995 | | 1996 |
|---|---|---|
| 22,502,418,205 | பெறப்பட்ட வட்டி ஏனையவை | 18,711,291,355 |
| 22,502,418,205 | | 18,711,291,355 |

**கணக்காய்வாளர் நாயகத்தின் குறிப்பு :**

*1996 திசெம்பர் 31 ஆம் நாள் முடிவுற்ற இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 13 (1) உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் உறுப்புரை 154 (1) இற்கு அமையவும் 1949 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42 (1) இற்கு ஏற்கவும் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.*

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 42(2) இன் நியதிகளுக்கிணங்க நிதியமைச்சருக்கு ஒப்படைக்க வேண்டிய எனது அறிக்கை உரிய காலத்தில் ஒப்படைக்கப்படும்.

கணகங்காய்வாளர் நாயகத்தின் திணைக்களம்
கொழும்பு 7.
17 ஏப்பிறல் 1997

எஸ். எம். சப்றி
கணக்காய்வாளர் நாயகம்

அட்டவணை **II.2**

### மத்திய வங்கியின் சொத்துக்கள் பொறுப்புக்களின் முக்கிய கூறுகளின் ஒப்பீடு

**பொறுப்புக்கள்**

| விடயம் | 1995 இறுதியில் ரூ.ப.இ | % | 1995 இறுதியில் ரூ.ப.இ | % |
|---|---|---|---|---|
| மூலதனமும் மிகையும் | 1,000 | 0.6 | 1,000 | 0.6 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயம் | 46,685 | 26.9 | 49,480 | 27.2 |
| வைப்புக்கள் | 73,320 | 42.3 | 74,758 | 41.2 |
| நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதியம் | 4,925 | 2.8 | 4,925 | 2.7 |
| மூலதன உதவு தொகை க/கு | 560 | 0.3 | 560 | 0.3 |
| ஏனைய பொறுப்புக்கள் * | 47,016 | 27.1 | 50,841 | 28.0 |
| கூறுகளின் பேரில் வழங்கப் பட்ட உத்தரவாதங்கள் | 16,254 | 9.4 | 14,152 | 7.8 |
| கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஒதுக்குகள் | 11,623 | 6.7 | 14,829 | 8.2 |
| சிறப்பு எடுப்பனவு உரிமை களின் ஒதுக்கு | 5,547 | 30.2 | 5,572 | 3.1 |
| பன்னாட்டு ஒதுக்கு மீள் மதிப்பீட்டுக் கணக்கு | 2,583 | 1.5 | 3,957 | 2.2 |
| இலாப நட்டக் கணக்கு | 4,444 | 2.6 | 4,461 | 2.5 |
| ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியக் கணக்கு | 1,511 | 0.9 | 4,634 | 2.6 |
| ஏனைய | 5054 | 2.8 | 3256 | 1.6 |
| மொத்தம் | 173,506 | 100.0 | 181,564 | 100.0 |

**சொத்துக்கள்**

| விடயம் | 1995 இறுதியில் ரூ.ப.இ | % | 1995 இறுதியில் ரூ.ப.இ | % |
|---|---|---|---|---|
| பன்னாட்டு ஒதுக்கு | 105,647 | 60.9 | 103,080 | 56.8 |
| உள்நாட்டுச் சொத்துகள் | 39,950 | 23.0 | 47,966 | 26.4 |
| ஏனைய சொத்துக்கள் * | 27,909 | 16.1 | 30,518 | 16.8 |
| வழங்கப்பட்ட உத்தர வாதங்களுக்கான கூறுகளின் பொறுப்பு | 16,255 | 9.4 | 14,152 | 7.8 |
| வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்குகள் | 3040 | 1.8 | 3,669 | 2.0 |
| சீராக்கற் கணக்குகள் பெறத்தக்க தொகை | 2,146 | 1.2 | 3,022 | 1.7 |
| சேகரிப்பிலுள்ள காசு விடயங்கள் | 646 | 0.4 | 2,419 | 1.3 |
| ஏனைய | 5822 | 3.3 | 7556 | 4.0 |
| மொத்தம் | 173,506 | 100.0 | 181,564 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1996ஆம் ஆண்டிற்கான வங்கியின் மொத்த வருவாய் 1995இன் ரூ. 225,024 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 187,113 இலட்சமாக விளங்கிய வேளையில் 1996 இன் மொத்தச் செலவினம் முன்னைய ஆண்டின் ரூ. 208,024 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 172,113 இலட்சமாக விளங்கியது. வங்கியின் வருவாயில் ஏறத்தாழ 70 சதவீதம் வெளிநாட்டு ஒதுக்குகளின் முதலீட்டிலிருந்து உருவாக்கப்பட்ட வேளையில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான வட்டி வருவாய் ஏறத்தாழ 14.5 சதவீதத்திற்கு வகை கூறியது. செலவிற்கான ஒதுக்குகள், ஒதுக்குகளுக்கு அவசியமான ஒதுக்கீடுகள் மற்றும் தேய்மானங்களுக்கான ஒதுக்கங்கள் மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பனவற்றின் பின்னர் வங்கியின் தேறிய இலாபமான ரூ. 15,000 இலட்சம் கொண்ட தொகை நாணய விதிச் சட்டத்தின் பிரிவும் 39 (இ) இன் நியதிகளின்படி அரசின் திரட்டிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டுமென குறித்தொதுக்கப்பட்டது.

## கணக்கிடல் கொள்கை

### பொது

இணைக்கப்பட்டுள்ள ஐந்தொகையும் இலாப நட்டக் கணக்கும் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் வழமையாக எற்றுக் கொள்ளப்பட்ட கணக்கிடல் தத்துவங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்திலும் அமைந்துள்ளன.

## வெளிநாட்டு நாணய மாற்றல்

வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களும் பொறுப்புக்களும் ஐந்தொகைத் திகதியில் நிலவிய செலாவணியின் நடுவீதத்தில் மாற்றப்பட்டுள்ளன.

## முதலீடுகள்

அனைத்து முதலீடுகளும் கொள்விலையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

## முற்பணங்கள்

ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ள முற்பணங்கள் நிதிக்கூட்டு நிலையங்களிலிருந்து வர வேண்டிய செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கீடுகளைக் கழித்துப் பெறப்பட்டவையாகும்.

## நிலையான சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் கொள்விலையில் பெறுமானத் தேய்வைக் கழித்துக் காட்டப்பட்டுள்ளன. பெறுமானத் தேய்வு குறைந்து செல்லும் நிலுவை முறையில் பின்வரும் வீதங்களில் அறவிடப்படுகின்றது.

| விடயம் | சதவீதம் |
| --- | --- |
| கட்டடங்கள் | 2 |
| பொருத்துக்களும் இணைப்புக்களும் | 10 |
| அலுவலகத் தளபாடங்களும் உபரகணங்களும் | 10 |
| உந்து ஊர்திகள் | 10 |
| தனியாள் கணனிகள் | 25 |

நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு அத்தகைய சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட முழு ஆண்டுக்குமானதாக இருந்ததுடன் நிலையான சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்ட அல்லது அகற்றப்பட்ட ஆண்டிற்கு பெறுமானத் தேய்வு ஒதுக்கப்படமாட்டாது.

## கையிருப்புக்கள்

எழுது கருவி வகைகள் மற்றும் பொறியியற் களஞ்சியங்கள் மீது ஆண்டில் ஏற்பட்ட மொத்தச் செலவு இலாப நட்டக் கணக்கில் கழிக்கப்பட்டதுடன் முடிவுக் கையிருப்புக்களைப் பொறுத்த வரையில் எவ்வித சீராக்கங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

## வருமானக் கணிப்பு

காசு அடிப்படையில் கணிக்கப்படும் செயற்படாக் கடன்கள் மீதான வட்டி தவிர, வட்டியும் ஏனைய வருமானங்களும் ஏடுகளில் ஒன்று சேர்ந்த அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

## தேறிய இலாபம்

அனைத்துச் செலவுகளுடன் பின்வரும் ஒதுக்கீடுகளையும் மேற்கொண்ட பின்னரே இலாப நட்டக் கணக்கில் தேறிய இலாபம் எடுத்துக் காட்டப்படுகின்றது.

(அ) செயற்படாக் கடன்களுக்கான ஒதுக்கீடு

(ஆ) நிலையானசொத்துக்களின் பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கீடு

(இ) நாணய விதிச் சட்டத்தின் 38ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒதுக்குகளுக்கான எனைய அவசிய எற்பாடுகளும் ஒதுக்கீடுகளும்.

## வங்கி வீதம்

நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 87இன் கீழ் வர்த்தக வங்கிகளுக்கான குறுங்கால முற்பணங்கள் மீதான மத்திய வங்கியின் வட்டி வீதம் (வங்கி வீதம்) ஆண்டொன்றுக்கு 17 சதவீதமாக மாற்றமின்றியிருந்தது.

## குறுங்காலக் கொடுகடன்

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் மற்றும் ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் திட்டம் என்பனவற்றின்

கீழ் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் வசதிகள் முறையே 1994 ஏப்பிறலிலும் மேயிலும் நிறுத்தப்பட்டன. எனினும் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடு கடன் திட்டம் நிறுத்தப்படுவதற்கு முன்னர் வேளாண்மைக் கடன்பாட்டாளர்களுக்கு சுழலும் கடன் வசதியை வழங்கிய வர்த்தக வங்கிகளுக்கு சுழலும் கடன் தொகையின் மீது மீள் நிதியிடல் வசதிகள் வழங்கப்பட்டன. இவ்வசதியின் கீழ் வெளிநின்ற தொகை 1995இன் ரூ. 613 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இறுதியில் ரூ. 522 இலட்சமாக விளங்கியது.

### நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

நடுத்தர நீண்டகாலக் கொடுடன் நிதியம் 1996இல் மாற்றமின்றி ரூ. 49,250 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் பகிர்ந்தளிப்பு நீங்கலாக மீளச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 1,685 இலட்சமாக அமைந்தது.

### நிதிக் கூட்டு நிலையங்களுக்கான கடன் வழங்கல

1988 இன் 78ஆம் இலக்க நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் பிரிவுகள் 20(4) (அ) மற்றும் 21(1) இன் நியதிகளின்படி மத்திய வங்கி நிதிக் கூட்டுநிலையங்களுக்கு தொடர்ந்தும் நிதியியல் கடன்களை வழங்கியது. 1996இல் இவ்வசதியின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,040 இலட்சமாகவும் 1996 இறுதியில் வெளிநின்ற மொத்தத் தொகை (அறவிடமுடியாக் கடன் ஒதுக்குகளுக்கு முன்) ரூ. 25,730 இலட்சமாகவும் இருந்தது.

### ஒதுக்குத் தேவைப்பாடுகள்

வர்த்தக வங்கிகள் மீதான நியதி ஒதுக்கத் தேவைப்பாடுகள் ஆண்டு முழுவதும் மாற்றமின்றி யிருந்தன. ரூபா வைப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் 15 சதவீதமாகவும் இலங்கைக்கு வெளியே முதலீடு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதான ஒதுக்குத் தேவைப்பாடு 5 சதவீதமாகவும் காணப்பட்ட வேளையில் ஏனைய அனைத்து வெளிநாட்டு நாணய வைப்புக்கள் மீதுமான நியதி ஒதுக்குத் தேவைப்பாடு 15 சத வீதமாகவும் ஆண்டு முழுவதும் காணப்பட்டது.

## திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

### இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

இரண்டாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டி யல்களின் விற்பனை 1995இன் ரூ. 17 பில்லிய னிலிருந்து 1996 இல் ரூ. 16.5 பில்லிய னுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. இதே காலப் பகுதியில் கொள்வனவுகளும் ரூ. 35.3 பில்லியனி லிருந்து ரூ. 17 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கு குறுங்கால முதலீடுகள் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களின் மீள் கொள்வனவுச் சந்தைக்கு மாற்றமடைந்தமையே காரணமாகும். 1996இல் திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு வீழ்ச்சியடைந்தமைக்கு சந்தை யில் மிகையான திரவத் தன்மை காணப்பட்டமையே காரண மாகும்.

இவ்வாண்டில் இரண்டாந்தரச் சந்தையில் மூன்று மாத திறைசேரி உண்டியல்களில் முதலீடு கள் மீது பிரயோகிக்கக் கூடிய விளைவு வீதங்கள் ஆண்டொன்றுக்கு 10.98 இற்கும் 19.02 சத வீதத் திற்கு மிடையில் வேறுபட்டன.

### திறைசேரி உண்டியல்களுக்கான மீள்கொள்வனவுச் சந்தை

இவ்வாண்டில் மீள் கொள்வனவு உடன் படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட திறை சேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி ரூ. 403.8 பில்லியனாக விளங்கி 1995 இன் விற்பனை யுடன் ஒப்பிடுகையில் 100% அதிகரிப்பினைப் பதிவு செய்தது. ஆண்டின் தொடக்கத்தில் 16.5 சதவீதமாகக் காணப்பட்ட ஓர் இரவுக்கான மீள் கொள்வனவு விளைவு வீதம் ஏப்பிறல் இறுதியில் 9.5 சதவீதத்திற்கு படிப்படியாகக் குறைக்கப்பட்ட மையானது வங்கித் தொழில் முறையில் காணப் பட்ட உயர்ந்த திரவ நிலைமைகளைப் பிரதிபலிப் பதாயிருந்தது. எனினும் ரூபாத் திரவத் தன்மை யானது படிப்படியாக இறுக்கமாக்கப்பட்டதன் காரணமாக ஓர் இரவுக்கான மீள் கொள்வனவு வீதம் திசம்பர் இறுதியிலும் 12.75 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கைகள்

சந்தையில் திரவத் தன்மையை அதிகரிக்கும் குறிக்கோளுடன் 1995 நவெம்பரில் அறிமுகப் படுத்தப்பட்ட நேர்மாற்று மீள் கொள்வனவு வசதி ஆண்டின் முதல் மாதம் தவிர 1996 இல் தொழிற்படுத்தப்படவில்லை. இதற்குச் சந்தையில் நிலவிய உயர்ந்த ரூபா திரவ நிலைமையே முக்கிய காரணமாக இருந்ததுடன் இது ஆண்டின் எஞ்சிய பகுதியில் நேர்மாற்று மீள் கொள்வனவு தொழிற்பாடுகளை மத்திய வங்கி தொழிற்படுத்து வதற்கான அவசியத்தையும் ஏற்படுத்தவில்லை.

## இந்தியாவிற்குக் குடிபெயர்ந்து செல்வோருக்கான உதவு தொகையும் மிகைக் கொடுப்பனவும்

1964 இன் இந்திய இலங்கை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களை மீள அனுப்புவதற்காக அரசின் சார்பில் கிடைக்கச் செய்யப் பட்ட மொத்த உதவிக் கொடுப்பனவுகள் 1995 இன் ரூபா 323,232 உடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 125,953 ஆக விளங்கியது. மிகைக் கொடுப்பனவுகள் 1995 இன் ரூ. 39,600 உடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 7,475 ஆக விளங்கியது.

## ஏற்றுமதியாளருக்கான இறக்குமதித் தீர்வை மிகைக் கொடுப்பனவு

அரசின் சார்பில் ஏற்றுமதியாளருக்கு செலுத்தப்பட்ட இறக்குமதித் தீர்வை மிகைக் கொடுப்பனவுகள் தொடர்பாக வங்கியானது வர்த்தக வங்கிகளுக்கு 1995 இன் ரூ. 9,229 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1996 இல் ரூ. 10,027 இலட்சம் கொண்ட மொத்தத் தொகையை செலவீடு செய்தது.

## வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள்

இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ. அ. டொலரின் உடன் கொள்வனவு விற்பனவு வீதங்களையும் முன் மாற்றுக் கொள்வனவு களையும் தீர்மானிப்பதன் வாயிலாக வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளில் மத்திய வங்கி தொடர்ந்தும் ஈடுபட்டது. இது வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை சருவ தேச பணச்சந்தையிலும் மூலதனச் சந்தையிலும் தொடர்ந்தும் முதலீடு செய்தது.

அட்டவணை **II.3**

1996 இல் வர்த்தக வங்கிகளுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

| மாதம் | உடன் கொள் வனவுகள் | உடன் விற்பனைகள் | முன்மாற்றுக் கொள்வனவுகள் |
|---|---|---|---|
| சனவரி | 1,068 | | |
| பெப்புருவரி | 2,918 | | |
| மாச்சு | 880 | | |
| ஏப்பிறல் | - | | |
| மே | - | 4,309 | |
| யூன் | - | 4,826 | |
| யூலை | 245 | - | |
| ஓகத்து | 111 | - | |
| செத்தெம்பர் | - | - | |
| ஒற்றோபர் | - | 888 | |
| நவெம்பர் | - | 858 | |
| திசெம்பர் | | - | - |
| மொத்தம் | 5,222 | 10,881 | - |

1996 இல் மத்திய வங்கியினால் இலங்கையின் வர்த்தக வங்கிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் மொத்த ரூபாப் பெறுமதி ரூ. 52,220 இலட்சமாக விளங்கிய வேளையில் வர்த்தக வங்கிகளுக்கான வெளிநாட்டு நாணய விற்பனைகள் ரூ. 108,810 இலட்சமாக விளங்கின. (அட்டவணை 11.3) இது 1995 இன் ரூ. 191,870 இலட்சங் கொண்ட விற்பனைகளுடனும் ரூ. 4,390 இலட்சங் கொண்ட விற்பனைகளுடனும் ஒப்பிடத் தக்கதாகும்.

## ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியம்

ஆசியத் தீர்ப்பனவு ஒன்றிய உறுப்பினர் நாடுகளுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக புதிய தீர்ப்பனவு நடைமுறை யொன்று 1 சனவரி 1996 இலிருந்து தொழிற்படத் தொடங்கியது. புதிய நடைமுறையின் கீழ் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் உறுப்பு நாடு களுக்கிடையேயான அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் ஐ. அ. டொலர்களிலேயே கணக்கு வைக்கப்படுகின்றன. உறுப்பினர் நாடுகளுக் கிடையேயான கொடுக்கல் வாங்கல்கள் தொடர் பாக ஆ. தீ. ஒன்றிய செயலகத்தில் பேணப்படும் கணக்குகள் ஆசிய நாணய அலகு என அழைக்கப்

படும் பொதுவான கணக்கு அலகில் பேணப்படுவதுடன் ஆசிய நாணய அலகொன்று ஒரு ஐ. அ. டொலருக்குச் சமமானதாகும். இவ்வொழுங்கின் கீழ் வர்த்தக வங்கிகள் உறுப்பினர் நாடுகளிலுள்ள பேராளர் வங்கிகளுடன் நொஸ்றோ கணக்குகளைத் திறக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் மத்திய வங்கிகளின் உட்படுத்தலைப் பொறுத்தவரை நொஸ்றோ கணக்குகளின் மிகை நிதியங்களின் பெறுகைகள் மற்றும் வெளியனுப்பல் மற்றும் அத்தகைய கணக்குகளின் நிரப்பல் என்பனவற்றிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உறுப்பினர் நாடுகளிடையேயான தேறிய நிலைமையின் தீர்ப்பனவு ரொக்க நாணயங்களைப் பயன்படுத்தி இரண்டு மாதங்களுக்கொருமுறை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

1996 இல் ஆ. தீ. ஒன்றியத்தினூடான கொடுக்கல் வாங்கல்களின் மொத்த ரூபாப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 370,300 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 338,280 இலட்சமாக விளங்கியது. 1996 இல் வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட தேறிய தீர்ப்பனவுகளின் ரூபாப் பெறுமதி 1995 இன் ரூ. 180,280 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 282,710 இலட்சமாக விளங்கியது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் ஆ. தீ. ஒன்றிய ஒழுங்குகளின் கீழ் 'சுவப்' வசதிக்கு இலங்கை வழங்கிய உதவு தொகை ரூ. 13,190 இலட்சங்களாகும்.

### கட்டாய சேமிப்புக்கான நிதியம்

மத்திய வங்கி 1971இன் 6ஆம் இலக்க கட்டாயச் சேமிப்புக்கள் சட்டத்தினதும் 1972 இன் 15ஆம் இலக்க வருமான உச்சவரம்பு, கட்டாய சேமிப்புக்கள் சட்டத்தினதும் நியதிகளின் படி சேகரிக்கப்பட்ட பணத்தின் பாதுகாவலராகத் தொடர்ந்து விளங்கியதுடன் அரசின் சார்பில் கட்டாய சேமிப்புக்கள் நிதியத்தினையும் நிருவகித்தது. ஆய்விற்குரிய ஆண்டில் கொடுக்கல் வாங்கல் எதுவும் இடம்பெறவில்லை.

### அரச கணக்குகள்

அரசின் வங்கியாளர் என்ற முறையில் அரச திணைக்களங்கள், அரச முகவர் நிலையங்கள் மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட சில நியதிச் சபைகள் என்பனவற்றின் கணக்குகளை மத்திய வங்கி தொடர்ந்தும் பேணியது. 1996 திசெம்பர் இறுதியில் தொழிற்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினைப் போன்றே 164 இல் நிலையாக இருந்தது.

### வெளிநாட்டு நிதி

ஆய்விற்குரிய ஆண்டில் மத்திய வங்கி பல்வேறுபட்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் கொடைகள் என்பனவற்றின் கீழ் கிடைக்கத்தக்கதாயிருந்த பகிர்ந்தளிப்புக்களைத் தொடர்ந்தும் பெற்ற வேளையில் அரசின் சார்பில் வெளிநாட்டுக் கடன்கள் / அவற்றின் மீதான வட்டி என்பனவற்றின் மீளச் செலுத்தலையும் மேற்கொண்டது.

## நாணய வெளியீடு

மத்திய வங்கி தனியொரு நாணய வெளியீட்டு மேலாண்மையாளராக விளங்கி 1996ஆம் ஆண்டுப் பகுதியில் உள்நாட்டுக் கொடுக்கல் வாங்கல்களுக்கான இலங்கையில் சட்ட ரீதியான நாணய வழங்கல் பணியினைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. 1996 இறுதியில் சுற்றோட்டத்திலிருந்த நாணயம் 1995 இறுதியின் ரூ. 466,845 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 494,800 இலட்சமாக விளங்கியது.

1996 சனவரி 31ஆம் நாளன்று மத்திய வங்கிக் கட்டடத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலின் பின்னர், பொது மக்களுக்கான தடையுறாத நாணய வழங்கலை உறுதிப்படுத்தும் பொருட்டு நாணயத் திணைக்களம் கொழும்பு 10 இலுள்ள மக்கள் வங்கியின் ஏரிக்கரைக் கிளையிலும், கொழும்பு 1 கோட்டையில் உள்ள இலங்கை வங்கிக் கோபுரக் கிளைக் கட்டடத்திலும் இரு நாணய வழங்கல் கரும பீடங்களை உடனடியாக ஏற்படுத்தியது.

நாணயத் தாள்களின் பாதுகாப்புப் பண்புகளை தொடர்ச்சியாக மேம்படுத்தும் வங்கியின் கொள்கைகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் பிந்தி வெளியிடப்பட்ட நாணயத் தாள்களில் அதிகரிக்கப்பட்ட பாதுகாப்புப் பண்புகள் இரண்டு ஒருங்கிணைக்கப்பட்டன. இப்புதிய

தொடர் நாணயத் தாள்கள் 1996 செத்தெம்பரில் சுற்றோட்டத்திற்கு விடப்பட்டன.

தேசிய மற்றும் சருவதேச முக்கிய நிகழ்வு களை நினைவு கூருமுகமாக மத்திய வங்கி சிறப்பு நாணயக் குத்திகளை வெளியிடுகின்றது. 1996ஆம் ஆண்டில் சுற்றோட்டத்திலுள்ள ரூ. 5 இனக் குத்தியானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் 50ஆவது ஆண்டு நிறைவினை நினைவு கூருமுக மாக வெளியிடப்பட்டது. நாணயக் குத்திகளைச் சேகரித்து வைப்பவர்களுக்காக பதிவு நாணயக் குத்திகளும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் வெளியிடப்பட்டன. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் 50ஆவது ஆண்டு நிறைவினை நினைவு கூருமுகமாக மற்றுமொரு ரூ. 1 இன நினைவு நாணயக் குத்தியினை வெளியிடுவதற்கு ஒழுங்கு கள் செய்யப்பட்டுள்ளன.

பெறுமதி குறைந்த இன நாணயக் குத்திகளான ரூ. 1, சதம் 50, சதம் 25 நாணயக் குத்திகளின் உலோகக் கலவையினை மத்திய வங்கி செம்பு கலந்த நிக்கலிலிருந்து நிக்கல் முலாம் பூசப்பட்ட உருக்கிற்கு மாற்றிய வேளையில் தற்போதைய வடிவமைப்பு, விட்டம் மற்றும் நிறை என்பன அப்படியே பேணப்பட்டன. இந் நாணயக் குத்திகள் தற்பொழுது சுற்றோட்டத்தி லுள்ள நாணயக் குத்திகளைவிட சிறிதளவு (0.2 மி. மீ.) கனமானதெனினும் எனைய பண்புகள் சுற்றோட்டத்திலுள்ள தற்போதைய நாணயக் குத்திகளைப் போன்றதாகவே உள்ளன. உலோ கத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டமைக்கு அதன் குறிப்பிடத்தக்க செலவுக் குறைப்பே காரணமாகும். நிக்கல் முலாம் பூசப்பட்ட உருக்கிலான 25 சத நாணயக் குத்தி 1996 நவெம்பரில் சுற்றோட்டத் திற்கு விடப்பட்டது.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

வங்கித் தொழில் தொடர்பான கொள்கை மற்றும் வர்த்தக வங்கிகள், வர்த்தக வங்கிகளின் கிளைகள் என்பனவற்றை நிறுவுவது தொடர்பான வங்கித் தொழில் சட்டங்களை நடைமுறைப் படுத்தல், சிறப்பியல்வு வாய்ந்த வங்கிகளை நிறுவுதல், நிதிக் கருவிகளை அறிமுகப்படுத்து வதற்கான எடுத்துரைப்புக்களை மதிப்பீடு செய்தல் என்பனவற்றை வங்கித் தொழில் அபி விருத்தித் திணைக்களத்தின் முதன்மைத் தொழிற் பாடுகள் உள்ளடக்கியுள்ளன. மேலும் இத் திணைக்களம் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் செயலாற்றத்தைக் கண்காணிப்ப துடன் பி. கி. அ. வங்கிகளுக்கான கொள்கை உருவாக்கத்திலும் கவனம் செலுத்துகின்றது. அத்துடன் திணைக்களம் மத்திய வங்கியின் பிரதேச அலுவலகங்களின் வேலைகளை ஒருங்கி ணைப்பதுடன் அவற்றின் செயலாற்றத்தினையும் கண்காணிக்கின்றது.

1996 இறுதியில் உள்ளவாறு வர்த்தக வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிறப்பியல்பு வங்கிகள் என்பனவற்றின் விபரங்கள் சில அட்டவணை II - 4 இல் தரப்பட்டுள்ளன. 1996 இல் சோசியேட் ஜெனராலி என்ற புதிய வெளிநாட்டு வர்த்தக வங்கியின் கிளையினை நிறுவுவதற்கு உரிமம் வழங்கப்பட்டது. ( 1997 இன் தொடக்கப் பகுதியில் இந்த வங்கி தொழிற்பாட்டைத் தொடங்கியது) 1996 இன் இறுதிப் பகுதியில் இடம் பெற்ற இன்னொரு அபிவிருத்தி யாதெனில் இத்தோசுயிஸ் கொழும்புக் கிளையின் வாணி பத்தினை வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி பொறுப்பேற்றுக் கொண்டமையாகும். வர்த்தக வங்கிகள் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், மற்றும் சிறப்பியல்வு வங்கிகளின் எண்ணிக்கை 27 வர்த்தக வங்கிகளையும் (8 உள்நாட்டு வர்த்தக வங்கிகள், 19 வெளி நாட்டு வர்த்தக வங்கிகள்) 17 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளையும் 4 சிறப்பியல்பு வங்கிகளையும் உள்ளடக்கியிருந்தது.

### கிளை விரிவாக்கம்

1996 காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளின் 152 கிளைகளைத் திறப்பதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. இலங்கை வங்கியின் ஹசலக்க கிளையினை மகியங்கனை கிளையுடன் ஒருங்கி ணைப்பதற்கான ஒப்புதலும் வழங்கப்பட்டது. மேலும் வெளிநாட்டு வங்கியொன்றின் கிளை யொன்றும் இவ்வாண்டில் மூடப்பட்டது. இவ் வாண்டில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகளினால் திறக்கப்பட்ட கிளைகளின் மொத்த எண்ணிக்கை 127 ஆகும். அவற்றில் உள்நாட்ட வர்த்தக வங்கிகள் 125 கிளைகளையும் வெளிநாட்டு வர்த்தக வங்கிகள் 2 கிளைகளையும் திறந்தன. இவ்வாண்டில் பிரதேச கிராமிய

அபிவிருத்தி வங்கிகளும் 4 கிளைகளைத் திறந்தன. சிறப்பியல்பு வங்கிகளில் வரையறுக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் வரையறுக்கப்பட்ட தேசிய அபிவிருத்தி வங்கி ஆகிய ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிளையினைத் திறந்த வேளையில் தேசிய சேமிப்பு வங்கி இரண்டு கிளைகளைத் திறந்தது. 1996 இல் வங்கிக்கிளை வலையமைப்பு 133 இனால் அல்லது 11 சதவீதத்தினால் 1344 இற்கு அதிகரித்தது.

## கூட்டுத் தொழில் முயற்சி

இலங்கை வங்கி நேபாளத்தின் என். பீ. குறூப்பின் ஒத்துழைப்புடன் வரையறுக்கப்பட்ட நேபாள இலங்கை வங்கி என்ற பெயரில் கூட்டுத் தொழில் முயற்சிக் கம்பனியொன்றினை நிறுவியதன் மூலம் அதன் கடல் கடந்த நடவடிக்கைகளை விரிவாக்கிக் கொண்டது.

## பிரதேச அபிவிருத்தி வங்கிகளை நிறுவுதல்

நாட்டின் குறித்துரைக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதேச அபிவிருத்தி வங்கிகளை நிறுவுவதற்கான திட்டமொன்று அரசினால் முன்மொழியப்பட்டுள்ளது.

பிரதேச அபிவிருத்தி வங்கியினை நிறுவுவதற்கான முன்மொழிவானது பல காரணங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பிரதேசங்களில் ஏற்கனவேயுள்ள வங்கித் தொழில் மற்றும் கொடுகடன் வலையமைப்பு மட்டுப்படுத்தப்பட்டுக் காணப்படுவதுடன் அவற்றின் தற்போதைய அமைப்பு முறையின்படி அபிவிருத்தி வங்கியொன்றினால் எதிர்பார்க்கப்படும் பலதரப்பட்ட நடவடிக்கைகளை அவற்றினால் மேற்கொள்ள இயலாது காணப்படுகின்றது. 1985இல் நிறுவப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் கிராமியத் துறையின் அபிவிருத்தியில் பயனுள்ள பங்கொன்றினை வகித்த போதிலும் அமைப்பு மற்றும் மூல வளக் கட்டுப்பாடுகளின் காரணமாக அவற்றின் எதிர்பார்ப்புக்கள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. மேலும் பல தரப்பட்ட துறைகளுக்கு வேறுபட்ட வங்கிகளை நிறுவுவதற்கான பலதரப்பட்ட முன்மொழிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வங்கிகளின் பெருக்கத்திற்கு காரணமாக அமைவதோடு வேலைகளை இரட்டிப்பாக்குவதன் மூலம் சிறிய பொருளாதாரமொன்றுக்கு உகந்தது மல்ல. எனவே பிரதேச அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்படலானது குறிப்பிட்ட பிரதேசங்களில் வேறுபட்ட துறைகளிலும் பொருளாதார அபிவிருத்திகளை எய்துவதற்கான சிறந்த ஆற்றல் மிக்க முறையாகக் கருதப்படுகின்றது. புதிய வங்கியின் தொழிற்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள பிரதேச கிராமிய அபிவிருத்தியின் வாணி பத்தையும் ஊழியர்களையும் பிரதேச அபிவிருத்தி வங்கி ஈர்த்துக் கொள்ளும் இதற்கான சட்டவரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் 1997 ஆரம்பத்தில் சட்டமாக உருவாகும்.

## வங்கி மேற்பார்வை

மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைத் தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ள வங்கி மேற்பார்வைத் திணைக்களம் 1996 சனவரியில் அதன் தொழிற்பாடுகளுக்கு ஏற்பட்ட தடங்களிலிருந்தும் விரைவாக மீட்சி பெற்றதுடன் வங்கித் தொழில் முறையின் நிதியியல் ஆற்றலையும் வைப்பாளர்களின் நலன்களையும் பாதுகாப்பதற்கான அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

திணைக்களம் காலத்திற்குக் காலம் தலப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளல் மற்றும் தொடர்ச்சியாக தலத்திற்கு வெளியே மேற்பார்வை செய்தல் ஆகியவற்றினூடாக அதன் தொழிற்பாடுகளை மேற்கொள்ளுவதன் மூலம் அதனது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுகின்றது. தலப் பரீட்சிப்பின் போது திணைக்களம் தலத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், பரீட்சிக்கப்பட்ட வங்கியின் சொத்துக்களினது தரத்தினை மதிப்பிடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது. அத்தகைய தலப் பரீட்சிப்புக்களின் பரப்பளவு வங்கிகளின் நிதியியல் செயலாற்றத்தின் பகுப்பாய்வு, முகாமைத்துவம், மூலதனப் போதுமையும் திரவத் தன்மையும் மற்றும் முறைகள் கட்டுப்பாடுகளின் பரீட்சிப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளன.

ஆய்விற்குரிய ஆண்டில் இத்தகைய 13 தலப் பரீட்சிப்புக்களைத் திணைக்களம் தொடங்கியதுடன் உரிமம் பெற்ற 3 வர்த்தக வங்கிகள் மற்றும் முன்னைய ஆண்டில் தொடங்கப்பட்ட ஒரு பிரதேச அபிவிருத்தி வங்கி என்பன

## அட்டவணை II.4

### வங்கித் தொழில் நிறுவனங்களின் அமைப்பும் வங்கிக் கிளைகளின் பரம்பலும்

| வகை | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996(அ) |
|---|---|---|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை | 42 | 43 | 44 | 44 | 47 | 48 |
| 1.1 வர்த்தக வங்கிகள் | 23 | 23 | 23 | 23 | 26 | 27 |
| 1.1.1 உள்நாட்டு வர்த்தக வங்கிகள் | 6 | 6 | 6 | 6 | 8 | 8 |
| 1.1.2 வெளிநாட்டு வங்கிகள் | 17 | 17 | 17 | 17 | 18 | 19 |
| 1.2 பி. கி. அ. வங்கிகள் (ஆ) | 15 | 16 | 17 | 17 | 17 | 17 |
| 1.3 சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் (இ) | 4 | 4 | 4 | 4 | 4 | 4 |
| சேமிப்பு வங்கிகள் | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| அபிவிருத்தி வங்கிகள் | 3 | 3 | 3 | 3 | 3 | 3 |
| 2. வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஈ) | 977 | 1065 | 1107 | 1158 | 1211 | 1343 |
| 2.1 வர்த்தக வங்கிக் கிளைகள் (உ) | 765 | 818 | 853 | 892 | 938 | 1063 |
| உள்நாட்டு வங்கிகளின் கிளைகள் | 739 | 788 | 819 | 855 | 899 | 1023 |
| முதன்மைக் கிளைகள் | 656 | 699 | 733 | 763 | 797 | 828 |
| வே. ப. நி. கிளைகள் | 36 | 34 | 29 | 28 | 19 | 17 |
| கச்சேரிக் கிளைகள் | 24 | 24 | 24 | 23 | 23 | 23 |
| விரிவாக்க கொடுப்பனவு அலுவலகங்கள் (ஊ) | 17 | 25 | 27 | 32 | 41 | 49 |
| அடைவு நிலையங்கள் | 4 | 4 | 4 | 7 | 15 | 101 |
| வெளிநாட்டுக் கிளைகள் (எ) | 2 | 2 | 2 | 2 | 4 | 4 |
| வெளிநாட்டு விரிவாக்கக் கிளைகள் | - | - | - | - | - | 1 |
| வெளிநாட்டு வங்கிக் கிளைகள் | 26 | 30 | 34 | 37 | 39 | 40 |
| முதன்மைக் கிளைகள் | 25 | 29 | 33 | 36 | 37 | 38 |
| விரிவாக்க அலுவலகங்கள் | 1 | 1 | 1 | 1 | 2 | 2 |
| 2.2 பி. கி. அ. வ. கிளைகள் | 124 | 156 | 163 | 169 | 171 | 175 |
| 2.3 சிறப்பியல்வு வாய்ந்த வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (ஏ) | 88 | 91 | 91 | 97 | 102 | 106 |
| இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (இ. அ. நி. கூ.) | 3 | 3 | 3 | 4 | 4 | 5 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி (அ. ஈ. மு. வ.) | 3 | 3 | 2 | 2 | 2 | 2 |
| தேசிய அபிவிருத்தி வங்கி (தே. அ. வ.) | 1 | 1 | 1 | 1 | 1 | 2 |
| தேசிய சேமிப்பு வங்கி (தே. சே. வ.) | 81 | 84 | 85 | 90 | 95 | 97 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

(ஆ) 1985 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிகி அவ சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.

(இ) திருத்தப்பட்ட வங்கித்தொழில் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளாக தொழிற்படுவதற்கு உரிமங்கள் தேவைப்படும் வங்கிகள்.

(ஈ) கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் நீங்கலாக.

(உ) 1996 இல் வங்கித் தொழில் தொழிற்பாடுகளைத் தொடங்காத சொசைரி ஜெனராலேஇன் கிளை நீங்கலாக.

(ஊ) திருத்தப்பட்ட எண் தொகைகள் அடைவு நிலையங்கள் தனியாகத் தரப்படுகின்றன.

(எ) இலங்கை வங்கியின் வெளிநாட்டுக் கிளைகள்

(ஏ) தலைமை அலுவலகங்கள் உட்பட.

உட்பட 7 பரீட்சிப்புக்களை நிறைவு செய்தது. இரு பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினது தொழிற்பாடுகளின் குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கிய உடன் பரீட்சிப்புக்களும் 1996 இல் மேற்கொள்ளப்பட்டன.

தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பு முறையின் கீழ் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மாதாந்தக் கூற்றுக்கள், திரவச் சொத்துக்கள் செயற்படா முற்பணங்கள் மீதான காலாண்டுக் கூற்றுக்கள் வருமானமும் செலவும் மற்றும் மூலதனப் போதுமை என்பன வற்றின் அடிப்படையில் வர்த்தக வங்கிகளினதும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளினதும் நிதியியல் நிலைமைகளைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. நிதியியல் நிலைமை, ஒவ்வொரு வர்த்தக வங்கியினதும் அதன் சொந்த ஒத்த தொகுதி மற்றும் முழு வங்கித் தொழில் என்பன தொடர்பான முற்பண சொத்துப் பட்டியலின் தரம் மற்றும் அளவு என்பனவற்றில் காணப்பட்ட போக்கு என்பனவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வர்த்தக வங்கிகளினாலும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளினாலும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மீளாய்வு செய்யப்பட்டன.

வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கண்காணிப்பும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானமும், செலவும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முதிர்ச்சி என்பன தொடர்பாக திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் மோற்கொள்ளப்பட்டன. வங்கித் தொழில் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் விளைவாக, சட்டத்தின் குறிப்பிட்ட ஏற்பாடுகளிலிருந்து இதுவரை விலக்களிக்கப் பட்டிருந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் இப்பொழுது வினைமதியுடைய தேவைப்பாடுகளுக்கு உட்பட்டிருக்கின்றன.

திணைக்களம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் மற்றும் 1995 இன் 33 ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டம் என்பனவற்றின் ஏற்பாடுகள் மற்றும் வினைமதித் தேவைப்பாடுகளுடன் தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் என்பனவற்றின் கீழ் வங்கிகள் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுடன் இணங்கிச் செல்கின்றனவா என்பது பற்றித் தொடர்ந்தும் உறுதிப்படுத்திக் கொண்டது. இடர் நிறையேற்றப் பட்ட சொத்துக்கள் மற்றும் ஆகக் குறைந்த மட்ட திரவச் சொத்துக்கள் என்பன வற்றுடன் தொடர்பான ஆகக் குறைந்த மூலதனப் பேணல், தனிப்பட்ட கடன்பாட்டாளர்களின் மட்டுப் படுத்தல்களுக்கு இசைவாக நடத்தல், பணிப்பாளர்களுக்கும் அவர்களின் நலவுரித்துக்களுக்குமான கடன்களின் மீது கட்டுப்பாடுகள், நியதிச்சட்ட காலப் பகுதிக்குள் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு நிதியியல் கணக்குகளைச் சமர்ப்பித்தல், செயற்படா முற்பணங்களின் மீது வழிகாட்டல் களைப் பின்பற்றுதல் மற்றும் அறவிட முடியா மற்றும் ஐயக்கடன் தொடர்பான போது மான ஏற்பாடுகள் என்பனவற்றையும் உள்ளடக்கியிருந்தன. மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களிலும் வங்கித் தொழில் ஒழுங்குகள் மற்றும் மேற்பார்வை நடவடிக்கைக் குழுவினால் பாலே குழு குறித்து ரைக்கப்பட்ட தரங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் திணைக்களம் நியதிகளைப் பின்பற்றியது. இப்பணிப்புரைகளின் கீழ் வங்கிகள் பேண வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்ட பொது வான மூலதன. தரங்கள் அவற்றின் மொத்த இடர் நிறையேற்றப்பட்ட சொத்தில் 8 சதவீதமும் ஆகக் குறைந்த திரவ வீதம் குறிப்பிட்ட மொத்தப் பொறுப்புக்களில் 20 சதவீதமும் ஆகும்.

1987 இல் தொழிற்படத் தொடங்கிய வைப்புக் காப்புறுதித் திட்டத்தினை மீளாய்விற்குரிய ஆண்டில், திணைக்களம் தொடர்ந்தும் நிருவகித்தது. இத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 3 பிரதேச கிராமிய வங்கிகளையும் 5 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளடக்கியிருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் ஒவ்வொரு காலாண்டிற்கும் ஒவ்வொரு ரூ. 100 இற்கும் 3.75 சதமாக இருந்தது. 1996 இல் கட்டணமாக இந் நிதியத்திற்கு சேகரிக்கப்பட்ட தொகை ரூ. 1,061,660 ஆக இருந்தது. 1996 திசெம்பர் 31 இல் மொத்த நிதி ரூ. 15,571,710 ஆக இருந்தது.

1979 இல் இலங்கையில் தொழிற்படத் தொடங்கிய இந்தோசுயிஸ் வங்கியின் கிளை அலுவலகத்தை மூடிவிடுவதற்கு நாணயச் சபையின் ஒப்புதலைப் பெற்றது. வரையறுக்கப்

பட்ட அட்டன் நசனல் வங்கி இந்தோசுயிஸ் வங்கியின் சில குறித்துரைக்கப்பட்ட சொத்துக்களையும் அனைத்துப் பொறுப்புக்களையும் பொறுப்பேற்றுக் கொள்ளும் உடன்படிக்கையொன்றை அவ்வங்கியுடன் செய்து கொண்டுள்ளது. வங்கித் தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, இந்தோசுயிஸ் வங்கியினால் அனைத்துக் கடப்பாடுகளும் பொறுப்புக்களும் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனைத் திணைக்களம் உறுதிப்படுத்தியது.

## வங்கித் தொழில் சட்டத்துக்கான திருத்தங்கள்

1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டத்தினால் 1988 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களைத் தொடர்ந்து உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு 1988 ஆம் ஆண்டின் சட்டத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் கீழ் வழங்குவதற்கான பணிப்புரைகளின் வரைவுகளை திணைக்களம் தயாரித்தது. இந்தப் பணிப்புரைகள் இலங்கையின் உரிமம் பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும் சாதாரண சந்தர்ப்பங்களை வழங்குவதற்கான நோக்கத்தைக் கொண்டிருந்ததோடு ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு தொடர்பாக மத்திய வங்கியின் பங்கினை வலுப்படுத்துவதற்கானதாகவும் காணப்பட்டன.

வரையப்பட்ட பணிப்புரைகள் பின்வருவன தொடர்பானதாக இருந்தன.

பிரிவு 17 அ வின் நியதிகளுக்கிணங்க உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பங்குகளில் முதலீடு செய்தல். இப்பிரிவானது பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனிகள் தவிர்ந்த ஏனைய எத்தகைய கம்பனியிலும் பங்குகளைக் கைக்கொள்ளலையும் உடைமையாகக் கொள்ளலையும் கட்டுப்படுத்துகின்றது. பங்குகளின் அத்தகைய கைக்கொள்ளல் அல்லது உடைமையாகக் கொள்ளல் பட்டியலிடப்பட்ட பொதுக் கம்பனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20 சதவீதத்தினை விஞ்சாதவிடத்து பொதுக் கம்பனியொன்றில் பங்குகளை வைத்திருப்பதானது வங்கியின் மூலதன நிதியங்களின் 10 சதவீதத்தினை விஞ்சக்கூடாததோடு அத்தகைய முதலீடுகளின் கூட்டுத் தொகை வங்கியின் மூலதன நிதியங்களின் 30 சதவீதத்தினை விஞ்சக்கூடாதென முன்மொழியப்பட்ட பணிப்புரைகள் குறித்துரைக்கின்றன.

பிரிவு 48 அ வின் நியதிகளின் படி உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அசையாச் சொத்துக்களை கொள்வனவு செய்தலும், கைக்கொள்ளலும் இப்பிரிவானது அசையாச் சொத்துக்களின் கைக்கொள்ளல் மற்றும் அவற்றின் மீது உரிமைகள் என்பன நாணயச் சபையினால் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்ற வரையறையினை விதிக்கின்றது. அத்தகைய வரையறையானது வங்கியின் மூலதன நிதியங்களின் 15 சதவீத கூட்டுத்தொகையினை விஞ்சக்கூடாது என முன்மொழியப்பட்ட பணிப்புரை குறித்துரைக்கின்றது.

மேலே விதிக்கப்பட்ட வரையறைகள் வங்கியின் நிதியங்கள் வங்கியின் முதன்மை வாணிப நடவடிக்கைகளிலிருந்து வெளிச் செல்லாது என்பதை உறுதிப்படுத்தும்.

இதுவரை காலமும் நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 102 இன் நியதிகளின் கீழ் வலுப்படுத்தப்பட்ட போதுமைத் தேவைப்பாடானது 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1988 ஆம் ஆண்டின் வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19 (7) இன் கீழ் வலுப்படுத்தப்படும்.

அறவிடமுடியாக் கடன்களிலிருந்து எழக்கூடிய சில இழப்புக்களுக்கான ஆகக் குறைந்த ஏற்பாடுகளைக் குறித்துரைக்கும் ஐயக் கடன்கள் மற்றும் அறவிடமுடியாக் கடன்கள் தொடர்பாக பொதுவானதும் குறித்துரைக்கப்பட்டதுமான ஏற்பாடுகளைப் பேணுதல். வழிகாட்டிகளின் வடிவில் உரிமம் வழங்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாட்டுத் தேவைப்பாடுகள் இப்பொழுது1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46 அ வின் கீழ் பணிப்புடைய தாக்கப்பட்டுள்ளன.

பிரிவு 46 (1) (இ) யின் கீழ் தனிப்பட்ட கடன்பாட்டாளர் வரையறை, தனிப்பட்ட ஆள் ஒருவருக்கு அவரது அண்மிய உறவினர்களுக்கு மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு நீடிக்கப்

பட்ட வசதிகளின் ஆகக் கூடிய தொகையின் கூட்டுத்தொகை என்பனவற்றுக்கான வரை விலக்கணத்தை உட்படுத்தல். முன்னர் தனிப் பட்ட கடன்பாட்டாளர் வரையறை தனிப்பட்டவர் களுக்கும் அவர்களது அண்மிய உறவினர் களுக்கும் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி போன்ற உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கித் தொழில் நிறுவனங்களின் தொழிற்பாடுகள் 1995 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தின் பிரிவு IX அ வின் நியதி களின்படி மத்திய வங்கியின் ஒழுங்கு முறைப் படுத்தல் அதிகாரத்தின் கீழ் வந்தன, இதனைத் தொடர்ந்து இந்த வங்கிகளும் வங்கி மேற் பார்வைத் திணைக்களத்தின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் கொண்டுவரப்படும். வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தின் இந்தப் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்படவுள்ள ஒழுங்கு விதிகளும் பணிப்புரைகளும் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

## வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள்

நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம் இத்துறையில் நிதியியல் ஆற்றலை மேம்படுத்தல் மற்றும் வைப்பாளர்களின் நன்மை களைப் பாதுகாத்தல் ஆகிய குறிக்கோள் களுடன் வைப்புக்களைப் பொறுப்பேற்கும் நிதிக் கூட்டு நிலையங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்யும் அதன் நடவடிக்கையைத் தொடர்ந்தும் மேற்கொண்டது.

நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவதனை உறுதிப் படுத்துவதற்காக வாராந்தத் திரவச் சொத்துக் களின் கூற்றுக்கள், சொத்துக்களினதும் பொறுப் புக்களினதும் மாதாந்த கூற்றுக்கள், செயற்படாத முற்பணங்களின் காலாண்டுக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டு ஐந்தொகை என்பனவற்றின் அடிப்படையில் முக்கியமாக தலத்திற்கு வெளியேயான கண்காணிப்பினூடாக பதிவு செய்யப்பட்ட 24 நிதிக் கூட்டு நிலையங்களின் மேற்பார்வையையும் ஒழுங்கு முறைப்படுத்த லையும் திணைக்களம் தொடர்ந்து மேற் கொண்டது. கூட்டுநிலையச் சொத்துக்கள், மூலதனப் போதுமை, திரவநிலைமை, இலாபத் தன்மை, உள்ளக அமைப்பு முறை மற்றும் கட்டுப்பாடுகள் என்பனவற்றின் அனைத்தையும் உள்ளடக்கிய மதிப்பீட்டினைக் கொண்ட தலப் பரீட்சிப்புக்களைக் காலத்திற்குக் காலம் திணைக்களம் நடத்தியது.

அட்டவணை 11.5 பதிவு செய்யப்பட்ட 24 நிதிக் கூட்டு நிலையங்களின் ஒன்று திரட்டிய ஐந்தொகைகளை 31.03.95 மற்றும் 31.03.96 இல் உள்ளவாறு காட்டுகின்றது. மொத்தச் சொத்துக் களில் 26.4 சதவீதம் கொண்டதொரு வளர்ச்சி பதிவு செய்யப்பட்டது. இவ்வளர்ச்சி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பகிர்ந்தளிப்பில் காணப்பட்ட சிறிதளவு மாற்றங்களுடன் மாத்திரமே அடையப்பட்டது. வைப்புத்தளம் ரூ. 7.2 பில்லியனிலிருந்து ரூ. 8.8 பில்லியனுக்கு அதிகரித்த வேளையில் முற்பணங்கள் ரூ. 7.8 பில்லியனிலிருந்து ரூ. 10.5 பில்லியனுக்கு அதிகரித்தன. பங்குகளில் காணப்பட்ட முதலீடு களின் வளர்ச்சி குறைவாக இருந்த வேளையில் முற்பணங்கள் 33.4 சதவீதம் கொண்ட வளர்ச்சி யைப் பதிவு செய்தன. மூலதன நிதியங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 11.2 சதவீதமாகவும் ஏனைய பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு 74.1 சதவீதமாகவும் இருந்தது.

வங்கித்தொழில் மற்றும் நிதியியல் துறை களில் ஏற்பட்ட அபிவிருத்திகளைக் கவனத்தில் கொண்ட பின் நாணயச்சபை 1996 ஆம் ஆண்டி லிருந்து நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் கீழ் கூட்டு நிலையமொன்று நிதிக் கூட்டு நிலையமாகப் பதிவு செய்வதற்கு தகுதி பெறுவ தற்குத் தேவைப்படும் செலுத்தப்பட்ட ஆகக் குறைந்த மூலதனம் ரூ. 250 இலட்சமாக இருக்க வேண்டும் என நிர்வாக ரீதியாகத் தீர்மானித் துள்ளது. செலுத்தப்பட்ட மூலதனத்தின் ரூ. 50 இலட்சம் கொண்ட ஆகக் குறைந்த தேவைப் பாட்டினை ரூ. 250 இலட்சத்திற்கு உயர்த்துவ தென்ற நிதிக் கூட்டு நிலையச் சட்டத்திற்கான உத்தேசத் திருத்தத்திற்கு அமைச்சரவை ஒப்புத லளித்துள்ளது. இவ்வேற்பாடு நாணயச் சபைக்கு

மூலதனத் தேவைப்பாட்டினை காலத்திற்குக் காலம் மாற்றுவதற்கான நெகிழ்ச்சித் தன்மையையும் வழங்கும்.

1996 ஒக்தோபரில் மேலும் ஒரு நிதிக் கூட்டு நிலையத்திற்கு பதிவு வழங்கப்பட்டமையினைத் தொடர்ந்து பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை 25 இற்கு அதிகரித்தது.

நிதிக் கூட்டு நிலையங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நாணயச் சபைக்கு கையளிக்கப்பட்ட ஐந்து நிதிக் கூட்டு நிலையங்களின் நிருவாகமும் முகாமைத்துவமும் தொடர்ந்தும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது. 1996 இல் இடருக்கு உள்ளான நலிவுற்ற நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்கான நிவாரணத் திட்டத்தின் கீழ் அத்தகைய இரு கூட்டு நிலையங்களின் வைப்பாளர்களுக்கான நிவாரணக் கொடுப்பனவுகள் ரூ. 120 இலட்சமாக விளங்கின. 1996 வரை இத் திட்டத்தின் கீழ் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூ. 5,728 இலட்சமாகும். நாணயச் சபைக்குக் கையளிக்கப்பட்ட மற்றொரு நிதிக் கூட்டு நிலையத்தின் வைப்பாளர்களுக்கு இவ்வாண்டில முதிர்ச்சியடைந்த வைப்புக்களையும் வட்டியையும் தீர்ப்பனவு செய்ததன் மூலம் ரூ. 99 இலட்சம் மீளச் செலுத்தப்பட்டது. நிவாரணக் கொடுப்பனவுகள் முற்றுப் பெற்றுள்ளன. கையளிக்கப்பட்ட ஏவைய நான்கு நிதிக் கூட்டு நிலையங்களை ஒடுக்கிவிடுபவராக ஒரு கணக்காய்வு நிறுவனம் நியமிக்கப்பட்டது.

நிதிக்கூட்டு நிலையமொன்று தனது அசையாச் சொத்துக்களை அகற்றி அதிலிருந்து பெறும் விற்பனைத் தொகையைக் கூட்டு நிலையத்தின் வைப்புப் பொறுப்புக்களுக்கான கொடுப்பனவாகச் சமமான முறையில் கொடுப்பனவு செய்வதற்கேதுவாக நம்பிக்கை நிதியம் ஒன்றினை உருவாக்குவதற்கு இணங்கிக் கொண்டமையை நாணயச் சபையின் ஒப்புதலுடன் திணைக்களம் உறுதிப்படுத்தியது.

நிதிக் கூட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கும் மாறாக நடந்து கொண்டமைக்காகவும் சில சந்தர்ப்பங்களில் கம்பனியின் நிதியை பிழையாகக் கையாண்டமைக்காகவும் பணிப்பாளர்களுக்கும் மற்றைய அலுவலர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் பொலிஸ் திணைக்களத்துடனும் திணைக்களம் தொடர்ந்தும் ஒருங்கிணைந்து கடமையாற்றியது. இவ்வாண்டுக் காலத்தில் திணைக்களம் தவறிழைத்த நிதிக்கூட்டு நிலையமொன்றின் பணிப்பாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் எதிராக தீர்ப்பொன்றினைப் பெற்றுக் கொண்டதுடன் அவர்களுக்கு சிறைத் தண்டனையும் கணிசமான அபராதமும் விதிக்கப்பட்டது. நிதிக் கூட்டு நிலையங்களின் பணிப்பாளர்களுக்கு இது வரை நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட மிகக் கடுமையாகாத தண்டனையாக இது உள்ளதுடன் இது போன்ற குற்றங்களை மேற்கொள்வதன் மீது கடுமையான தாக்கத்தினையும் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

நிதியியல் குத்தகையைப் பொறுத்தவரை, திணைக்களம் நிதியியல் குத்தகைக் கம்பனிகளின் பதிவு மற்றும் மேற்பார்வைக்கு பொறுப்பாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் நிதியியல் குத்தகை வியபாரத்திற்கான நிறுவன ரீதியானதும், ஒழுங்கு முறையானதுமான வரைச் சட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கான சட்டவாக்கம் தற்பொழுது பரிசீலனையின் கீழ் உள்ளது.

## அபிவிருத்தி நிதி

1996 இன் முதலரைப் பகுதியில் அபிவிருத்தி நிதித் திணைக்களம் சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழிலுக்கான கடன் உத்தரவாதத் திட்டங்கள், பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டம், தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் சருவதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவராண்மையின் வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் கட்டம் – IV இற்கான மீள் நிதியிடல் என்பன வற்றின் தொழிற்பாடுகளுக்குத் தொடர்ந்தும் பொறுப்பாக இருந்தது. ஆண்டின் பின்னரைப் பகுதியில், திணைக்களம், பெருந்தோட்டத் துறையின் சீரமைப்பிற்கான புதிய கொடுகடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. பெருந்தோட்ட சீரமைப்பு செயற்றிட்டத்திற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியினால்

கிடைக்கச் செய்யப்பட்ட நிதியினை வழிப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட இக்கொடுகடன் திட்டத்தின் கீழ் ரூ. 4,286 இலட்சம் தொகை கொண்ட பதினைந்து கடன் விண்ணப்பங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டது. திணைக்களம் தொடர்ந்தும் செயற்றிட்டங்களைப் பரிசோதித்ததுடன் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கொடுகடன் உத்தரவாதங்களைக் கொண்ட செயற்றிட்டங்களின் செயலாற்றத்தின் பின் தொடர் வேலைகளையும் மேற்கொண்டது.

## கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகள்

மத்திய வங்கியினால் நிருவகிக்கப்படும் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களான சிறியளவு கைத்தொழில் திட்டம், சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் திட்டங்கள் I, II, III IVமற்றும் பேருந்துக் கொள்வனவுத் திட்டம் என்பனவற்றின் கீழான கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடுகளின் தொகுப்பினை 1996 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டவணை 11.6 தருகின்றது. சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் II, III மற்றும் IV திட்டங்களின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களின் கைத்தொழில் வகைகளின் படியான பகுப்பினை அட்டவணை 11.7 தருகின்றது. பேருந்து கொள்வனவுக் கடன் திட்டத்தின் கீழ் கொடுகடன் உத்தரவாதத் தொழிற்பாடு அட்டவணை 11.8 இல் தொகுக்கப்பட்டுள்ளது.

## சிறிய அளவுக் கைத்தொழில் திட்டம்

1978 – 1979 காலப் பகுதியில் இத்திட்டத்தின் கீழ் 767 கடன்கள் வழங்கப்பட்டன. 1996 இறுதியில் ரூ. 4 இலட்சம் பெறுமதி கொண்ட எட்டுக் கடன்கள் மாத்திரம் மத்திய வங்கிக்கான ரூ. 3 இலட்சங் கொண்ட மொத்த உத்தரவாதக் கடப்பாட்டுடன் வெளிநின்றன.

## சிறிய நடுத்தர அளவு கைத்தொழில் திட்டங்கள்

சிறிய நடுத்தர அளவு கைத்தொழில் திட்டங்கள் I, II, III என்பன முறையே 1979 – 1981, 1982 – 1989, மற்றும் 1988 – 1991 காலப்பகுதியில் தொழிற்பாட்டிலிருந்தன.

1992 மாச்சில் தொடங்கப்பட்ட சிறிய நடுத்தர கைத்தொழில் திட்டம் IV தற்போது தொழிற்படுகின்றது. 1996 இல் மத்திய வங்கி ரூபா 9,739 இலட்சம் கொண்ட 1,029 கடன்களுக்கு உத்தரவாதம் வழங்கியதோடு இதில் இக்கடன்கள் தொடர்பாக மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதப் பொறுப்பு ரூபா 6,744 இலட்சமாகும். இவ்வாண்டில் ரூபா 180 இலட்சம் கொண்ட 72 கடன்கள் முழுமையாகத் தீர்ப்பனவு செய்யப் பட்டன. 1996 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இசைவாக நடந்து கொள்ளாமையின் காரணமாக 238 கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதங்கள் புறக்கீடு செய்யப்பட்டன. சிறிய நடுத்தர கைத்தொழில்கள் திட்டம் IV இன் கீழ் ஆண்டின் இறுதியில் ரூபா 54,336 இலட்சம் கொண்ட மொத்தம் 7,536 கடன்கள் தொழிற்பாட்டில் இருந்தன. இக்கடன்களின் மீதான மொத்த உத்தரவாதப் பொறுப்பு ரூபா 25,406 இலட்சமாகும். 1996 இறுதியில் ரூபா 703 இலட்சத்தினைக் கொண்ட 120 உரிமை கோரல்கள் மத்திய வங்கியினால் பெறப்பட்டதுடன் இவற்றில் ரூபா 84 இலட்சம் கொண்ட 30 உரிமை கோரல்கள் தீர்பனவு செய்யப்பட்டன. 1996 இறுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த உத்தரவாக் கட்டுப்பணம் ரூபா 1,049 இலட்சமாக விளங்கிய வேளையில் உரிமை கோரலுக்குப் பின்னான மொத்த மீட்புக்கள் ரூபா 21 இலட்சமாக விளங்கின.

## பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டம்

பொதுப் போக்குவரத்துக்கான பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக தனியார் பேருந்து தொழிற்பாட்டாளர்களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கடன்களை வழங்குவதற்கு உதவும் விதத்தில் 1990 நவெம்பரில் இத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டது. கடன்கள் தேசிய அபிவிருத்தி வங்கியினால் மீள் நிதியிடப்பட்ட வேளையில் கடன் உத்தரவாதங்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் தொழிற்பாடு 1992 இல் நிறுத்தப்பட்டமைக்கு தேசிய அபிவிருத்தி வங்கிக்கு மீள் நிதியிடுவதற்கு கிடைக்கத் தக்கதாகவிருந்த நிதி அந்நாளில்

## அட்டவணை II.5

## தொழிற்படும் நிதிக் கூட்டு நிலையங்களின் ஒன்று திரட்டிய ஐந்தொகை

ரூபா.000

| வகை | 31.03.95 இறுதியில் ரூபா 000 | % | 31.03.96 இறுதியில் ரூபா 000 | % | மாற்றம் % |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | | |
| 1. **மூலதன நிதியங்கள்** | | | | | |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் | 382,586 | | 385,776 | | |
| பங்குக் கட்டணம் | 223,045 | | 204,951 | | |
| மூலதன ஒதுக்கு | 488,948 | | 491,302 | | |
| பொது ஒதுக்கு | 453,099 | | 612,309 | | |
| ஒதுக்கு நிதியம் | 245,588 | | 308,103 | | |
| ஏனைய ஒதுக்குகள் | 165,219 | | 116,508 | | |
| இலாப நட்டக் கணக்கு | 65,351 | | 109,841 | | |
| மொத்த மூலதன நிதியங்கள் | 2,023,834 | | 2,228,790 | | |
| கழிக்க : பிற்போடப்பட்டசெலவுகள் | 28,445 | | 8,885 | | |
| தேறிய மூலதன நிதியங்கள் | 1,995,389 | 16.1 | 2,219,905 | 14.2 | 11.2 |
| 2. அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கு | 855,155 | 6.9 | 1,026,748 | 6.6 | 20.1 |
| 3. பொதுமக்களின் வைப்புக்கள் | 7,185,813 | 58.1 | 8,792,970 | 56.3 | 22.3 |
| 4. **கடன்பாடுகள்** | | | | | |
| வங்கி மேலதிகப் பற்று | 823,067 | | 375,306 | | |
| ஏனையவை | 152,073 | | 867,230 | | |
| மொத்தக் கடன்பாடுகள் | 975,140 | 7.9 | 1,242,536 | 8.0 | 27.4 |
| 5. எனைய பொறுப்புக்கள் | 1,347,041 | 10.9 | 2,345,566 | 15.0 | 74.1 |
| முழு மொத்தம் | 12,358,538 | 100.0 | 15,627,725 | 100.0 | 26.4 |
| **சொத்துக்கள்** | | | | | |
| 1. **திரவச் சொத்துக்கள்** | | | | | |
| காசும் வங்கிகளிலிருந்து வரவேண்டியவையும் | 194,052 | | 241,077 | | |
| நிலையான வைப்புக்கள் | 367,748 | | 408,723 | | |
| திறைசேரி உண்டியல்கள் | 790,727 | | 950,781 | | |
| மொத்த திரவச் சொத்துக்கள் | 1,352,527 | 10.9 | 1,600,581 | 10.2 | 18.3 |
| 2. **முதலீடுகள்** | | | | | |
| துணை மற்றும் கூட்டிலுள்ள கம்பனிகளின் பங்குகள் | 124,114 | | 236,442 | | |
| தொடர்புடைய கம்பனிகளின் பங்குகள் | 632,385 | | 451,845 | | |
| பங்குகளின் நீண்டகால முதலீடுகள் | 156,863 | | 145,903 | | |
| பங்குகளில் வர்த்தக முதலீடுகள் | 112,660 | | 210,454 | | |
| தொகுதிக் கடன்கள் | 200 | | 500 | | |
| மொத்த முதலீடுகள் | 1,026,222 | 8.3 | 1,045,144 | 6.7 | 1.8 |
| 3. **முற்பணங்கள்** | | | | | |
| கடன்கள் | 606,773 | | 1,004,995 | | |
| வாடகைக் கொள்வனவுகள் | 2,197,391 | | 2,682,906 | | |
| குத்தகை | 4,022,397 | | 5,878,933 | | |
| உண்மைச் சொத்துக்கள் | 395,965 | | 644,567 | | |
| ஏனைய முற்பணங்கள் | 626,186 | | 262,204 | | |
| மொத்த முற்பணங்கள் | 7,848,712 | 63.5 | 10,473,605 | 67.0 | 33.4 |
| 4. **நிலையான சொத்துக்கள்** | | | | | |
| இறையில் காணியும் கட்டடங்களும் | 818,695 | | 860,711 | | |
| தளபாடங்கள், பொருத்துக்கள் | 84,870 | | 48,916 | | |
| ஏனைய கருவிகள் | 39,234 | | 108,210 | | |
| உந்து ஊர்திகள் | 102,286 | | 117,177 | | |
| பொறிகள் | 44,130 | | 19,230 | | |
| குத்தகைச் சொத்துக்கள் | 7,138 | | 9,768 | | |
| ஏனையவை | 8,800 | | 25,610 | | |
| மொத்த நிலையான சொத்துக்கள் | 1,105,153 | 8.9 | 1,189,622 | 7.6 | 7.6 |
| 5. ஏனைய சொத்துக்கள் | 1,025,924 | 8.3 | 1,318,773 | 8.4 | 28.5 |
| முழு மொத்தம் | 12,358,538 | 100.0 | 15,627,725 | 100.0 | 26.4 |
| அறியத்தந்த கூட்டு நிலையங்கள் | 24 | | 24 | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை II.6

## மத்திய வங்கிக் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் தொகுப்பு

| | விடயம் (திட்டங்களும் ஆண்டுகளும்) | சிறிய அளவுக் கைத்தொழில்கள் (சி. அ. கை) 1996 | | சிறிய நடுத்தர அளவுக் கைத் தொழில்கள் I 1996 | |
|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1. | வழங்கப்பட்ட கடன்கள் (ஆ) | 767 | 31.2 | 1,670 | 286.1 |
| 1.2 | உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் (ஆ) | 767 | 23.4 (ஈ) | 1,670 | 157.5 (ஈ) |
| 2.1 | முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் (ஆ) | 598 | 23.1 | 1,230 | 183.9 |
| 2.2 | புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் (ஆ) | 90 | 4.9 | 113 | 31.4 |
| 3.1 | பெறப்பட்ட மொத்தக் கோரல்கள்(ஆ) | 88 | 4.3 (ஒ) | 338 | 75.9 (ஒ) |
| 3.2 | தீர்க்கப்பட்ட கோரல்கள் | | 2.4 | | 33.9 |
| | முழுமையாகத் தீர்க்கப்பட்டவை | 63 | 1.7 | 231 | 19.2 |
| | பகுதியளவில் தீர்க்கப்பட்டவை | 01 | 0.0 (ஒ) | 27 | 2.1 |
| | நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | 07 | 0.2 | 32 | 6.9 |
| | கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்டபின் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் | 16 | 0.2 | 37 | 2.0 |
| | 3.3.5 பிற்போடப்பட்ட கோரல்கள் (க) | 01 | 0.3 | 6 | 2.1 |
| | 3.3.6 முடிவுறாக் கோரல்கள் (க) | - | - | 3 | 0.5 |
| | 3.3.7 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் (க) | - | - | - | - |
| 4.1 | வெளிநிற்கும் கடன்கள் (ங) | 08 | 0.4 | 40 | 4.6 |
| 4.2 | நிலுவையில் உள்ளவை (ஆ) | 08 | 0.4 | 40 | 4.6 |
| 4.3 | வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | 08 | 0.3 (ஈ) | 40 | 2.9 (ஈ) |
| 5. | கட்டணச் சேகரிப்புக்கள் (ஆ) | - | 1.0 | - | 12.2 |
| 6. | கோரலுக்குப் பிந்திய மீட்புக்கள் (ஆ) | - | 0.6 | - | 10.4 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) இது நாள் வரை

(இ) தேசிய அபிவிருத்தி வங்கியால் சிறிய நடுத்தர அளவு கைத்தொழில்கள் iv ற்கு மாற்றப்பட்ட கடன்கள தவிர்ந்த.

(ஈ) வெளிநிற்கும் கடன்களில் 75 சதவீதம்.

(உ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 400,000/- வரையறைக்குட்பட்டு, வெளி நின்ற கடன்களில் 60 சதவீதம்.

(ஊ) ரூ. 200,000 வரையான கடன்களைப் பொறுத்த வரை ஆகக்கூடியது ரூ. 800,000 இற்கும், ரூ. 2,000,000 தொடக்கம் ரூ.4,000,000 வரையான கடன்களுக்கு ஆகக் கூடியது ரூ. 1,200,000 இற்கும் உட்பட்டு, வெளிநின்ற கடன்களில் 60 சதவீதம்.

(எ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக் கூடியது ரூ. 1,600,000 இற்கு உட்பட்டு ரூ. 2,000,000 வரை, ரூ. 2,000,000 தொடக்கம் ரூ. 3,000,000, ரூ. 3,000,000 தொடக்கம் ரூ. 4,000,000 வரையான கடன்களுக்கு முறையே 80 சதவீதம், 60 சதவீதம், 40 சதவீதம்.

1996 திசெம்பர் இறுதியில் உள்ளவாறு

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை) | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் II | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் III | | | | சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் IV | | | |
| 1995 | | 1996 | | 1995 | | 1996 | | 1995 | | 1996 | |
| எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 2,531 | 1,392.5 | 2,531 | 1,392.5 | 3,130 | 1,955.6 (இ) | 3,130 | 1,955.6 | 7,382 | 6,056.8 | 8,411 | 7,330.7 |
| 2,531 | 713.6 (ஊ) | 2,531 | 713.6 (ஊ) | 3,130 | 1,312.6 (எ) | 3,130 | 1,312.6 | 7,382 | 4,176.7 | 8,411 | 4,853.1 |
| 1,564 | 702.2 | 1,584 | 709.4 | 1,339 | 607.8 | 1,356 | 611.3 | 542 | 264.3 | 614 | 282.3 |
| 353 | 168.0 | 353 | 168.0 | 280 | 212.6 | 280 | 212.6 | 238 | 145.0 | 238 | 145.0 |
| 226 | 70.0 | 226 | 70.0 | 146 | 50.7 | 157 | 62.3 | 87 | 53.0 | 120 | 70.3 |
| - | 58.6 | - | 58.6 | - | 35.5 | - | 42.5 | - | 42.4 | - | 56.0 |
| 125 | 30.6 | 126 | 31.7 | 83 | 22.9 | 85 | 23.2 | 26 | 7.0 | 30 | 8.4 |
| 4 | 0.7 | 4 | 0.7 | | | | | | | | |
| 45 | 1107 | 45 | 11.7 | 41 | 12.1 | 41 | 12.1 | 23 | 10.5 | 29 | 12.9 |
| 5 | 1.1 | 5 | 1.1 | 1 | 1.6 | 1 | 1.6 | 1 | 0.5 | 1 | 0.5 |
| 26 | 8.2 | 26 | 8.2 | 4 | 4.6 | 5 | 4.5 | 2 | 1.6 | 2 | 1.6 |
| 14 | 4.4 | 13 | 3.5 | 13 | 3.7 | 21 | 9.3 | 34 | 28.9 | 57 | 35.6 |
| 2 | 3.6 | 4 | 3.6 | 4 | 2.5 | 1 | 1.5 | 1 | 1.5 | | |
| 440 | 110.7 | 420 | 107.9 | 1,387 | 433.7 | 1,370 | 430.2 | 6,553 | 3,747.7 | 7,536 | 5,433.6 |
| 325 | 86.7 | 162 | 43.2 | 621 | 143.2 | 374 | 115.7 | 1,339 | 43.7 | 1,339 | 43.7 |
| 440 | 66.4 (ஊ) | 420 | 64.7 | 1,387 | 280.7 | 1,370 | 278.7 | 6,553 | 2,588.3 | 7,536 | 2,540.6 |
| - | 29.4 | - | 29.6 | - | 42.5 | - | 43.4 | - | 84.9 | - | 104.9 |
| 16.2 (ச) | - | 16.3 | - | 10.1 (ச) | - | 12.2 | - | 1.1 (ச) | - | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(ஏ) செயற்றிட்டமொன்றிற்கு ஆகக் கூடியது ரூ. 16 இலட்சம் என்பதற்குட்பட்டு ரூ. 5 இலட்சம் வரை, ரூ. 5 இலட்சம் - ரூ 10 இலட்சம், ரூ 10 இலட்சம் - ரூ. 20 இலட்சம், ரூ 20 இலட்சம் - ரூ. 80 இலட்சம் என்பனவற்றிற்கு முறையே 90%, 80%, 70%, 60%.

(ஒ) ஒன்று சேர்ந்த வட்டியையும் உள்ளடக்கிய செலுத்தப்படாத தொகை.

(ஓ) ரூ. 4,554.75 தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது.

(ஔ) 2.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(க) 4.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ங) மீளப் பெறப்பட்ட தவணைப்பணத்தை உள்ளடக்காது.

(ச) திருத்தப்பட்டது

முற்றாக முடிவடைந்தமையே காரண மாகும். பேருந்துக் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் ரூ. 8,712 இலட்சம் உத்தரவாதப் பொறுப்புக் களுடன் ரூ. 10,986 இலட்சம் பெறுமதி கொண்ட 1932 கடன்கள் வழங்கப்பட்டன.

பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் கீழ் நாட்டின் போக்குவரத்துத் தொகுதிக்கு 11,911 புதிய பேருந்துகள் அறிமுகப்படுத்தப் பட்டன. இத்திட்டத்தில் கவனிக்கப்பட்ட முக்கிய பண்பு யாதெனில் உடைமையாளர் தொழிற் படுத்தும் பேருந்து போக்குவரத்துக்கு உயர்ந்தளவு விகிதமான பணம் நிதியிடப்பட்டமையேயாகும்.

1996 இறுதியில், ரூ. 5,791 இலட்சம் பெறுமதி கொண்ட 1,040 பேருந்துக் கொள்வனவுக் கடன்கள் முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட வேளையில் ரூ. 692 இலட்சம் பெறுமதி கொண்ட 117 கடன்களின் உத்தரவாதங்கள் மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி ஒழுகாமையின் காரணமாக புறக்கீடு செய்யப்பட்டன. 1996 திசெம்பர் இறுதியில் பேருந்துக் கொள்வனவுக் கடன்கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழான மத்திய வங்கியின் மொத்தப் பொறுப்பு ரூ. 1,075 இலட்சமாக இருந்தது.

1996 இல் பேருந்துக் கொள்வனவுக் கடன் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் ரூ. 69 இலட்சம் உத்தரவாதப் பொறுப்புக்களைக் கொண்ட 18 உரிமை கோரல்களை மத்திய வங்கி பெற்றது. இக்கோரல்களில் 11 உரிமை கோரல்கள் 50 சதவீத இடைக்காலத் தீர்ப்பன விற்கு தகுதி பெற்றிருந்தமையின் காரணமாக அவற்றிற்கு ரூ. 25 இலட்சம் கொண்ட தொகை செலுத்தப்பட்டது. 1996 இறுதியில் ரூ. 25 இலட்சம் கொண்ட 3 கோரல்களின் புலனாய்வு முடிவுறாதிருந்த வேளையில் மத்திய வங்கி யினால் இவ்வாண்டில் ரூ. 10 இலட்சம் பெறுமதி கொண்ட 2 உரிமை கோரல்கள் நிராகரிக்கப் பட்டன. 1996 வரையில் கொடுகடன் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட மொத்தக் கட்டுப்பணம்

### அட்டவணை II.7

### சிநகை -II, சிநகை -III, சிநகை -IV இன் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்கள்
### கைத்தொழில் வகைப்படியான பகுப்பாய்வு
### 1996 இறுதியில் உள்ளவாறு

| கைத்தொழில் | சிறிய நடுத்தரக் கைத்தொழில் II,III,IV | | | | | | சிறிய நடுத்தரக் கைத்தொழில் IV(1996) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வழங்கப் பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை (ரூ.ப.இ.) | % | உத்தரவாத மளிக்கப் பட்ட தொகை (ரூ.ப.இ.) | % | வழங்கப் பட்ட கடன்களின் எண்ணிக்கை | % | கடன் தொகை (ரூ.ப.இ.) | % | உத்தரவாத மளிக்கப் பட்ட தொகை (ரூ.ப.இ.) | % |
| உணவு பதனிடல் | 2,927 | 20.8 | 1,985.5 | 19.1 | 1,275.9 | 18.6 | 191 | 18.56 | 160.5 | 16.3 | 111.7 | 16.5 |
| ஏனைய வேளாண்மைக் கைத்தொழில் | 277 | 2.0 | 129.0 | 1.2 | 87.8 | 1.3 | 11 | 1.1 | 4.1 | 0.4 | 3.3 | 0.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 270 | 1.9 | 289.6 | 2.8 | 177.3 | 3. | 17 | 1.7 | 20.1 | 2.0 | 13.4 | 2.0 |
| உலோக உற்பத்திகள் | 1,217 | 8.6 | 650.4 | 6.3 | 441.5 | 6.4 | 144 | 13.9 | 66.9 | 6.8 | 50.2 | 7.4 |
| கட்டவாக்கப் பொருட்கள் | 842 | 6.0 | 518.3 | 5.0 | 361.3 | 5.3 | 54 | 5.3 | 46.6 | 4.8 | 33.5 | 4.9 |
| கட்டவாக்க ஒப்பந்தம் | 233 | 1.7 | 411.1 | 3.9 | 260.5 | 3.8 | 45 | 4.4 | 111.5 | 11.4 | 68.9 | 10.2 |
| மர உற்பத்திகள் | 815 | 5.8 | 409.9 | 3.9 | 286.6 | 4.2 | 50 | 4.9 | 32.2 | 3.3 | 23.8 | 3.5 |
| ஆடைகள் | 805 | 5.7 | 716.8 | 6.9 | 459.0 | 6.7 | 26 | 2.5 | 23.7 | 2.4 | 16.1 | 2.4 |
| புடவைகள் | 292 | 2.1 | 296.7 | 2.9 | 188.9 | 2.8 | 9 | 0.9 | 8.5 | 0.9 | 5.4 | 0.8 |
| தொழிற்கூடத்திருத்தல் | 505 | 3.6 | 285.2 | 2.8 | 199.7 | 2.9 | 41 | 3.9 | 41.7 | 4.2 | 28.4 | 4.2 |
| ஏனையவை (அ) | 5,889 | 41.9 | 4695.3 | 45.2 | 3,140.1 | 45.7 | 441 | 42.8 | 467.1 | 47.5 | 321.7 | 47.6 |
| மொத்தம் | 14,072 | 100.0 | 10,387.8 | 100.0 | 6,879.3 | 100.0 | 1029 | 100.0 | 982.9 | 100.0 | 676.4 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) பயணிகள் மற்றும் வர்த்தகப் போக்குவரத்து, தோல், விலங்கு வளர்ப்பு, இரசாயனம், மீன்பிடி, உணவுகள், கண்ணாடி இழை, மின்னியக்கம், மட்பாண்டம், பொலித்தீன் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

## அட்டவணை II.8

### பேருந்துக் கொள்வனவுக் கடன் திட்டத்தின் தொகுப்பு

(பெறுமதி ப . இ. ரூபாய்களில்)

| விடயம் | ஆண்டு இறுதியில் உள்ளவாறு | | | |
|---|---|---|---|---|
| | 1995 | | 1996 (அ) | |
| | எண்ணிக்கை | பெறுமதி | எண்ணிக்கை | பெறுமதி |
| 1.1 வழங்கப்பட்ட கடன்கள் | 1,932 | 1,098.6 | 1,932 | 1098.6 |
| 1.2 உத்தரவாதமளிக்கப்பட்ட கடன்கள் | 1,932 | 871.2 (ஆ) | 1,932 | 871.2 (ஆ) |
| 2.1 முழுமையாக மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் | 596 | 325.1 | 1,040 | 579.1 |
| 2.2 புறக்கீடு செய்யப்பட்ட அல்லது காலாவதியான உத்தரவாதங்கள் | 117 | 69.2 | 117 | 69.2 |
| 3.1 பெறப்பட்ட மொத்தக் கோரல்கள் | 18 | 9.8 (ஆ) | 18 | 9.8 |
| 3.2 மத்திய வங்கிப் பொறுப்பு | -- | 6.9 | -- | 6.9 |
| 3.3 கோரல்களின் தீர்ப்பனவு | | | | |
| 3.3.1 பகுதியளவில் தீர்க்கப்பட்டவை | 9 | 2.1 | 11 | 2.5 |
| 3.3.2 நிராகரிக்கப்பட்ட கோரல்கள் | 2 | 1.0 | 2 | 1.0 |
| 3.3.3 பின்போடப்பட்ட கோரல்கள் (உ) | – | – | – | – |
| 3.3.4 முடிவுறாக் கோரல்கள் (உ) | 5 | 2.8 | 3 | 2.5 |
| 3.3.5 புறக்கீடு செய்யப்பட்ட கோரல்கள் | 1 | 0.2 | 1 | 0.2 |
| 3.3.6 கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முழுமையாகச் செலுத்தப்பட்ட கடன்கள் (ஊ) | 1 | 0.4 | 1 | 0.4 |
| 4.1 வெளிநின்ற கடன்கள் | 1,208 | 218.4 (ஈ) | 745 | 164.4 |
| 4.2 வெளிநின்ற உத்தரவாதங்கள் மீதான மத்திய வங்கியின் பொறுப்பு | 1,208 | 171.8 (அ) | 745 | 107.5 |
| 5. சேகரிக்கப்பட்ட கட்டணம் | -- | 21.2 | -- | 21.8 |
| 6. கோரலுக்குப் பிந்திய மீளளிப்புகள் | -- | 0.7 (எ) | -- | 1.3 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) செயற்றிட்டம் ஒன்றுக்கு ஆகக் கூடியது ரூ. 16 இலட்சத்திற்கு உட்பட்டு ரூ. 20 இலட்சம் வரை. ரூ. 20 இலட்சம் – ரூ. 30 இலட்சம். ரூ 30 இலட்சம் – ரூ. 40 இலட்சம் என்பனவற்றுக்கு முறையே 80%, 60%, 40%.

(ஆ) ஒன்று சேர்ந்த வட்டி உட்பட செலுத்தத் தவறிய தொகை.

(இ) முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளது என்பதற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 3.9 இலட்சம் கொண்ட இரண்டுவிடயங்கள் இப்பொழுது பகுதியளவு செலுத்தப்பட்டது என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) மீட்கப்பட்ட தவணைப் பணங்கள் நீங்கலாக.

(ஊ) 4.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஊ) 2.1 இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(எ) திருத்தியமைக்கப்பட்ட எண் தொகை.

ரூ. 218 இலட்சமாக விளங்கிய வேளையில் கோரலுக்குப் பின்னரான மீட்புக்கள் ரூ. 13 இலட்சமாக விளங்கின. அட்டவணை 11.8 திட்டத்தின் செயலாற்றத்தினைத் தொகுத்துத் தருகின்றது.

## வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் கட்டம் - IV

1992 யூலையில் தொடங்கிய வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிடநிகழ்ச்சித் திட்டம் கட்டம் IV இற்கான மீள் நிதியிடல் திட்டம் 1996 இலும் தொடர்ந்துதொழிற்பாட்டிலிருந்தது. இத்திட்டத்தின் கீழ் மத்திய வங்கி உச்சக் கடன் வழங்குநராகத் தொழிற்படுவதனால் அது ஐக்கிய நாடுகளின் அரச வீடமைப்புக் கடன் உத்தரவாத நிகழ்ச்சித் திட்டம் கட்டம் IV இன் கீழ் அரசிற்குக் கடனாக வாங்கப்பட்ட நிதியத்திலிருந்து மீள்நிதியிடல் வசதிகளை வழங்குகின்றது. வீடமைப்பு உத்தரவாதக் குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியுடன் உடன்பாடுகளைச் செய்து கொண்டுள்ள துணை உச்சக் கடன் வழங்குனர்கள் என குறித்துரைக்கப்பட்ட பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு இந்நிதியங்கள் கிடைக்கச் செய்யப்பட்டன. தற்பொழுது இத்திட்டத்தின் கீழ் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, அரசு ஈட்டு முதலீட்டு வங்கி, வரையறுக்கப்பட்ட செலான் வங்கி, வரையறுக்கப் பட்ட இலங்கை வர்த்தக வங்கி, வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் மற்றும் குருநாகல், கண்டி, கேகாலை, புத்தளம், காலி, பதுளை, கம்பகா, மாத்தளை, மாத்தறை ஆகியவற்றின் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் என்பன துணை உச்சக் கடன் வழங்குனராகப் பங்கேற்றுள்ளன. 1995 ஒக்தோபரில் அம்பாந்தோட்டை, களுத்துறை, இரத்தினபுரி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களின் நான்கு பி. கி. அ. வங்கிகளும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பதற்கு உடன்படிக்கையில் கையெழுத் திட்டன. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை இலங்கை வங்கியினூடாக இத்திட்டத்தில் பங்கேற்றது.

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீடமைத்தலுக்கான காணியைக் கொள்வனவு செய்தல் எற்கனவேயுள்ள வீடுகளைப் பெருப்பித்தல் / முன்னேற்றுதல் மற்றும் புதுப்பித்தல் என்பன உட்பட வீட்டின் கட்டுமானத்திற்காக கடன்கள் வழங்கப்படுகின்றன. ரூ. 5,700 அல்லது அதற்குக் குறைவான மாதாந்த வருமானத்தைப் பெறும் குடியிருப்பாளர்கள் இத்திட்டத்தின் கீழ் கடன்பெற உரித்துடையராவர்.

அட்டவணை II.9

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV
மீள் நிதியிடல் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புகளும்

(ரூபா ப.இ)

| துணை உச்சக் கடன் வழங்குநர் | 1992 - 1996 | |
|---|---|---|
| | ஒப்புதலளிக்கப் பட்ட | பகிர்ந்தளிக்கப் பட்ட |
| இலங்கை வங்கி | 350.0 | 312.5 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி | 1.8 | 1.1 |
| வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி | 5.3 | 4.7 |
| வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | 223.6 | 85.3 |
| மக்கள் வங்கி | 262.3 | 179.3 |
| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | 80.1 | 33.0 |
| வரையறுக்கப்பட்ட செலான் வங்கி | 4.5 | 2.4 |
| அரச ஈட்டு முதலீட்டு வங்கி | 67.9 | 19.0 |
| மொத்தம் | 995.5 | 637.3 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

1994 வரை வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் நிதியமைச்சினால் வழங்கப்பட்ட ரூ. 1,500 இலட்சம் முற்பணத்தைப் பயன்படுத்தி நடைமுறைப் படுத்தப்பட்டது. 1994 ஒக்தோபரில் ஐக்கிய நாடுகள் உதவி வீடமைப்பு உத்தரவாத உடன்படிக்கையின் கீழ் ஐ. அ. டொலர் 250 இலட்சங் கொண்ட கடனின் முதல் தொகுதியான ஐ. அ. டொலர் 100 இலட்சம் (ரூ. 4,873 இலட்சம்) கொண்ட தொகை இத்திட்டத்திற்கு கிடைக்கச்

செய்யப்பட்டது. மேலும், 1995 யூனில் இச்செயற் திட்டத்திற்காக நிதியமைச்சினால் ரூ. 1,500 இலட்சம் கொண்ட இன்னுமொரு முற்பணம் வழங்கப்பட்டது.

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் IV இன் செயலாற்றம் பற்றிய புள்ளி விபரங்கள் அட்டவணைகள் 4, 5, 6 மற்றும் 7 இல் தரப்பட்டுள்ளன.

1996 இல் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 1,060 இலட்சங் கொண்ட கடன்களுக்கு ஒப்புத லளிக்கப்பட்டது. 1992 இலிருந்து 1996 வரை ஒப்புதலளிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் களின் ஒன்று சேர்ந்த தொகைகள் ரூ. 9,950 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்ட வேளையில் ரூ. 6,570 இலட்சம் பகிர்ந்தளிக்கப்பட்டமையைக் காட்டுகின்றன.

### அட்டவணை II.10

### வீஉகுவபுநி திட்டம் கட்டம் - IV இன் செயலாற்றத்தினது தொகுப்பு நோக்கம், முதிர்ச்சி, அளவின்படி ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள்

(ரூ. '000)

| விடயம் | ஒப்புதல்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 1996 | | | 1992 - 1996 | | |
| | நகரம் | கிராமம் | மொத்தம் | நகரம் | கிராமம் | மொத்தம் |
| 1. கட்டடவாக்கம் | 404 | 8,570 | 8,974 | 55,332 | 350,825 | 406,157 |
| 2. முன்னேற்றங்கள் | 2,665 | 26,614 | 29,279 | 50,432 | 237,424 | 287,856 |
| 3. நிலக் கொள்வனவு | 9,496 | 57,420 | 66,916 | 53,926 | 241,591 | 295,517 |
| 4. உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 35 | 965 | 1,000 | 582 | 5,385 | 5,967 |
| மொத்தம் | 12,600 | 93,569 | 106,169 | 160,272 | 835,225 | 995,497 |
| முதிர்ச்சியின்படி கடன்கள் | | | | | | |
| 5 ஆண்டுகளுக்குக் குறைவானவை | 3,277 | 34,576 | 37,853 | 49,395 | 350,898 | 400,293 |
| 6 - 10 ஆண்டுகள் | 1,667 | 5,521 | 67,188 | 45,100 | 219,063 | 264,163 |
| 11 - 15 ஆண்டுகள் | 7,656 | 53,472 | 61,128 | 65,478 | 264,105 | 329,583 |
| 16 - 20 ஆண்டுகள் | 0 | 0 | 0 | 289 | 1,159 | 1,458 |
| மொத்தம் | 12,600 | 93,569 | 106,169 | 160,272 | 835,225 | 995,497 |
| கடன்களின் அளவு ரூபா | | | | | | |
| 0 - 2,500 | - | - | 0 | 122 | 8,496 | 9,618 |
| 2,501 - 5,000 | - | 25 | 25 | 3,231 | 32,873 | 36,104 |
| 5,001 - 7,500 | 6 | 73 | 79 | 5,164 | 60,734 | 65,999 |
| 7,500 - 10,000 | 288 | 885 | 1,183 | 13,957 | 156,968 | 170,995 |
| 10,001 - 15,000 | 639 | 2,046 | 2,685 | 46,795 | 60,817 | 107,612 |
| 15,001 - 20,000 | 816 | 2,289 | 3,105 | 11,860 | 42,970 | 54,330 |
| 20,001 - 25,000 | 894 | 7,921 | 8,815 | 14,783 | 70,932 | 85,715 |
| 25,001 - 30,000 | 239 | 1,859 | 2,098 | 3,043 | 24,944 | 27,987 |
| 30,001 - 35,000 | 136 | 1,977 | 2,118 | 2,735 | 18,421 | 21,156 |
| 35,001 - 40,000 | 310 | 2,340 | 2,650 | 4,005 | 24,209 | 28,214 |
| 40,001 - 45,000 | 210 | 952 | 1,162 | 8,345 | 12,163 | 15,508 |
| 45,001 - 50,000 | 548 | 19,354 | 19,902 | 10,728 | 111,956 | 122,684 |
| 50,001 - 100,000 | 5,546 | 27,779 | 33,325 | 35,071 | 153,526 | 188,597 |
| 100,000 - | 2,958 | 26,069 | 29,027 | 5,933 | 55,216 | 61,149 |
| மொத்தம் | 12,600 | 93,569 | 106,169 | 160,272 | 835,225 | 995,497 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இத்திட்டத்தின் கீழ் கடன் பெற்றோரில் பெருமளவு விகிதத்தினர் கிராமியத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இதனால் 1995 இன் ஒப்புதல்கள் 89 சதவீதமும், 1996 இற்கான ஒப்புதல்களில் 88 சதவீதமும் கிராமியத் துறைக் கானதாக இருந்தது. 1996 இல் பால் அடிப்படையிலான கடன் பெறுநர்களின் பகுப் பானது கடன் பெறுநர்களில், 25 சதவீதத்தினர் கிராமியத் துறைப் பெண்களாக இருந்த வேளையில் 21 சதவீதத்தினர் நகர்ப்புறப் பெண்களாக இருந்தமையை எடுத்துக் காட்டு கின்றது. கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வுகளின்படி 1996 இன் கடன்களில் ஏறத்தாழ 8 சதவீதக் கடன்கள் புதிய வீடுகளின் அமைப்பிற்காகவும், 28 சதவீதம் தற்போதுள்ள வீடுகள் மேம்பாடு அல்லது விரிவாக்கத்திற்கான தாகவும் 63 சதவீதம் வீடமைப்பு நோக்கங்களுக் கான காணிகளின் கொள்வனவுக்கானதாகவும் இருந்தன. காணிகளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட கடன்கள் 1995 இன் 40 சதவீதத் துடன் ஒப்பிடுகையில் 1996 இல் 60 சதவீத அதிகரிப்பினைக் காட்டின.

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் - மக்கள் வங்கி - மற்றும் பி. கி. அ. வங்கிகளினால் ஒப்புத

அட்டவணை II.11

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் IV
மாகாணங்களின்படி கடன் ஒப்புதல்கள்

(ரூபா '000)

| மாகாணம் | 1996 | | 1992 - 1996 | |
|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % |
| 1. மத்திய | 19,535 | 17.5 | 152,803 | 15.3 |
| 2. கிழக்கு | 684 | 0.7 | 21,286 | 2.1 |
| 3. வட மத்திய | 3,035 | 2.9 | 160,243 | 16.1 |
| 4. வட மேற்கு | 21,992 | 20.7 | 111,696 | 11.2 |
| 5. வடக்கு | -- | -- | 4,368 | 0.4 |
| 6. சப்பிரகமுவா | 13,530 | 12.7 | 91,825 | 13.3 |
| 7. தெற்கு | 16,709 | 15.7 | 132,041 | 13.3 |
| 8. ஊவா | 653 | 0.6 | 22,013 | 2.2 |
| 9. மேல் | 31,031 | 29.2 | 299,322 | 30.2 |
| மொத்தம் | 106,109 | 100.0 | 995,497 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

லளிக்கப்பட்ட கடன்களின் விகிதம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1996 இல் கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. 1996 இல் தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபை எந்தவொரு கடனுக்கும் ஒப்புதல் வழங்கவில்லை. இத் திட்டத்தின் கீழான கடன்களின் முதிர்ச்சித் தன்மையானது 36 சதவீதமான கடன்கள் 5 ஆண்டுகள் வரையிலானதாகவும் மேலும் 7 சதவீதக் கடன்கள் 5 - 10 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டனவாகவும் விளங்கிய வேளையில் 57 சதவீதமானவை 10 - 17 ஆண்டுகள் வரையான காலப் பகுதிக்கு வழங்கப்பட்டுள்ள மையை எடுத்துக் காட்டின.

## சிறிய நடுத்தர கைத்தொழில் மற்றும் பேருந்துக் கொள்வனவுக் கடன் உத்தரவாத நிதிய மூலவளங்களின் முதலீடு

திறைசேரி உண்டியல் சந்தையில் சிறிய நடுத்தர கைத்தொழில் மற்றும் பேருந்துக் கொள்வனவுக் கடன் உத்தரவாத நிதியங்களை முதலீடு செய்தல், 1988 யூலையில் தொடங்கிய துடன்1996 இலும் தொடர்ந்தது. 1996 இறுதியில் உத்தரவாத நிதியங்களிலிருந்தான முதலீடுகளின் மொத்தப் பெறுமதியும் கட்டுப்பணச் சேகரிப்புக் களும் ரூ. 10,420 இலட்சமாக விளங்கின. இவ்வாண்டில் முதலீடுகளிலிருந்தான வட்டி வருவாய் ரூ. 1,423 இலட்சமாக இருந்தது.

## தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

தற்போதுள்ள சிறிய கைத்தொழில்களின் தொழில் நுட்பத்தையும் முகாமைத்துவ தேர்ச்சி யினையும் தரமுயர்த்துவதனை நோக்காகக் கொண்ட தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1996 இலும் மாவட்ட மட்டங்களில் தொடர்ந்தும் நடைமுறைப் படுத்தப்பட்டது.

1996 நவெம்பர் 28 இலிருந்து திசெம்பர் 1 ஆம் நாள் வரை பொலனறுவையில் நடத்தப் பட்ட தற்போதுள்ள தொழில் முயற்சியாளர்க ளுக்கான முகாமைத்துவம் மற்றும் தேர்ச்சியைத் தரமுயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டம் புடைவைத் துறையில் மிகுந்த கவனத்தைச் செலுத்தியது. நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்து

அட்டவணை II.12

வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டம்
துறைவகைப்படி / பால்வகைப்படி கடன் ஒப்புதல்கள்

(பெறுமதி '000 ரூபாய்களில்)

| ஆண்டு | மொத்தம் | | கிராமியத்துறை | | | | நகரத்துறை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஆண்கள் | | பெண்கள் | | ஆண்கள் | | பெண்கள் | |
| | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை | எண்ணிக்கை | தொகை |
| 1992 | 4,273 | 27,381 | 2,977 | 19,205 | 1,244 | 7,445 | 39 | 523 | 13 | 208 |
| 1993 | 23,718 | 218,762 | 13,865 | 123,027 | 6,193 | 51,397 | 2,321 | 28,841 | 1,339 | 15,497 |
| 1994 | 22,733 | 338,291 | 13,317 | 195,544 | 5,669 | 73,466 | 2,600 | 50,223 | 1,147 | 19,057 |
| 1995 | 11,960 | 304,894 | 7,511 | 201,022 | 3,154 | 70,548 | 906 | 24,665 | 389 | 8,659 |
| 1996 | 2,136 | 106,169 | 1,397 | 72,121 | 455 | 21,448 | 224 | 10,068 | 60 | 2,532 |
| மொத்தம் | 64,820 | 995,497 | 39,067 | 610,919 | 16,715 | 224,304 | 6,090 | 114,320 | 2,948 | 45,953 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கொண்ட 35 பங்கேற்பாளர்கள் சிறு அளவு முயற்சியாளர் களாகவும் சுய வேலைவாய்ப்பு ஆட்களாகவும் இருந்தனர். இப்பங்கேற்பாளர் களில் சிலர் ஏற்கனவே பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்து கடன் வசதிகளைப் பெற்றிருக்கின்ற வேளையில் மற்றையவர்கள் பி. கி. அ. வங்கிகளிலிருந்தும் வர்த்தக வங்கி களிலிருந்தும் கடன் பெறும் வாய்ப்க்களைக் கொண்டிருந்தனர். இந் நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதற்குத் தேவையான நிதி உலக வங்கியினால் சி. ந. கை. திட்டங்களை உள்ளடக்கிய அதன் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிடைக்கச் செய்யப்பட்டது.

## பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டம்

பெருந்தோட்டச் சீரமைப்புச் செயற்றிட்டத் திற்கு சிஎஉ 408 இலட்சத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக 1996 சனவரி 12ஆம் நாளன்று ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கை அரசுக்கு மிடையே கடன் உடன்படிக்கையொன்று கையெழுத்திடப்பட்டதுடன் இக்கடன் 1996 மே 26ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

கொடுகடன் திட்டத்தின் உச்சக் கடன் வழங்குனர் என்ற வகையில் மத்திய வங்கி 1996 யூலை 31ஆம் நாளன்று கடன் திட்டத்திற்கான வழிமுறைகளைக் கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் சிபீ/டீஎவ் /பீஎஸ் /ஆர்பி - 96 இனை வெளியிட்டது. பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டத்தின் கீழ் தனியார் மயப்படுத்தப்பட்ட பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளும் அவற்றின் துணை நிறுவனங்களும் தகுதி பெற்ற கடன்பாட்டாளர்களாக விளங்கினர்.

அட்டவணை II.13

பெருந்தோட்ட சீராக்கல் செயற்றிட்டம் நோக்கங்களின்படி
ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் - 1996

(ரூபா ப. இ)

| பயன்பாடு | கடன்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப்பட்ட மீள் நிதியீடு (ரூபா) |
|---|---|---|
| மரப்பயிர் அபிவிருத்தி | 5 | 164.5 |
| பதனிடல் முன்னேற்றம் மாசு கட்டுப்பாடு | 5 | 152.0 |
| பணி ஊர்திகளும் கருவிகளும் | 5 | 112.0 |
| மொத்த ஒப்புதல்கள் | 15 | 428.5 |
| மொத்தப் பகிர்ந்தளிப்புகள் | | 57.8 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

சிஎஉ408 இலட்சத்தினைப் பெற்றுக் கொண்ட பெருந்தோட்டச் சீரமைப்பு செயற்றிட்டக் கடன், பிரதேச பெருந்தோட்டக் கம்பனி களுக்கு கடன் அடிப்படையில் சிஎஉ 276 இலட்சத்தினை ஒதுக்கிய வேளையில் மீதித்தொகை மீள் காடாக்கலை மேம்படுத்தல், தொழிலாளர் வாழும் சுற்றாடலை முன்னேற்றல் பெருந் தோட்டத் துறையை நிறுவனப்பகுதியின், வலுவாக்கம், பயிற்சியளித்தல் என்பனவற்றிற்காக கொடையாக வழங்கப்படும். கடன்களின் தீர்ப்பனவுக் காலம் 10 ஆண்டுகள் சலுகைக் காலத்தை உள்ளடக்கி 40 ஆண்டுகளாகும். செயற்றிட்டத்தின் கடன்

கூறிற்கான நிறைவேற்று முகவராக அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினூடாக மத்திய வங்கி தொழிற்படுகின்ற வேளையில் நன்கொடையின் நிறைவேற்று முகவராக பெருந்தோட்டக் கைத் தொழில்கள் அமைச்சு அதன் செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் பிரிவினூடாகத் தொழிற்படுகின்றது.

இச்செயற்றிட்டத்தின் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களாக இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை வங்கி, இலங்கை வர்த்தக வங்கி, அட்டன் நசனல் வங்கி, சம்பத் வங்கி, செலான் வங்கி என்பன விளங்கின. பெருந்தோட்டச் சீரமைப்பு செயற்றிட்டத்தின் கீழ் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கான கடன்கள் ஆகக்கூடிய 5 ஆண்டுச் சலுகைக் காலத்துடன்15 ஆண்டுகள் வரையிலானதாக இருக்கும். இவ்வாண்டில் கடன்களுக்கான ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும் முறையே ரூ. 4,286 இலட்சமாகவும், ரூ. 578 இலட்சமாகவும் விளங்கின. மத்திய வங்கியும் பெருந்தோட்ட சீரமைப்புச் செயற்றிட்டக் கடன்களுக்கான கொடுகடன் உத்தரவாதத்தினை வழங்கியது. இத்திட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்படவுள்ள கொடுகடன் உத்தரவாதங்களின் பரப்பு மரப் பயிர்த் தோட்ட அபிவிருத்தி தொடர்பாக 70 சதவீதத்தினையும் பதனிடல் மேம்பாடு மற்றும்

### அட்டவணை II.14
### பின் தொடர் பரிசோதனைகள் - 1996
### நிலுவையிலுள்ள கடன்கள்

(ரூ. ப. இ.)

| விதந்துரைப்புக்கள் | செயற்றிட்டங்களின் எண்ணிக்கை | செலுத்தத் தவறிய கடன்களின் பெறுமதி (ரூபா) |
|---|---|---|
| 1. கடன்களை மீள்அட்டவணைப்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கண்டறிதல் | 5 | 12.2 |
| 2. கடன் க/கு களை ஒழுங்க முறைப்படுத்தல் | 2 | 2.4 |
| 3. மீளப் பெறப்படவுள்ள உத்தரவாதம் | 1 | 0.6 |
| 4. கடன்களை முழுமையாகச் செலுத்த உடன்பட்ட கடனாளிகள் | 3 | 0.9 |
| 5. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் அழைப்பு அவதானிப்புக்கள் | 2 | 4.5 |
| 6. யோசனை தெரிவிக்கப்பட்ட நெருங்கிய கண்காணிப்புக்கள் | 12 | 10.5 |
| மொத்தம் | 25 | 31.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

### அட்டவணை II.15
### பெறப்பட்ட உத்தரவாத கோரல் பரிசோதனைகள் - 1996.

(ரூ. ப. இ.)

| விதந்துரைப்புக்கள் / விளைவு | எண்ணிக்கை | கடன்தொகை |
|---|---|---|
| 1. நிராகரிக்கப்பட்ட உத்தரவாதக் கோரல்கள் | 7 | 5.0 |
| 2. பரிசீலனையின் கீழ் உள்ள உத்தரவாதக் கோரல் நிராகரிப்புக்கள் | 4 | 1.6 |
| 3. பிற்போடப்பட்ட உத்தரவாதக் கோரல்கள் | 4 | 1.0 |
| 4. இ. ம. வங்கிக்கு உத்தரவாதக் கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்ட கடன்கள் | 3 | 1.6 |
| 5. முற்றாக தீர்ப்பனவு செய்யப்பட்ட உத்தரவாதக்கோரல்கள் | 9 | 2.5 |
| 6. பரிசீலனையின் கீழ் உள்ள உத்தரவாதக் கொடுப்பனவுகள் | 5 | 6.4 |
| 7. முடிவு பெறாத கோரல்கள் | 8 | 9.4 |
| மொத்தம் | 40 | 27.5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

மாசடைதல் கட்டுப்பாடு, பணி ஊர்திகள் மற்றும் கருவிகள் என்பன தொடர்பாக 50 சதவீதத்தினையும் உள்ளடக்கும்.

## செயற்றிட்டங்களைப் பின்தொடர்தலும் பரிசோதித்தலும்

செலுத்தத் தவறிய சிறிய நடுத்தர அளவுக் கைத்தொழில் கடன்கள் மற்றும் உத்தரவாத உரிமை கோரல்களை உள்ளடக்கிய படுகடனின் செயற்றிட்ட பரிசோதனை நிகழ்ச்சித் திட்டம் 1996 இலும் தொடர்ந்தது. தேவையானவிடத்து சரியான நடவடிக்கைகளை விதந்துரைக்கும் பொருட்டும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்படைக்கப்பட்ட உரிமை கோரல்களை தீர்ப்பனவு செய்வதற்குமாக மொத்தம் 65 செயற்றிட்டங்கள் பரிசோதிக்கப்பட்டன.

அட்டவணை 11.15 உம் 11.16 உம் 1996 இல் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டப் பரிசோதனைகளின் அமைப்பினைக் காட்டுகின்றன.

திருத்த நடவடிக்கைகளுக்காக ரூபா 310 இலட்சம் கொண்ட மொத்தம் 25 செயற்திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டதை அட்டவணை11.15 காட்டகின்றது. செயற்திட்ட பரிசீலிப்பின் பின்னர் உத்தரவாத திட்டத்திற்கான மத்திய வங்கியின் தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கு இசைந்து செல்லாமையின் காரணமாக செயற்திட்டமொன்றுக்கு வழங்கப்பட்ட உத்தரவாகம் புறக்கீடு செய்யப்பட்டது. 12 செயற்திட்ங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின அண்மிய அவதானிப்பு விதந்துரைக்கப்பட்ட வேளையில் ஐந்து செயற்றிட்டங்களைப் பொறுத்த வரை மீள் கொடுப்பனவுக் காலத்தினை மீள அட்டவணைப்படுத்தல் விதந்துரைக்கப்பட்டது. செலுத்தத் தவறிய கடன்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வது தொடர்பாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கடன்பாட்டாளர்களுடன் உடன்படிக்கையொன்றிற்கு வர மூன்று செயற்றிட்ட பரிசோதனைகள் உதவின.

1996 இல், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வழங்கப்பட்ட ரூ. 275 இலட்சம் தொகை கொண்ட கடன்களை உள்ளடக்கிய 40 உரிமை கோரல்கள் அவற்றின் ஒப்புதல்களைக் கருத்திற் கொள்வதற்கு முன்னர் மத்திய வங்கியினால் பரிசோதிக்கப்பட்டன. இக் கோரல்களில் ஏழு கோரல்கள் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களின் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை பின்பற்றாமையின் காரணமாக அல்லது முன்மதியுடைய கடன் வழங்கல் நடைமுறை களிலின்றி கடன் வழங்கியமையின் காரணமாக நிராகரிக்கப்பட்டன. மேலும் நான்கு உரிமை கோரல்கள் நிராகரிப்பிற்கான பரிசீலனைகளின் கீழ் உள்ள வேளையில் நான்கு உரிமை கோரல்கள் பிற்போடப்பட்டமைக்கு அத்தகைய உரிமை கோரல்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் செலுத்தத் தவறிய கடன்கள் கடன்பட்டோரினால் மீள ஒழுங்கமைக்கப்பட்டமையே காரணமாகும். பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மத்திய வங்கிக்கு உத்தரவாத உரிமை கோரல்களைச் சமர்ப்பித்த பின்னர் கடன்பட்டோரினால் மூன்று கடன்கள் மீளச் செலுத்தப்பட்டன. 1996 இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒன்பது உரிமை கோரல்கள் முற்றாகத் தீர்ப்பனவு செய்யப்பட்ட வேளையில் ஐந்து உரிமை கோரல்கள் தீர்ப்பனவிற்கான பரிசீலனையின் கீழ் உள்ளதுடன் எட்டு உரிமை கோரல்கள் நிராகரிப்பினை அல்லது தீர்ப்பனவினை எதிர்பார்த்துள்ளன.

சிநகை திட்டங்களின் கீழ் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களில் பெரும்பாலானவை கொழும்பு, கம்பக, குருநாகல், புத்தளம், கண்டி, பதுளை, இரத்தினபுரி, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலேயே காணப்பட்டன.

## கிராமியக் கொடுகடன்

ஆய்விற்குரிய ஆண்டில், மத்திய வங்கி அதன் சொந்தக் கொடுகடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு மேலதிகமாக புறம்பாக கொடை மூலம் நிதியிடப்பட்ட பல கிராமியக் கொடுகடன் திட்டங்களுக்கான நிறைவேற்று முகவராகவும் தொழிற்பட்டது. நிறைவேற்று முகவரான வங்கியின் தொழிற் பாடுகள் பின்வருவனவற்றுடன் தொடர்புற்றிருந்தன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களை அனுமதித்தல், பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களை

வழங்குதல், செயற்றிட்டங்களின் கீழ் தகைமை பெற்ற கடன்கள் தொடர்பாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு மீள் நிதியினைப் பகிர்ந்தளித்தல், கடன் திட்டங்களைக் கண்காணித்தலும் ஒருங்கிணைத்தலும், கடன் பதிவுகளைப் பேணுதல் மற்றும் ஏனைய உள்நாட்டு முகவர்களின் ஒத்துழைப்புடன் கடன் திட்டங்களை மேம்படுத்தல்.

1996 இல் வங்கியினால் நடைமுறைப் படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள் பின்வருமாறு:

(அ) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப் பட்ட செயற்றிடங்கள்

(I) வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டம்

(II) சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

(III) இடை நில நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

(IV) தென்மாகாண கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம்

(V) வடமேல் மாகாண நீர் மூலவள அபிவிருத்திச் செயற்றிட்டம்

(ஆ) வேளாண்மைஅபிவிருத்திக்கான சருவதேச நிதியம் / கனடிய சருவதேச அபிவிருத்தி முகவரினால் / சுவிடிஸ் சருவதேச அபிவிருத்தி முகவரினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

(VI) சிறுவேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

(VII) வடமத்திய மாகாண பங்கேற்கும் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்.

(இ) அரசினால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள்

(VIII) கேகாலை மாவட்ட ஒருங்கிணைக்கப் பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற் றிட்டம் – சுழலும் நிதியச் செயற்றிட்டம்.

(IX) சுரதுர ஊக்குவிப்பு திட்டம் – சுயவேலை வாய்ப்பிற்கான நுண்பாக தொழில் முயற்சி கடன்.

(ஈ) சிறப்புச் செயற்றிட்டங்கள்

(X) இறால் வளர்ப்போருக்கான நிவாரணத் திட்டம்

## (I) வேளாண்மைப் புத்தாக்கச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப் பட்டதொரு செயற்றிட்டமான வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டம் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தற்போது நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆட்களையும் உடமைகளையும் புத்தாக்கம் செய்வ தற்காக வடிவமைக்கப்பட்டதொரு திட்டமாகும். செயற்றிட்டத்திற்கான வெளிநாட்டு நிதியிடல் 1996 யூன் 30ஆம் நாளன்று முடிவடைந்த தெனினும் மத்திய வங்கி தொடர்ந்தும் கொடு கடன் உத்தரவாத் திட்டங்களின் நிருவாகி என்ற வகையில் கடன்களை மீளப்பெறல் மற்றும் செயற்றிட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட நோக்கங்களுக்கு மீள்பெறுகைகளை மீளக் கடனாகவழங்கல் ஆகியவற்றின் கண்காணிப் பையும் மேற்கொண்டது.

ஆய்விற்குரிய ஆண்டில் வேளாண்மைப் புத்தாக்க செயற்றிட்டத்தின் கீழ் வங்கியினால் கொடுகடன் உத்தரவாத உரிமை கோரல் எதுவும் செலுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் செயற்றிட்டங்களில் சில செயற் படாமையின் காரணமாக மீளளிப்பு வீதங்கள் வீழ்ச்சியடைந்த போதும் 1996 இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் மீளளிப்பு வீதங்களை 65 சதவீதத்திற்கும், 72 சதவீதத்திற்கும் இடையில் பேணக் கூடியனவாக இருந்தன.

### (II) சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப் பட்ட சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் 1989இல் தொழிற்படத் தொடங்கிய துடன் 1997 திசெம்பரில் முடிவுறும் விதத்தில் அட்டவணையிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டம் சிறு உடைமையாளர்களின் உற்பத்தியையும் ஏற்றுமதியையும் அதிகரித்தல், மேம்பட்ட உற்பத்தித் திறனின் ஊடாக உற்பத்தியாளர் இலாபங்களை உயர்த்துதல், தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளின் தரத்தினையும் உற்பத்தி யாற்றலையும் மேம்படுத்தல், கிராமிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் சிறு உடைமையாளர்களுக்கான ஆதாரப் பணிகளை வலுப்படுத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இச்செயற்றிட்டம் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட உட்கட்ட மைப்பு அபிவிருத்திக் கூறு ஊடாகவும் வங்கி யினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொடுகடன் ஊடாகவும் இக் குறிக்கோள்களை அடைவதற்கு எதிர்பார்த்தது. ஐ. அ. டொலர் 126 இலட்சம் தொகை கொண்ட கொடுகடன் கூறுகள் கள அபிவிருத்தி (மீள் பயிரிடல் மற்றும் புதிய பயிரிடல்) நாற்று மேடை அபிவிருத்தி மற்றும் தொழிற்சாலைப் புத்தாக்கம் என்பன வற்றிற்கான கடன் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கி யிருந்தது. 1996 இறுதியில், கொடுகடன் கூறு முழுவதும் மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கான கடன்களுக்கு ஒப்புதல் வழங்கியதன் மூலம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

1995 இல் மிக உயர்ந்த மட்டத்தை அடைந் திருந்த பங்கேற்கும் கொடுகடன் நிறு வனங்களின் கடன் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும் ஆய்விற் குரிய ஆண்டிலும் தொடர்ந்தும் அதே வேகத்தி னைப் பதிவு செய்தமைக்கு 1996 இல் மேம்பட்ட தேயிலை விலைகளின் விளைவாக கடன்களுக்கு உயர்ந்த கேள்வி காணப்பட்டமையே காரண மாகும்.

1996 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் ஒன்று சேர்ந்த கடன் ஒப்புதல் களும் பகிர்ந்தளிப்புக்களும் முறையே ரூ. 7,510 இலட்சமாகவும் ரூ. 5,400 இலட்சமாகவும் காணப்பட்டன. ஆய்விற்குரிய ஆண்டில் மொத்தக் கடன் ஒப்புதல்களும் பகிர்ந்தளிப்புக்களும் முறையே ரூ. 2,800 இலட்சமாகவும் ரூ. 2,010 இலட்சமாகவும் காணப்பட்டன. 1996 இல் கள அபிவிருத்திக்கான வழங்கப்பட்ட கடன்கள் (புதிய பயிரிடல் மற்றும் மீளப்பயிரிடல்) ரூ. 860 இலட்சமாக விளங்கிய வேளையில் நாற்றுமேடை அபிவிருத்தி மற்றும் தொழிற்சாலை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட கடன்கள் முறையே ரூ. 60 இலட்ச மாகவும், ரூ. 1,090 இலட்சமாகவும் காணப் பட்டன. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களுக்கு எதிராக வங்கியினால் விடுவிக்கப்பட்ட மீள்நிதி யிடல் 1996 இறுதியில் ரூ. 3,790 இலட்சமாக விளங்கியது.

பொதுவாக இச்செயற்றிட்டத்தின் திருப்தி கரமான செயலாற்றத்தினைக் கருத்திற் கொண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி சிறு உடைமையாளர் துறைக்கு புதிய தொடர் கொடு கடன்களை வழங்குவதனைக் கவனத்தில் எடுக்கும் அதன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. இவ்விரண் டாவது செயற்றிட்டம் பற்றிய ஆரம்ப அறிக்கை யினைத் தயாரிப்பதற்காக 1996 இல் ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவைக் களத்திற்கு அனுப்பியது. தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் வங்கியின் ஒத்துழைப்புடன் நன்மை களைக் கண்காணிக்கும் அளவீடு ஒன்று நடத்தப் பட்டதுடன் தேயிலை சிறு உடைமையாளர்களை அவர்களின் சொந்தக் காலிலேயே நிற்க வைப்ப தற்காக புதிய சேமிப்பு திட்டமொன்றும் அறிமுகப் படுத்தப்பட்டது.

### (III) நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப் பட்ட நிரந்தரப் பயிர்கள் அபிவிருத்தி செயற் றிட்டம் 1996 இல் அதன் எட்டாவது ஆண்டுத் தொழிற்பாடுகளை நிறைவு செய்து கொண் டுள்ளது. இக்கொடுகடன் திட்டம் நிரந்தரப் பயிர்களின் குறிப்பாக சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் பழ வர்க்கப் பயிர்களின் உற்பத்தியையும் வர்த்தகமயமாக்கலையும் மேம்படுத்துவதற்காக சலுகை வீதங்களில் வேளாண்மையாளர்களுக்கு நடுத்தரக்கால கொடு கடன் வசதிகளை வழங்கு

வதற்காக வடிவமைக்கப்பட்ட தொன்றாகும். நாட்டில் நிரந்தரப் பயிர் துறையின் பண்ணை மற்றும் அறுவடைக்குப் பின்னைய நடவடிக்கை களின் கையாளல், பதனிடல் போன்ற விடயங்களில் நவீன தொழில் நுட்பங்களை ஊக்குவிப்ப தனையும் இச்செயற் றிட்டம் வலியுறுத்துகின்றது. இச் செயற்றிட்டத்தை 1997 திசெம்பரில் முற்றுப் பெறச் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

1996 இல் நிரந்தரப் பயிர் அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழான கடன் பகிர்ந்தளிப்புக்கள் விரிவடைந்தமைக்கு 1995 இல் செயற்றிட்ட பரப்பு விரிவாக்கப்பட்டமை மற்றும் செயற் றிட்டத்தின் கீழ் புதிய பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டமை போன்ற புதிய மீள் வடிவமைப்புக்கள் செயற் றிட்டத்தில் மேற்கொள்ளப்பட்டமையே முக்கிய காரணமாகும். 1996 இறுதியில் கடன் ஒப்புதல்களினதும் பகிர்ந்தளிப்புக்களினதும் ஒன்று சேர்ந்த மொத்தம் முறையே ரூ. 7,014 இலட்சமாகவும், ரூ. 5,270 இலட்சமாகவும் விளங்கின. மேற்குறிப்பிட்ட கடன்கள் தொடர்பாக பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த மீள்நிதியிடல் ரூ. 4,270 இலட்சமாக விளங்கியது. வேளாண்மையாளர்களின் கடனுக் கான கேள்வி வலுவடைந்தமை மேலதிக நிதியின் ஒதுக்குகளை அவசியமாக்கியது. ஆசிய அபிவிருத்தி வங்கி செயற்றிட்டத்தின் பயன் படுத்தப்படாத செலவினங்களிலிருந்து சிஎஉ 7 இலட்சம் கொண்ட தொகையை இக்கொடு கடன் கூறிற்கு மீள ஒதுக்கியதன் மூலம் இவ்வதிகரித்த கேள்விக்கு சாதகமான வழியில் செவிசாய்த்தது.

இச்செயற்றிட்டத்தினால் அடையப்பட்ட திருப்திகரமான முன்னேற்றத்தினைக் கருத்திற் கொண்டு விதைத்துரையை உள்ளடக்கிய நிரந்தரப் பயிர்கள் மீதான இரண்டாவது செயற் றிட்டமொன்று ஆசிய அபிவிருத்தி வங்கியினால் கவனத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றது. இவ்விரண்டாவது செயற்றிட்டம் தொடர்பான ஆய்வறிக்கைகளின் தயாரிப்பு 1996 திசெம்பரில் செயற்பாட்டிலிருந்தது.

## (IV) தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப் பட்டு 1992 இல் தொழிற்படத் தொடங்கிய தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்ட மானது செயற்றிட்டப் பிரதேசத்தில் வருவாய் உருவாக்கம் மற்றும் தொழில்வாய்ப்பு உருவாக்க வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் தென்மாகா ணத்திலுள்ள மக்களின் வருமானத்தையும் வாழக்கைத் தரத்தையும் உயர்த்துவதையே குறிக் கோளாகக் கொண்டிருந்தது. சிஎஉ 64 இலட்சத் தினை (ஏறத்தாழ ரூ. 4,500 இலட்சம்) மொத்தக் கொடுகடன் ஒதுக்காகக் கொண்ட இச் செயற் றிட்டத்திற்கான கொடுகடன் கூறின் நிறைவேற்று முகவராக வங்கி தொழிற்படுகின்றது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பி. கி. அ. வங்கிகளும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளாக தொழிற்பட்டதுடன் தென் மாகாண சபையில் ஏற்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்ட அலுவலகத்தின் உதவியையும் பெற்றுக் கொண்டன. செயற்றிட்டத்தின் கீழ், வெலிமக விலுள்ள சாளி மவுண்ட் கைத்தொழில் பேட்டை யிலுள்ள சிறிய /நடுத்தர அளவுக் கைத்தொழில் களுக்கும் தென்மாகாணத்திலுள்ள ஏனைய சிறிய /நடுத்தர அளவு கிராமியத் தொழில் முயற்சி களுக்கும் நிதியிடுவதற்காக வங்கியினால் மீள் நிதியிடல் வழங்கப்பட்டது. 1996 இல் செயற் றிட்டத்தின் கீழான கடன் வழங்கல் வீதமும் மீள் நிதியிடல் வீதமும் முறையே ஆண்டிற்கு 14 சதவீதமாகவும் ஆண்டிற்கு 6 சதவீதமாகவும் மாற்றமின்றி இருந்தன.

ஆய்விற்குரிய ஆண்டில் பங்கேற்கும் கொடு கடன் நிறுவனங்கள் ரூ. 659 இலட்சம் தொகை கொண்ட 958 கடன்களை வழங்கி ஆண்டின் இறுதியில் ரூ. 1,443 இலட்சங் கொண்ட ஒன்று சேர்ந்த பகிர்ந்தளிப்பினைப் பதிவு செய்தன. 1996 இல் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளுக்கான மீள்நிதியிடல் வடிவில் வங்கி 958 கடன்கள் தொடர்பாக ரூ. 574 இலட்சங் கொண்ட தொரு தொகையை வழங்கியது. இதன்படி, 1996 இறுதியில் 4,382 கடன்கள் தொடர்பாக ஒன்று சேர்ந்த நிதியிடல் ரூ. 1,272 இலட்சமாக விளங்கியது.

## (V) வடமேல் மாகாண நீர் மூலவளங்கள் அபிவிருத்திச் செயற்றிட்டம்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப் பட்ட இக் கொடுகடன் திட்டம் அதன் மூன்றாவது ஆண்டினை 1996 இல் பூர்த்தி செய்தது. சிஎஉ 16 இலட்சம் (ரூ. 900 இலட்சம்) தொகை கொண்ட கொடுகடன் கூறு வடமேல் மாகா ணத்தில் வேளாண்மைக்கான கிணறுகளை அமைத்தல், ஏற்று நீர்ப்பாசன துணைச் செயற் றிட்டங்கள், கிராமிய பெண்களுக்கு வருமான உருவாக்கத்தையளிக்கும் சுய வேலைவாய்ப்பு செயற்றிட்டங்கள் ஆகிய மூன்று முதன்மைத் துணைக் கூறுகளை உள்ளடக்கியிருந்தன. இச்செயற்றிட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து புத்தளம் மற்றும் குருநாகல் பிரதேச அபிவிருத்தி வங்கிகளும் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியும் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளாக அனுமதிக்கப்பட்டிருந்ததுடன் இப்பட்டியல் பின்னர் மக்கள் வங்கியும் இலங்கை வங்கியும் சேர்க்கப்பட்டதன் மூலம் விரிவாக்கப்பட்டது.

1996 இறுதியில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் வடமேல் மாகாணத்தில் 461 வேளாண்மைக் கிணறுகளை அமைப்பதற்காக ரூ. 151 இலட்சத்தையும் பெண்களுக்கான 819 சுயவேலைவாயப்பு துணைச் செயற்றிட்டங்க ளுக்காக ரூ. 104 இலட்சத்தையும் பகிர்ந்தளித்தன. 1996 இல் செயற்படுத்தப்பட்ட ஏற்றல் நீர்ப்பாசன செயற்றிட்டம் ரூ. 7 இலட்சம் செலவில் 24 திட்டங்களுக்கு நிதியிட்டது. 1996 இறுதிவரை இச் செயற் றிட்டத்தின் கீழ் வங்கி அனைத்து பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளுக்கும் மீள் நிதியிடலாக ரூ. 190 இலட்சத்தினை வழங்கியுள்ளது.

## (VI) சிறு வேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம்

1990 இல் தொடங்கப்பட்ட சிறு வேளாண்மையாளர், நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் வேளாண்மை அபிவிருத்திக்கான சருவதேசக் கடன் நிதியம் (ஐ. அ. டொலர் 67 இலட்சம் கொண்டதொரு கடன்) கனடிய சருவதேச அபிவிருத்தி முகவர் (ஐ. அ. டொலர் 65.5 இலட்சம் கொடை) இலங்கை அரசு (ஐ. அ. டொலர் 41 இலட்சம் தொகை கொண்ட பங்களிப்பு) என்பனவற்றினால் இணைந்து நிதியிடப்பட்டதுடன் இது காலி, மாத்தறை, கண்டி, புத்தளம் மாவட்டங்களிலுள்ள மிக வறிய மக்களிடையே வறுமையை ஒழிப்பதற்காக செலவுப் பயன்பாட்டு கொடுகடன் வழங்கல் முறையொன்றினை நிறுவுவதனையே நோக்க மாகக் கொண்டிருந்தது. அச் செயற்றிட்டம் இக் குறிக்கோள்களை அடைவதற்கான கூட்டுக் கடன் வழங்கல் உத்தியின் மூலம் இணைந்த வங்கித் தொழில்முறையை வலுப்படுத்தப்படுவதி லேயே தங்கியிருக்கிறது. அரசின் சார்பில் செயற்றிட்டத்தின் நிறைவேற்று முகவராக மத்திய வங்கி தொழிற்பட்டது.

1996 இல், செயற்றிட்டத்தின் கீழ் சம்பந்தப் பட்ட நான்கு மாவட்டங்களிலும் 8,453 புதிய குடும்பங்கள் உதவிக்காகச் சேர்த்துக் கொள்ளப் பட்டதன் மூலம் இச் செயற்றிட்டத்தினால் பணி யாற்றப்பட்ட மொத்தக் குடும்பங்களின் எண்ணிக்கை இவ்வாண்டு இறுதியில் 45,843 ஆக விளங்கியது. அனைத்து நன்மை பெறுநர் களும், 7,519 குழுக்களுக்குள் உள்ளடக்கப் பட்டி ருந்ததுடன் ஒவ்வொரு குழுவும் 5 – 6 உறுப்பி னர்களை உள்ளடக்கியிருந்தது. 1996 காலப் பகுதியில் 5,115 கடன்கள் தொடர்பாக ரூ. 520 இலட்சங் கொண்ட மொத்தத் தொகை நன்மை பெறுநர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதன் மூலம் 1996 இறுதியில் கடன்களின் மொத்த எண்ணிக்கை யும் மொத்தப் பெறுமதியும் முறையே 35,480 இற்கும் ரூ. 3,040 இலட்சத்திற்கும் உயர்வடைந்தன. நன்மை பெறுநர்களிடையே சிக்கனத்தையும் சேமிப்புப் பழக்கத்தையும் வலியுறுத்தும் விதத்தில் கட்டாய சேமிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்கு மாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளும் விதமாக செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டது. நன்மை பெறுநர்களின் அத்தகைய சேமிப்புக்களின் மொத்தத் தொகை 1996 இறுதியில் ரூ. 430 இலட்சமாக விளங்கியது. செயற்றிட்டம் தொடர்ந்தும் அதனது 91 சதவீத சராசரி மீட்பு வீதத்தினைப் பேணியது.

செயற்றிட்டம் அதன் வழமையான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடர்ந்ததுடன் அதன் கீழ் நன்மை பெறுநர்களுக்கு தொழில் முயற்சி, சந்தைப்படுத்தல், அடிப்படைக் கணக்குப் பதிவு, கால்நடை வளர்ப்பு, வேளாண்மைத் தொழில்

நுட்ப பயிற்சி போன்றவற்றில் தொழிற் பயிற்சி என்பவற்றின் மீது பயிற்சி வழங்கப்பட்டது. ஆய்விற்குரிய ஆண்டில் 6,102 நன்மை பெறுநர் களுக்காக 225 அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதன்படி, 1996 இறுதியில் பயிற்சி பெற்ற நன்மைபெறுநர்களின் மொத்த எண்ணிக்கை 36,000 ஆக விளங்கியது.

1996இல் சிறுவேளாண்மையாளர் மற்றும் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தில் இடம் பெற்ற முக்கிய அபிவிருத்தி யாதெனில் சந்தையில் நிலவிய வட்டிவீதங்களுடன் ஒப்பிடத்தக்க விதத்தில் வட்டி வீதங்களை மேல் நோக்கி உயர்த்தியமையேயாகும். இதன்படி 1996 ஏப்பிற லில் வேளாண்மைக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 12 சத வீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்ட வேளையில் வேளாண்மையல்லாக் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 16 சதவீதத்திலிருந்து 20 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டன. மேலும் நன்மை பெறுநர்களின் மீது இச்செயற்றிட்டம் கொண்டி ருக்கும் தாக்கத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஆய்விற்குரிய ஆண்டில் செயற்றிட்டத்தின் முன்னேற்றத்தின் மீது விரைவான மதிப்பீட்டு அளவீடு ஒன்று நடத்தப்பட்டது. செயற்றிட்டத்தி னால் வழங்கப்பட்ட உதவிகளைப் பயன்படுத்தி பல்வேறுபட்ட வருவாய் உருவாக்க நடவடிக்கை களை மேற்கொண்டதன் விளைவாக நன்மை பெறுநர்களில் ஏறத்தாழ 70 சதவீதத்தினர் வறுமைக் கோட்டைத் தாண்டி விட்டமையை இவ்வளவீடு காட்டியது. எனினும் பல்வேறு பெறுபேறுகள் காணப்பட்ட போதும் அவர்களில் ஏறத்தாழ அரைப்பங்கினர் இன்னமும் பாதிக்கப் படக்கூகடிய சூழ்நிலைகளிலேயே இருப்பத னையும் அவர்கள் சொந்தக் காலில் நிற்கும் வரை செயற்றிட்ட உதவிகள் மேலும் சில காலத்திற்கு மேவைப்படுவதனையும் இவ்வளவீடு எடுத்துக் காட்டியது.

### (VII) வட மத்திய மாகாண பங்கேற்புக் கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம்

1996 இல் இச் அரசிற்கும் வேளாண்மை அபிவிருத்திக்கான சருவதேச நிதியம் /சுவீடன் சருவதேசஅபிவிருத்தி அமைப்பு என்பனவற்றிற் கிடையே கடன் உடன்படிக்கையொன்று கையெ ழுத்திடப்பட்டதன் மூலம் இச்செயற்றிட்டம் தொடங்கப்பட்டது. இச்செயற்றிட்டமானது அநுராதபுர மாவட்டத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மிக வறிய மக்களிடையே வறுமையை ஒழிப்பதற்கான கொடுகடன் கூறுக ளுடன் இணைந்ததொரு ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டமாகும். தேசிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தில் கிடைக்கத் தக்கதாகவுள்ள மூல வளங்களிலிருந்து நிதியிடப் படவுள்ள கொடுகடன் கூறுகளுக்கான நிறை வேற்று முகவராக வங்கி விளங்குகின்றது.

இச்செயற்றிட்டத்தின் குறிக்கோள்களாக இலக்கிடப்பட்ட தொகுதிக் குடும்பங்களை வறுமைக் கோட்டைத் தாண்ட இயலச் செய்யும் விதத்தில் வருமான உருவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான உதவி, அவர்களது உணவுப் பாதுகாப்பினையும் ஊட்டச் சத்தி னையும் மேம்படுத்தல், அவர்களின் உற்பத்தி யாற்றலைக் குறைக்கும் நோய்களுக்கான முக்கிய ஏதுக்காரணிகளைக் கட்டுப்படுத்தல் என்பன விளங்கின. இக்குறிக்கோள்கள் இப் பிரதேசங்களில் பங்காளர் அமைப்புக்களாகத் தொழிற்படுகின்ற தெரிந்தெடுக்கப்பட்ட அரசு சார்பற்ற அமைப்புக் களின் உதவியுடன் இலக்கிடப்பட்ட தனிப்பட்டோ ருக்கு விரிவாக்கப்பட்ட நுண்பாக கொடுகடன் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அடையப்படும்.

### (VIII) கேகாலை மாவட்ட ஒருங்கிணக்கப் பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் - சுழல்கின்ற நிதிச் செயற்றிட்டம்

வேளாண்மை அபிவிருத்திக்கான சருவ தேச நிதியத்தின் நிதி உதவியுடன் நடை முறைப் படுத்தப்பட்ட கேகாலை மாவட்ட ஒருங்கி ணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டம் 1995 திசெம்பரில் நிறுத்தப்பட்டதுடன் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கான மீள் நிதியிடலின் வழங்கலும் 1996 யூனுடன் நிறுத்தப்பட்டது. 1995 இன் இறுதி வரை வேளாண்மை நடவடிக்கை களுக்காகவும் சிறு அளவுக் கைத்தொழிலுக் காகவும் ரூ. 1,470 இலட்சங்களைக் கொண்ட தொகை பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளினால் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1996 யூனில், மத்திய வங்கி பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்க ளிடமிருந்து ரூ. 783 இலட்சங் கொண்ட தொகையை மீளப் பெற்றுக் கொண்டது. செயற்

றிட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி இத் திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் கொடுகடனை வழங்குவதற்காக கடன் மீட்புக்களிலிருந்து சுழல்கின்ற நிதியொன்று நிறுவப்பட்டு மத்திய வங்கியினால் பேணப்பட வேண்டியிருந்தது.1997 இன் தொடக்கப் பகுதியில் அத்தகைய தொழிற்பாடுகளைத் தொடங்கும் குறிக்கோளுடன் அத்தகைய சுழல்கின்ற நிதியை நிறுவுவதுடன் தொடர்புபட்ட ஆரம்ப நடவடிக்கைகள் 1996 இல் பூரணப்படுத்தப்பட்டன.

## (IX) நுண்பாக தொழில் முயற்சி கொடுகடன் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக சுயதொழில் வாய்ப்பை மேம்படுத்தல் அல்லது சுறதுற ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம்

கல்வி கற்ற இளைஞர்களிடையே காணப்படும் உயர்ந்தளவு வேலையின்மையை ஒழிக்கும் குறிக்கோளுடன் 1996 செத்தெம்பரில் அரசாங்கம் தீவு முழுவதற்குமான சிறப்பு சுயவேலைவாய்ப்பு மேம்பாட்டுத் திட்டமொன்றினைத் தொடங்கியது. “சுறதுற ஊக்குவிப்பு” என்ற பெயரைக் கொண்ட இத்திட்டம் அரசின் சார்பில் வங்கி யினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பன பங்கேற்கும் கொடுகடன் நிறுவ னங்களாகத் தொழிற்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி தகைமை வாய்ந்த கடன் பெறுநர் களுக்கு பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களி னூடாக கொடுகடன் வசதிகளை வழங்குவதனை இயலச் செய்யும் வகையில் 1997 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்கம் ரூ. 3,500 இலட்சங்களை வழங்கியது.

சுறதுற ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ், தகுதி பெற்ற கடன் பெறுநர்கள் தனிப்பட்ட முறையில் கடன் பெறுகையில் ரூ. 50,000 வரையிலான இலகு கடனைப் அல்லது தனிப்பட்ட ஐந்து பேர் குழுவாகச் சேர்ந்து ஒரு சுய வேலை வாய்ப்பு செயற்றிட்டத்தை அவர்களே தெரிவு செய்யுமிடத்து ரூ. 250,000 வரையிலான கடனைப் பெறமுடியும். ஓராண்டு சலுகைக் காலத்தை உள்ளடக்கி 3 ஆண்டு காலத்திற்கு வழங்கப்பட்ட இக்கடன்கள் ஒழுங்காக மீளச் செலுத்துமிடத்து வட்டி வீதம் ஆண்டிற்கு 10 சதவீத மாகவும் மீள் கொடுப்பனவுகள் ஒழுங்கற்று இருக்குமிடத்து வட்டிவீதம் ஆண்டிற்கு 12 சதவீதமாகவும் இருக்கும். பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களினால் வலியுறுத்தப்படும் பிணை யாதெனில் மீள் கொடுப்பனவு தொடர்பாக கடன்பெறுநர்கள் மீது இணைந்த அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடிய குடும்ப உறுப்பினர் ஒருவரின் உத்தரவாதம் மட்டுமேயாகும். 1996 இறுதியில் இக்கொடுகடன் திட்டத்தின் கீழ் தகைமை பெற்ற தனிப்பட்ட ஆட்களுக்கு ரூ. 780 இலட்சம் பெறுமதி கொண்ட 2,400 கடன்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் ரூ. 32,500 கொண்ட சராசரிக் கடன் அளவு பதிவு செய்யப்பட்டது.

## (X) கூனி இறால் வளர்ப்போருக்கான நிவாரணத் திட்டம்

ஆய்விற்குரிய காலப் பகுதியில், கடற்றொழில் நீரியல் உயிரின மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சின் வேண்டுகோளின்படி வங்கியானது இறால் பண்ணையாளர்களில் வெள்ளைப் புள்ளி நோயினால் பாதிக்கப்பட்ட கூனி இறால் பண்ணையாளர்களுக்கு கடன்களை வழங்கிய கடன் வழங்கல் வங்கிகளுடன் நிவாரணத் திட்டம் தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்தியது. 1996 இன் தொடக்கப் பகுதியிலிருந்தும் காணப்பட்ட இக்கொள்ளை நோய் கூனி இறால் பண்ணைகளை மிகக் கடுமையாகப் பாதித்து வடமேல் மாகாணத்தின் கரையோரத்திலுள்ள கூநி இறால் வளர்ப்போரின் ஏறத்தாழ 3000 ஏக்கர்கள் பண்ணைக்கு பெரும் சேதத்தை விளைவித்தது. திடீரென இந்நோய் பரவியமையானது ஏறத்தாழ ரூ. 2 பில்லியன்களை வெளிநாட்டுச் செலாவணியாக நாட்டிற்கு ஆண்டுதோறும் கொண்டு வரும் மிக முக்கிய மரபு வழியற்ற ஏற்றுமதியாளராக மாறியுள்ள கூனி இறால் வளர்ப்பின் ஆற்றல் தன்மைக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்தது. ஒவ்வொரு விடயங்களின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிவாரணத் தொகுதியானது சலுகை வீதங்களுடன் கடன்களைத் தாமதித்து செலுத்தும் வசதி மற்றும் பாதிக்கப்பட்ட குளங்களைப் புத்தாக்கம் செய்வதற்கான புதிய கொடுகடன் வசதி என்பனவற்றுடன் இணைந்த மீள் அட்டவணைப்படுத்தலை உள்ளடக்கியுள்ளது.

1996 யூனிலிருந்து நடைமுறைக்கு வந்த நிவாரணத் தொகுதி இந்நாளில் இத்துறைக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 7,500 இலட்சம் கொண்ட கடன்களை உள்ளடக்குகிறது.

## பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்

1966 இல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் விரிவடைந்தமையானது கிராமியப் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றமடைய உதவியது. பி. கி. அ. வங்கிகள் வேளாண்மை, மீன்பிடி, குடிசை மற்றும் சிறு அளவுக் கைத்தொழில், வர்த்தகம் என்பனவற்றின் அபிவிருத்திக்காகவும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நிதிகளை வழங்கியது. எனினும் பி. கி. அ. வங்கிகளின் சுமுகமான தொழிற்பாடுகள் ஆண்டின் முதற் சில மாதங்களில் பி. கி. அ. வங்கி களின் ஊழியர்களினால் மேற்கொள்ளப் பட்ட தொழிற்சங்க நடவடிக்கைகளால் பாதிக்கப் பட்டது.

## பி. கி. அ. வங்கிகளின் கிளை வலையமைப்பு

தொழிற்படும் பி. கி. அ. வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1996 இறுதியில் 17 ஆக மாற்றமின்றியிருந்தது. இவ்வாண்டில் கண்டி, (ஹேதெனியாவில்) களுத்துறை (மத்துகம) கம்பகா (நீர்கொழும்பு) மாத்தறை (மாத்தறை நகரம்)ஆகிய பி. கி. அ. வங்கிகளினது நான்கு புதிய கிளைகள் திறக்கப்பட்டன. பி. கி. அ. வங்கிகளின் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1995 இன் 171 இலிருந்து 1996 இல் 175 இற்கு அதிகரித்தது.

## வைப்புத் திரட்டல்

வைப்புக்களைத் திரட்டும் பொருட்டு முன்னைய ஆண்டுகளில் பி. கி. அ. வங்கிகள் பல கவர்ச்சிகரமான சேமிப்புத் திட்டங்களை

அட்டவணை II.16

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி கிளை வலையமைப்பு

| பெயர் | நிறுவப்பட்ட திகதி | தலைமை அலுவலகம் அமைவிடம் | திறக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | | | | | | | | 1996 இறுதியில் மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1985 - 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | 1996 | |
| களுத்துறை | 85.07.13 | புளத்சிங்கள | 12 | - | 1 | 2 | - | - | - | 1 | 16 |
| மாத்தறை | 85.07.28 | மாத்தறை | 8 | - | - | 4 | - | - | - | 1 | 13 |
| குருநாகல் | 85.08.10 | குளியாப்பிட்டி | 14 | 1 | - | 2 | - | - | - | - | 17 |
| அநுராதபுரம் | 85.08.12 | அநுராதபுரம் | 7 | - | 3 | 1 | - | - | - | - | 11 |
| அம்பாந்தோட்டை | 86.12.13 | அம்பலாந்தோட்டை | 6 | 1 | - | 1 | - | - | - | - | 8 |
| கேகாலை | 87.02.08 | கேகாலை | 11 | 1 | (1) | 1 | 1 | 1 | - | - | 14 |
| புத்தளம் | 87.07.11 | சிலாபம் | 6 | 2 | 1 | 1 | - | - | - | - | 10 |
| காலி | 87.08.17 | எல்பிட்டிய | 9 | - | - | 3 | - | - | - | - | 12 |
| கண்டி | 87.10.13 | கண்டி | 9 | 2 | - | 2 | - | - | 1 | 1 | 15 |
| நுவரெலியா | 88.10.10 | நுவெரலியா | 4 | 2 | - | 2 | - | - | - | - | 8 |
| மொனராகலை | 88.10.11 | புத்தளை | 3 | 1 | 2 | - | - | - | - | - | 6 |
| பதுளை | 90.10.13 | பதுளை | - | 4 | 2 | 3 | - | 4 | - | - | 13 |
| பொலனறுவை | 91.05.17 | பொலனறுவை | - | - | 4 | 2 | 1 | - | - | - | 7 |
| மாத்தளை | 91.06.21 | மாத்தளை | - | - | 5 | 1 | - | - | - | - | 6 |
| இரத்தினபுரி | 91.09.30 | இரத்தினபுரி | - | - | 4 | 2 | 1 | - | - | - | 7 |
| அம்பாறை | 92.02.24 | அம்பாறை | - | - | - | 5 | 2 | - | - | - | 7 |
| கம்பகா | 93.06.07 | கம்பகா | - | - | - | - | 2 | 1 | 1 | 1 | 5 |
| மொத்தம் | | | 89 | 14 | 21 | 32 | 7 | 6 | 2 | 4 | 175 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

அறிமுகப்படுத்தியதுடன் கிராமப்புறங்களில் இடம்பெயர் வங்கித் தொழில் பணிகளையும் வழங்கின. எனினும் ஆண்டின் முதலரைப் பகுதியில் பி. கி. அ. வங்கிகளின் மொத்த வைப்புக்கள் ரூ. 18,510 இலட்சமாக விளங்கி 1995 இன் இறுதியிலிருந்த மட்டத்தினைவிட 5% கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு ஊழியர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளே காரணமாகும். ஆண்டின் முதலரைப் பகுதியில் இப்பின்னடைவு காணப்பட்ட போதும் வைப்புத் திரட்டல் படிப்படியாக மீட்சியடைந்து ஆண்டின் இறுதியில் 3 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1996 இறுதியில் 991,678 கணக்கு களின் பெயரில் மொத்த வைப்புக்கள் ரூ. 20,020 இலட்சமாக காணப்பட்டன. 977,534 கணக்கின் பேரிலான சேமிப்பு வைப்புக்களின் மொத்தப் பெறுமதி ரூ. 15,880 இலட்சமாக விளங்கி இவ் வைப்புக்களில் பெருந்தொகைக்கு வகை கூறியது. சேமிப்புக் கணக்கிலுள்ள வைப்புக்களின் சராசரிப் பெறுமதி 1995 இன் ரூ. 1,728 இலிருந்து 1996 இல் ரூ. 1,620 இற்கு வீழ்ச்சியடைந்தவிடத்து நிலையான வைப்புக்களில் சராசரிப் பெறுமதி 1995 இன் ரூ. 37,490 இலிருந்து 1996 இல் ரூ. 43.160இற்கு உயர்வடைந்தது.

### கொடுகடன் வழங்கல்

ஆய்விற்குரிய காலப் பகுதியில் பகிர்ந்த ளிக்கப்பட்ட கடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டின் ரூ. 20,550 இலட்சத்துடன் (341,732 கடன்கள் தொடர்பாக) ஒப்பிடுகையில் ரூ. 22,940 இலட்சமாக (345,028 கடன்கள் தொடர்பாக) விளங்கின. கடன்களின் சராசரி அளவும் 1995 இன் ரூ. 6,012 இலிருந்து 1996 இல் ரூ. 6,649 ஆக அதிகரித்தது. இக்காலப் பகுதி யில் கடன்களும் முற்பணங்களும் ஏறத்தாழ 12 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் வைப்புக்கள் 5 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்தன. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி ஊழியர் சங்கத்துடன் இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்து பி. கி. அ. வங்கி களின் வாடிக்கையாளர் நம்பிக்கையையும் வாடிக்கையாளர் தளத்தையும் மீள கட்டி யெழுப்புவதற்காக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் கொடுகடனை விரிவாக்கியிருக்கலாம். எனினும் ஆண்டின் இறுதியில் பி. கி. அ. வங்கிகள் எச்சரிக்கையான கொடுகடன் கொள்கையினை பின்பற்றின. பி. கி. அ. வங்கி களினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் தென்கொரியாவிற்கு வேலை வாய்ப்புக் காகத் தெரிவு செய்யப்பட்ட ஆட்களுக்கான சிறப்புக் கொடுகடன் திட்டங்கள், சமூர்த்தி பெறுவோருக்கான சுயவேலைவாய்ப்புக் கடன்கள் போன்ற பல்வேறுபட்ட கடன் திட்டங்களின் கீழ் இவ் வங்கிகள் தொடர்ந்தும் நிதியியல் வசதிகளை வழங்கியுள்ளன.

### ஏனைய நடவடிக்கைகள்

பி. கி. அ. வங்கிகளுக்கு ஒப்படைக்கப்பட்ட அபிவிருத்தி சார்ந்த பங்கினை நிறைவேற்றும் பொருட்டு பி. கி. அ. வங்கிகள் அவற்றின் வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவிலானதுணைப் பணிகளை வழங்கின. சமூர்த்தி நன்மை பெறுநர்கள் உட்பட தமது வாடிக்கையாளர் களுக்கு நன்மை பயக்கும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கான ஆலோசனை மற்றும் ஏனைய உதவிகளை பி. கி. அ. வங்கிகள் ஒருங்கிணைத்தன. முகாமைத்துவ நுட்பம் மற்றும் புதிய தொழில் நுட்பங்களை அறியத் தருவதன் மூலம் வாடிக்கை யாளர்களை ஊக்குவிக்கக்கூடிய கல்வி நிகழ்ச்சித் திட்டங்களாக இவை விளங்கின. நிதியியல் வசதிகளுடன் இணைக்கப்பட்ட அத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் கிராமப் பகுதிகளின் உற்பத்தியாற்றலை மேம்படுத்த உதவின.

வங்கித் தொழில் வசதிகளை அறிந்து கொள்ள வைத்தல் அதே போன்று கொடுகடன் வசதிகளின் விரிவாக்கம் ஆகிய இரண்டின் பொருட்டும் பி. கி. அ. வங்கிகள் கிராமங்களில் ஜனசமுவ கூட்டங்களைத் தொடர்ந்தும் நடத்தின. பி. கி. அ. வங்கிகள் சந்தைப்படுத்தலையும் வேளாண்மை உற்பத்திகளைப் பதனிடலையும் தொடர்ந்தும் ஊக்குவித்தன.

பி. கி. அ. வங்கிகள் சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், நிரந்தரப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம், ஐ. நா. உதவி வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிடச் செயற்றிட்டம், தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம், வடமேல் மாகாண நீர் மூல வள அபிவிருத்திச் செயற்றிட்டம், சிறிய நடுத்தர அளவு கைத்தொழில் கடன் செயற் றிட்டம், இசுறு செயற்றிட்டம் ஆகிய பல்வேறு

சிறப்புக் கொடுகடன் திட்டங்களில் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களாகவும் விளங்கின.

## கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி

1996 சனவரியல் மத்திய வங்கியில் இடம் பெற்ற பயங்கர நிகழ்வினைத் தொடர்ந்து கல்லூரியானது அங்கிருந்து தொழிற்பட்ட மத்திய வங்கித் திணைக்களங்களுக்குப் புகலிடமாகவும் விளங்கியது. இப்பின்னடைவினால் பாதிக்கப் படாத கல்லூரியானது 15 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன் இவை அப்ரகா - சென்றப் பங்கேற்பாளர்களுக்காக முகாமைத்துவ அபிவிருத்தியின் சருவதேச பயிற்சி நெறியினையும் உள்ளடக்கியிருந்தன. இவற்றில் 8 பயிற்சி நெறி களாகவும், 4 ஆய்வரங்குகளாகவும் 3 தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களாகவும் இருந்தன. அத்துடன், மாவட்ட மட்டத்தில் 35 தொழில் முயற்சி சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்தறை, காலி, புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களில் சிறு வேளாண்மையாளர் நிலமற்றோர் கொடுகடன் செயற்றிட்டத்தின் உதவியுடன் நடத்தப்பட்டது. மேலும் பயன்தரு உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவம் தொடர் பான நிபுணத்துவத்தினை பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு கல்லூரி வழங்கியது. இச் செயலமர்விற்கு இலங்கை மத்திய வங்கியும் பொதுநலவாய செயலகமும் கூட்டாக ஆதர வினை வழங்கின.

ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு பின்வருவன வற்றை பூர்த்தி செய்துள்ளது.

(அ) உதவியாளர், பங்கேற்பாளர்களின் மதிப்பீடு களுடனும் மற்றும் இணைப்பாளரின் அவதானிப்புக்கள் என்பனவற்றுடன் விபரங்களுடன் 1994 - 1996 காலப் பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் மீதான தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்தமை.

(ஆ) மத்திய வங்கி, வர்த்தக வங்கிகள், அபிவிருத்தி வங்கிகள், முதலீட்டு மற்றும் வணிக வங்கிகள் ஏனைய வங்கியல்லா நிதியில் நிறுவனங்கள் என்பனவற்றின் பயிற்சித் தேவைகளை மதிப்பிடும் பொருட்டு பயிற்சித் தேவைப் பகுப்பாய்வு அளவீடு ஒன்று நடத்தப்பட்டது. அள வீட்டில் இனங்காணப்பட்ட விடயங்களின் அடிப்படையில் 1997 ஆம் ஆண்டிற்கான குறிப்பிடப்பட்ட சில புதுவகை நிகழ்ச்சித் திட்டங்கள் முன்மொழியப்பட்டன.

கல்லூரி நூலகம் 175 நூல்களை கொள் வனவு செய்ததுடன் வெளிநாட்டிலும், உள் நாட்டிலும் காலத்திற்குக் காலம் வெளியிடப் படும் 55 சஞ்சிகைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தியது. இது 150 வெளியீடுகளையும் நன்கொடையாகப் பெற்றுள்ளது. எனினும், 1966 இல் நூலகம் மற்றைய திணைக்களங்களின் இருப்பிடமாக விளங்கியமையின் காரணமாக அதன் சுமுகமான தொழிற்பாடுகள் பெருமள விற்குப் பாதிக்கப்பட்டன.

கல்லூரியின் முழுக் கட்டடங்களும் மற்றைய திணைக்களங்களின் இருப்பிடமாக விளங்கியமை யின் காரணமாக சுய பயில்வு நிலையம் எதிர்பார்த்தது போன்று தொழிற்பட முடியாமல் போயிற்று.

## ஊழியர் சேம நிதியம்

### குண்டு வெடிப்பினைத் தொடர்ந்து ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் மீளமைப்பு

1996 சனவரி 31ஆம் நாளன்று மத்திய வங்கித் தலைமையக கட்டடத்தின் முன் இடம்பெற்ற குண்டு வெடிப்பானது கணனி தரவுத்தளம் மற்றும் பெருந்தொகையான ஆவணங்களின் அழிவிற்குப் பொறுப்பாக இருந்தது. எனினும் உறுப்பினர் உதவுதொகைகள் தொடர்பான மூலக்கோவைகளைக் கொண்ட திணைக்களத்தின் குவடிகள் மீட்கப்பட்டு 64 பிரதான வீதி, பத்தரமுல்லையிலுள்ள திணைக்க ளத்தின் புதிய அலுவலகத்திற்கு மாற்றப்பட்டன. தொடக்கத்தில் நிதியத்தின் வேலைகள் கையால் ஆரம்பிக்கப்பட்டதுடன் பின்னர் தற்காலிக கணனி வசதிகளைப் பயன்படுத்தி மீளத் தொடங்கப் பட்டன. தற்பொழுது திணைக்களம் சருவதேச அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட புதிய ஐ. பீ. எம். ஏ.

எஸ். 400 கணனி அமைப்பில் அதன் கணனி மென்கல தொகுதியை மேம்படுத்தி செயல்முறைப் படுத்துவதில் ஈடுபட்டுள்ளது.

ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் நியதிகளுக்கிணங்க உதவு தொகைகள், தண்டப் பணங்கள், நிதியத்தின் பணத்தினை முதலீடு செய்வதன் மூலம் பெறப்படும் வருவாய் மற்றும் பதிவு செய்யப்பட்ட தொழில் வழங்கநர்களினதும் தனிப்பட்ட உறுப்பினர்களினதும் பொருத்தமான கணக்குளைப் பேணல், உறுப்பினர்களின் நன்மைகளை மீளளிப்புச் செய்தல் ஆகிய பொறுப்புக்கள் மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை நிருவகித்தல் மற்றும் செயற்படுத்தல் ஆகிய விடயங்களில் ஈடுபட்டுள்ள தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமநிதியப் பிரிவுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## உதவுதொகைகள்

தற்காலிகத் தரவுகளின்படி 1996 இல் நிதியத்தினால் பெறப்பட்ட உதவுதொகைகள் 1995 இன் ரூ. 8.2 பில்லியனுக்கெதிராக ரூ. 9.9 மில்லியன் ஆக விளங்கின. இது முன்னைய ஆண்டில் பெறப்பட்ட உதவு தொகை மட்டத்தினைவிட 20.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.

## உறுப்பினர் நிலுவைகள்

ஆய்விற்குரிய ஆண்டிற்கான வட்டி ஒதுக்கப்படும் முன்னர் 1996 திசெம்பர் 31 இல் உறுப்பினர் நிலுவைகள் ரூ. 102 பில்லியனாக இருந்ததென மதிப்பிடப்பட்டதுடன் இது 1995 இன் நிலுவையைவிட ரூ 17 பில்லியன் அல்லது 20 சதவீதமான அதிகரிப்பாக இருந்தது.

## முதலீடு

ஆய்விற்குரிய ஆண்டில் நிதியம் மதிப்பிடப்பட்ட ரூ. 53 பில்லியன் கொண்ட தொகையை அரச பிணைகள், திறைசேரி உண்டியல்கள், வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை மற்றும் அரச உத்தரவாதப்படுத்தப்பட்ட முறிகள் என்பன வற்றில் முதலீடு செய்தது. இது 1995 இன் முதலீட்டைவிட ரூபா 8 பில்லியன் அதிகரிப்பாகும். 1996 திசெம்பர் 31ஆம் நாளன்று நிதியத்தின் வசமிருந்த மொத்த முதலீடுகள் ரூ. 116 பில்லியன்களென மதிப்பிடப்பட்டதுடன் இது 1995 மட்டத்தினைவிட ரூ. 20 பில்லியன் கொண்டதொரு அதிகரிப்புமாகும்.

## முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்

1989 ஆம் ஆண்டின் உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தங்களின் நிதியங்களின்படி, ஊழியர் சேம நிதியத்திற்கு அளிக்கப்பட்டிருந்த வருமானவரி விலக்களிப்பு புறக்கீடு செய்யப்பட்டது. இதன்படி, 1989 ஏப்பிறல் 1ஆம் நாளுக்குப் பின்னர் பெறப்பட்ட முதலீடுகளிலிருந்தான அனைத்து வருவாய்களும் முதலீட்டு வருமானத்தின் 10 சதவீத தடுத்து வைக்கும் வரிக்கு உட்பட்டதாகும். 1996 இல் முதலீட்டு வருமானத்திலிருந்து கழிக்கப்பட்ட மொத்த தடுத்து வைக்கும் வரியும் இவ்வாண்டில் செலுத்தப்பட்ட நிலுவைக் கொடுப்பனவுகளும் ரூ. 1.5 பில்லியனாக விளங்கின.

1995 இன் ரூபா 14 பில்லியனுக்கு எதிராக 1996 இல் முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் ரூபா 16 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

## மீளளிப்புக்கள்

1996 இல் உறுப்பினர்களின் மீளளிப்பு நன்மைகளின் வடிவில் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை 1995 இன் ரூ. 2.7 பில்லியனுக்கெதிராக ரூ. 3. பில்லியனாக விளங்கியது. ஆய்விற்குரிய ஆண்டில் நன்மைகளின் மீளளிப்புக்கான உரிமைக் கோரல்கள் 1995 இல் தீர்க்கப்பட்ட 52,258 உரிமைக் கோரல்களுக்கெதிராக 66,236 ஆகக் காணப்பட்டன.

மீளளிப்புக்களின் கொடுப்பனவை விரைவு படுத்துவதற்காகவும் செலவுகளை ஆகக் குறைந்த தாக்குவதற்குமான நோக்கில் 1996 யூன் நடுப் பகுதியிலிருந்து மக்கள் வங்கியினூடாக திணைக்களம் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறையில் இணைந்து கொண்டது.

### ஊ. சே. நி. வீடமைப்புக் கடன் திட்டம்

வீடமைப்பு நோக்கங்களுக்காக கடன் வழங்கும் நிறுவனங்கள் சிலவற்றிடமிருந்து தமது நிலுவையிலுள்ள தொகையில் 75 சதவீதம் வரையான தொகையைக் கடனாகப் பெறுவதற்கு இயலச் செய்யும் வகையில் ஊழியர் சேமநிதியச் சட்டம் 1988 இன் 42ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களாவன வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவாகும்.

1996 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சம்பந்தப்பட்ட தொழில் அலுவலர்களுக்கு ஊழியர் சேம நிதியத் திணைக்களம் நிலுவைகளை உறுதிப்படுத்தும் 67,088 விண்ணப்பங்களைச் செயல்முறைப்படுத்தி அனுப்பி வைத்தது.

## செலாவணிக் கட்டுப்பாடு

1996 இல் செலாவணிக் கட்டுப்பாட்டுக் கொள்கையின் நடைமுறைப்படுத்தலில் பெரும் மாற்றங்கள் காணப்பட்டன. நடைமுறைக்கணக்கு மாற்றல்களைக் கண்காணித்தல், கப்பற் சரக்கு அனுப்புவோர்க்கு உரிமங்களை வழங்குதல், பண மாற்றுநர்கள், சுற்றுலா விடுதிக்காரர், ஆபரணக் கடைகள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளுக்கெதிராக வெளிநாட்டு நாணயங்களை பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட உரிமங்களைப் புதுப்பித்தல் ஆகிய துறைகளிலுள்ள நடவடிக்கைகளில் திணைக்களம் தொடர்புக் கவனம் செலுத்தியது. இலங்கைக்குள் பொருட்களையும் பணிகளையும் இறக்குமதி செய்வது தொடர்பான வழிமுறை களைத் தாங்கிய 1996 மாச்சு 21 ஆம் நாளின் அரச வர்த்தமானி இல. 915/15 இன் நியதிகளின்படி இலங்கைச் சுங்கத்தினால் கருத்தறிந்து கொள்வதற்காக அனுப்பப்பட்ட இறக்குமதி விண்ணப்பங்களை தீர்வு செய்வதிலும் திணைக்களம் ஈடுபட்டிருந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமை தொடர்பான பல முக்கிய புலனாய்வுகளும் திணைக்களத்தினால் நடத்தப்பட்டன.

### மூலதன கொடுக்கல் வாங்கல்கள் வெளிநாட்டு முதலீடுகள்

ஒவ்வொரு விடயத்தினதும் அடிப்படையில் கௌரவ நிதி அமைச்சரின் ஒப்புதலுடன் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்ந்தும் இலங்கைக் கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனுமதி வழங்கியது.

### ஏற்றுமதியாளர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்கள்

ஏற்றுமதிக் கட்டளைகளை நிறைவேற்றத் தேவைப்படும் வெளிநாட்டு உள்ளீடுகளுக்கு நிதியிடும் நோக்கத்திற்காக வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவுகளில் கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களிலிருந்து செலாவணிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தின் ஒப்புதல் இல்லாமல் வெளிநாட்டு நாண யங்களில் கடன்படுவதற்கு ஏற்றுமதியாளருக்கு தொடர்ந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பொறித் தொகுதிகள் மற்றும் கருவிகளின் இறக்குமதி, உள்நாட்டு உள்ளீடுகளின் கொள்வனவு போன்ற ஏனைய நோக்கங்களுக்கான வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கு செலாவணிக் கட்டுப்பாட்டின் முன் ஒப்புதல் பெறப்பட வேண்டியதுடன் ஒவ்வொரு விடயமாக ஆராயப்பட்டே இவற்றிற்கு ஒப்புதல் வழங்கப்படும். ஆய்விற்குரிய ஆண்டில் பெறுமதி கூட்டப்பட்ட வடிவில் ஏற்றுமதிகளை உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் உள்நாட்டு உள்ளீடுகளின் கொள்வனவிற்காக தேவைப்படும் உள்நாட்டு உள்ளீடுகளின் கொள்வனவிற்காக 46 இலங்கைக் கம்பனிகள் ஏறத்தாழ ஐ. அ. டொலர் 740 இலட்சங்களை கடன்பட்டுள்ளன.

### வெளிநாட்டுக் கடன்கள்

1996 இல் சருவதேச நிதியியல் நிறுவனங்களிலிருந்தும் வர்த்தக வங்கிகளின் வெ. நா. வ. தொழில் பிரிவுகளிலிருந்தும் விடய அடிப்படையிலான ஒப்புதலை திணைக்களம் தொடர்ந்தும் வழங்கியது.

### ஏனைய மூலதன கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் /வாணிபங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட விண்ணப்பங்களுக்கு திணைக்களத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

(அ) சருவதேச ஒப்பந்தங்களுக்கான விலைக் கோரல்முறிகள், செயலாற்ற முறிகள், மற்றும் முற்பண முறிகளுக்கு வங்கி உத்தரவாதங்கள்.

(ஆ) செலாவணிக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளிலிருந்து முழுமையாக விலக்குப் பெற்ற முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கு வெளிநாட்டு நாணயங்களில் குறித்துரைக்கப்பட்ட குத்தகைகளை வழங்கல்.

(இ) சிறப்புக் கணக்குகள், வதியும் அதிதிகள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் சிறப்பு வெளிநாட்டு நாணயக் கணக்குகள் என்பனவற்றைத் திறத்தல்.

(ஈ) இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகள் மற்றும் எனைய கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து வெளிநாட்டிலிருந்து கட்டுப்படுத்தப்படும் கொண்ட கம்பனிகளின் கடன்பாடு.

(உ) வெளிநாட்டுச் செலாவணி சம்பந்தப்படாத அடிப்படையில் இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்ட பொறித் தொகுதியின் பெறுமதிக்கெதிராக வதிவல்லாதோருக்கு பங்குகளை வழங்கல்.

(ஊ) 1992 இன் யூன் 29 ஆம் நாளின் 721/4 ஆம் இலக்க அரச வர்த்தமானி அறிவித்தலின் நியதிகளுக்கிணங்க வழிப்படுத்தப்படாத நிதிகளுக்கெதிராக வதிவல்லாதோருக்கு பங்குகளை வழங்கல்.

(எ) வதிவுடைய கம்பனிகளின் மூலம் வெளிநாட்டவர்களுக்கு தொகுதிக் கடன்களை வழங்கல்.

### குடியகல்வின் மீதான மூலதன மாற்றல்கள்

1996 இல் மற்றைய நாடுகளில் குடியேற அனுமதியை / நிரந்தர வதிவிட அந்தஸ்தைப் பெற்ற 48 குடும்பங்களிடமிருந்து மூலதன நிதிகளை மாற்றல் செய்வதற்காகப் பெற்ற விண்ணப்பங்களைத் திணைக்களம் கையாண்டது. இவ் விண்ணப்பதாரிகள் செலாவணிக் கட்டுப்பாட்டின் அனுமதியுடன் ரூ. 630 இலட்சத்தினை வதிவற்றோர் தடுத்து வைத்தல் கணக்கில் வரவிலிட்டதுடன் அதில் ரூபா 130 இலட்சம் வெளியில் அனுப்புவதற்காக அனுமதிக்கப்பட்டது. வர்த்தக வங்கி களினால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின்படி 1996 திசெம்பர் 31 ஆம் நாளன்று தடுத்து வைத்தல் கணக்கிலிருந்த மீதியின் மொத்தத் தொகை ரூ. 1,960 இலட்சமாக விளங்கியது.

### நடைமுறைச் சருவதேச கொடுக்கல் வாங்கல்களைக் கண்காணித்தல்

வர்த்தக வங்கிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் நடைமுறைச் சருவதேச கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல் மற்றும் வெளிப் பாய்ச்சல்களைத் திணைக்களம் தொடர்ந்தும் கண்காணித்தது. ஏறத்தாழ 200 வெளிநாட்டு முதன்மைப் பொறுப் பாளர்களின் சார்பில் கப்பற்படுத்தல் மற்றும் வானூர்தி முகவர்கள் அதே போன்று கப்பற் சரக்கு அனுப்புவோர் ஆகியோரினால் பேணப்படும் ரூபா நடைமுறைக் கணக்குகளுக்கான வரவுகளையும் பற்றுக்களையும் சரக்குப் பட்டியல் பற்றுக் குறிப்புக்கள் உட்பணவனுப்பல்களுக்கான பற்றுச்சீட்டுக்கள் போன்றவற்றைப் பரீட்சித்ததன் மூலம் கண்காணித்தது. மின்னியல் பொறிகளைப் பயன்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### புலனாய்வுகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் சில வெளிநாட்டு உள்நாட்டுக் கம்பனிகளும் தனியாட்களும் மீறுவது பற்றி திணைக்களம் பல புலனாய்வுகளை நடத்தியுள்ளது. இப் புலனாய்வுகள் முக்கியமாக செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் ஒப்புதலின்றி பங்குகளை மாற்றல், விற்றல், கொள்வனவு செய்தல், வெளிநாடுகளில் முதலீடு, வெளிநாட்டுச் செலாவணி மாற்றல்களை மேற்கொள்ளல் என்பனவற்றுடன் தொடர்புபட்டனவாக இருந்தன.

## பொதுப்படுகடன்

நாணய விதிச் சட்டத்தின் 113 ஆவது பிரிவின் நியதிகளுக்கிணங்க, இலங்கை மத்திய வங்கி அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்ற விதத்தில் பொதுப்படுகடன் திணைக்களத்தினூடாக இலங்கை அரசின் படுகடனைத் தொடர்ந்தும் முகாமைப்படுத்தியதுடன், பொதுப் படுகடன் திணைக்களம் உள்நாட்டுப்படுகடன் வழங்கலிலும் பணிக்கொடுப்பனவுகளிலும் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளிலும் தொடர்ந்து ஈடுபட்டது. உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவத்தில் பொதுப்படுகடன் திணைக் களத்தினால் பயன்படுத்தப்பட்ட முக்கிய படுகடன் கருவிகளாக அரச பிணைகள் (ரூபாக் கடன்கள், திறைசேரி உண்டியல்கள்) திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் என்பன காணப்பட்டன.

பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டம் மற்றும் நாணய விதிச் சட்டம் என்பனவற்றிற்கு கொண்டு வரப்பட்ட திருத்தங்கள் 1995 இன் பிற் பகுதியில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமையானது இலங்கையில் பொதுப்படுகடன் பிணையங்கள் சந்தையின் அபிவிருத்திக்கான இன்றியமையாத சட்ட அமைப்பிற்கு வழியமைத்துக் கொடுத்தது.

முதனிலை வணிகர்கள் முறையை வலுவாக்கும் நோக்குடன் முதனிலை வணிகர்கள் முறை ஆண்டு முழுவதும் தொழிற்பாட்டிலிருந்ததுடன், பிணைகளின் வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளில் அவர்களுக்க வசதியளிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியில் நடைமுறைக் கணக்குகளைத் திறக்கவும் அனுமதிக்கப்பட்டது.

### பதிவுகளை மீளக் கட்டியெழுப்புதல்

1996 இல் பொதுப்படுகடன் திணைக் களத்தின் நடவடிக்கைகள் 1996 சனவரி 31 ஆம் நாளன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு மற்றும் தீ என்பவற்றினைத் தொடர்ந்து இழக்கப்பட்ட பதிவுகளை மீளக் கட்டியெழுப்புவதுடனேயே பெருமளவிற்குத் தொடர்புபட்டிருந்தன. பொதுப் படுகடன் திணைக்களம் மிகக் குறுகிய காலத்தில் அதன் தொழிற்பாடுகளை மீண்டும் வழமை நிலைக்குக் கொண்டுவரக் கூடியதாக இருந்தமைக்கு முதனிலை வணிகர்கள், நிறுவன ரீதியான முதலீட்டாளர்கள் மற்றும் எனைய முதலீட்டாளர்கள் என்போரினால் இதற்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பே பெருமளவிற்குக் காரணமாகும்.

முதனிலை வணிகர்கள் மற்றும் முதலீட்டாளர்களிடமிருந்து கிடைக்கத் தக்கதாகவிருந்த தகவல்களின் அடிப்படையில் திறைசேரி உண்டியல் தொடர்பான பதிவுகள் மீள கட்டியெழுப்பப்பட்ட வேளையில் பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட செய்தித்தாள் அறிவித்தல் கள் தொடர்பாக வழங்கப்பட்ட தகவல்களும் மற்றும் திறைசேரியில் கிடைக்கத் தக்கதாகவிருந்த தரவுகளும் அரசாங்கப் பிணைகளின் பதிவு களைக் கட்டியெழுப்ப உதவின. திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரசாங்கப் பிணைகள் மீதான கொடுப்பனவுகள் உரிய அச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டவிடத்து மட்டுமே மேற்கொள்ளப்பட்டதுடன் இவை இரத்துச் செய்யப்பட்டு பொதுப்படுகடன் திணைக்களத்திலேயே வைத்திருக்கப்பட்டன.

### அபிவிருத்தி நடவடிக்கைகள்

இலண்டனிலுள்ள பொதுநலவாய செயலகத்தின் ஒத்துழைப்புடன்இலங்கை மத்திய வங்கியினால் 1996 திசெம்பர் 9 ஆம் நாள் தொடக்கம் திசெம்பர் 16 ஆம் நாள் வரை கொழும்பில் நடத்தப்பட்ட பயன்தரு உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவம் மீதான பிராந்திய செயலமர்வு அபிவிருத்தி நடவடிக்கைகளில் முக்கியமானதாகும். தெற்கு, தென்கிழக் காசிய பிராந்தியத்திலுள்ள 11 நாடுகளின் பங்கேற்பாளர்கள் இச் செயலமர்வில் பங்குபற்றினர். செயலமர்விற்கான உதவியாளர்கள் பொதுநலவாய செயலகம், சருவதேச நாணய நிதியம், இங்கிலாந்து வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பனவற்றிலிருந்தான படுகடன் முகாமைத்துவ நிபுணர்களையும் உள்ளடக்கியிருந்தது. பொதுப் படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களுக்காக 1996 நவெம்பர் 2 ஆம் நாளன்று திறைசேரி முறி விலையிடல் மீதான செயலமர்வினையும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்காக 1996 நவெம்பர் 22 ஆம் நாளன்று திறைசேரி முறிகள் மீதான செயலமர்வினையும் நடத்தியது. இவ்விரு செயலமர்வுகளினதும் குறிக்கோள் யாதெனில் முன் மொழியப்பட்டுள்ள திறைசேரி முறிகளின்

வழங்கல் பற்றி முதனிலை வணிகர்களுக்கும், நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்கும் அறிவூட்டுவதேயாகும். அரசின் படுகடன் பிணையல்களில் முதலீடு செய்பவர்களின் புரிந்துணர்வை உயர்த்துவதற்காக முதனிலை வணிகர்களினால் கொழும்பிலும் வெளியூர்களிலும் ஒழுங்கு செய்யப்பட்ட பல செயலமர்வுகளில் பொதுப்படுகடன் திணைக்கள அலுவலர்களும் பங்குபற்றினர்.

முறிகளின் வழங்கலுக்கு வசதியளிக்கும் கணனி மென்கலவகையின் அபிவிருத்தி, நடைமுறைகளின் வடிவமைப்பு, வணிகர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் வழி காட்டல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய திறைசேரி முறிகளின் வழங்கலுடன் தொடர்புபட்ட ஆரம்ப வேலைகள் இவ்வாண்டில் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் பட்டன.

இலங்கை மத்திய வங்கி அலுவலர்களுக்கும் முதனிலை வணிகர்களுக்குமிடையிலான கலந்துரையாடல்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பொதுப்படுகடன் திணைக்களம் முதனிலை வணிகர்களுடன் வாராந்தக் கூட்டங்களை நடாத்தியது. இக் கூட்டங்கள் சந்தை பற்றிய தகவல்களை பரிமாறிக் கொள்வதிலும் வேறுபட்ட விடயங்கள் மற்றும் பிரச்சனைகள் பற்றிய கலந்துரையாடல்களுக்கான ஆய்வரங்குகளை வழங்குவதிலும் பயன்மிக்கனவாக இருந்தன. இக் கூட்டங்களில் திறைசேரி உண்டியல் சந்தையில் முதனிலை வணிகர்களின் செயலாற்றம் பற்றிய ஆய்வினை வழங்கவும் சந்தர்ப்பம் வழங்கப் பட்டது. திணைக்களத்தில் கிடைக்கத்தக்கதாக இருந்த முதலாந்தர ஏலங்கள் பற்றிய தகவல்களையும் முதனிலை வணிகர்களிடமிருந்து அவர்களின் இரண்டாந்தர நடவடிக்கை பற்றி ஒழுங்காகப் பெறப்பட்ட தரவுகளையும் பயன்படுத்தி நிறுவப்பட்ட தரவுத்தளம் முதலாந்தர வணிகர்களின் செயலாற்ற மீளாய்விற்கான புள்ளிவிபரவியல் தகவல்களை உருவாக்குவதனை இயலச் செய்தது.

அட்டவணை II.17

மொத்தப் பொதுப்படுகடன் உள்ளடக்கம்

| வகை | 1995 முடிவில் உள்ளவாறு ரூ. ப. இ. | % | 1996 முடிவில் உள்ளவாறு(அ) ரூ. ப. இ. | % |
|---|---|---|---|---|
| உள்நாட்டுப் படுகடன் | 271,006 | 44.0 | 331,190 | 48.0 |
| திறைசேரி உண்டியல்கள் | 113,771 | | 124,996 | |
| ரூபாப் பிணைகள் | 157,928 | | 205,975 | |
| திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் | 200 | | 212 | |
| வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | 7 | | 7 | |
| வெளிநாட்டுப் படுகடன் | 346,439 | 56.0 | 359,475 | 52.0 |
| மொத்தம் | 618,345 | 100.0 | 690,665 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## தொழிற்பாட்டு நடவடிக்கைகள்

1996 இறுதியில் மொத்தமாக வெளிநின்ற மொத்த அரசபடுகடன் 6,906,650 இலட்சமாக விளங்கி 1995 உடன் ஒப்பிடுகையில் ரூ. 723,200 இலட்சம் அல்லது 11.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 1996 இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் ரூ. 3,594,750 இலட்சமாக விளங்கி 1995 இன் தொகையைவிட ரூ. 130,360 இலட்சங் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. வெளிநாட்டுப்படுகடன் 52.0 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் மீதி 48.0 சதவீதத்திற்கு உள்நாட்டுப்படுகடன் பொறுப்பாக இருந்தது. அட்டவணை II.18 மொத்தப்படுகடனின் உள்ளமைப்பினைக் காட்டுகின்றது.

## திறைசேரி உண்டியல்கள்

### முதலாந்தரச் சந்தை

1996 இறுதியில் வெளிநின்ற மொத்தத் திறைசேரி உண்டியல்கள் முன்னைய ஆண்டின் ரூ. 1,137,710 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 1,249,960 இலட்சமாக விளங்கி ரூ. 112,250 இலட்சங்கொண்ட தேறிய அதிகரிப்பினைக் காட்டியது. இவ்வாண்டின் புதிய வழங்கலின் தொகை ரூ. 132,250 இலட்சமாகவும் முதிர்ச்சியடைந்த தொகை ரூ. 20,000 இலட்சமாகவும் காணப்பட்டது. 1996 இல் திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட உச்சஎல்லை ரூ. 1,250,000 இலட்சத்தில் மாற்றமின்றி இருந்தது.

குண்டு வெடிப்பின் விளைவாக ஏற்பட்ட தடங்கல்களின் காரணமாக, திறேசரி உண்டியல்களின் வாராந்த முதலாந்தர ஏலங்கள் இரு கிழமைகளுக்கு அதாவது 1996 சனவரி 31 அன்றும் பெப்புருவரி 07 ஆம் நாளன்றும் இடைநிறுத்தப்பட்டன. இவ்விரண்டு வாரங்களிலும் முதிர்ச்சியடைந்த தொகைகள் பின்னர் 1996 பெப்புருவரி 16 ஆம் நாள் முடிவடைந்த வாரத்தில் மீள வழங்கப்பட்டன. இவ்விரண்டு வாரங்களிலும் முதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியல்களின் மீள் கொடுப்பனவு தொடர்பாகவும் தீயினால் அழிந்த சான்றிதழ்களுக்குப் பதிலாக நகல் சான்றிதழ்களை வழங்குவது தொடர்பாகவும் இலங்கை மத்திய வங்கியினால் சிறப்பு நடைமுறை யொன்று பின்பற்றப்பட்டது. 1996 பெப்புருவரி 2 ஆம் நாளும் 9 ஆம் நாளும் முதிர்ச்சியடைந்த திறைசேரி உண்டியல்களின் முகப்பு பெறுமதியின் மீது முறையே ஒரு வாரத்துக்கும் இரண்டு வாரங்களுக்குமான மேலதிக வட்டி இடைநிறுத்தப்பட்ட காலத்தை உடனடுத்து வந்த வாரத்தில் காணப்பட்ட திறைசேரி உண்டியல்களின் நிறை யேற்றப்பட்ட சராசரி வீதத்தில் – ஆண்டுக்கு 18.39 சதவீதத்தில் செலுத்தப்பட்டது. நகல் திறைசேரி உண்டியல்களை வழங்கும் விடயத்தில் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட விபரமான வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டன. இவ்வழிகாட்டல்கள் முதலீட்டாளர்களுக்கு ஏற்பட்ட பெருமளவு இழப்புக்களை கவனத்திற் கொண்டு வடிவமைக்கப்பட்ட வேளையில் வழங்குநர்களினதும் நன்மைகளும் அதாவது அரசினதும் நன்மைகளும் பாதுகாக்கப்பட்டன. வங்கி உத்தரவாதம் அல்லது இழப்பீட்டு பிணை சமர்ப்பிக்கப்படுமிடத்து முதலீட்டாளர்களுக்கு நகல் உண்டியல்கள் வழங்கப்பட்டன.

இலங்கை மத்திய வங்கியின் நாணய முகாமைத்துவ உத்தியின் ஒரு பகுதியாக பொதுப்படுகடன் திணைக்களம், வங்கித் தொழில் மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் என்பனவற்றினால் பணியாற்றப்பட்ட நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவினால் முதலாந்தரச் சந்தைக்கு விடப்பட வேண்டிய தொகை, மத்திய வங்கியின் கொள்வனவு, சந்தைக்குவிடப்பட்ட முதிர்ச்சிப் பகிர்ந்தளிப்பின் தொகை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட உண்டியல்களின் முதிர்ச்சியமைப்பு என்பனபற்றி தொடர்ந்தும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

வாராந்த முதலாந்தர ஏலங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்பு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட 22 முதனிலை வணிகர்களுக்கும் நிறுவன ரீதியான முதலீட்டாளர்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. 1996 பெப்புருவரி – திசெம்பர் காலப்பகுதியில் மூலத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக் குறிப்பீடுகளின் பகிர்ந்தளிப்பினை அட்டவணை II.19 காட்டுகின்றது. முதலாந்தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களின் முக்கிய வாங்குனர்களாக தமது வாடிக்கையாளர்களின் சார்பில் தமது சொந்தச் சொத்துப் பட்டியல்களுக்காக கொள்வனவு செய்கின்ற வர்த்தக வங்கிகள் முதனிலை வணிகர்களாகக் காணப்பட்டன. வங்கி முதனிலை வணிகர்களின் கொள்வனவுகள் 47.3 சதவீதத்திற்கு வகை கூறியதுடன் இதில் 34.3 சதவீதம் அரச வங்கி முதனிலை வணிகர்களினாலும் 13.0 சதவீதம் தனியார் வர்த்தக வங்கி முதனிலை வணிகர்களினாலும் கொள்வனவு செய்யப்பட்டன. ஏனைய முக்கிய வாங்குனர்களாக 14.8 சதவீதத்திற்கு வகைகூறிய வங்கியல்லா முதனிலை வணிகர்கள் காணப்பட்டனர். தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம், மற்றும் தேசிய கூட்டுறவு சபை போன்ற அங்கீகரிக்கப்பட்ட அரசதுறை நிறுவனங்கள் 1996 பெப்புருவரி – திசெம்பர் காலப்பகுதியில் முதலாந்தர ஏலங்களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக் குறிப்பீடுகளில் 8.8 சதவீதத்திற்கும் பொறுப்பாக இருந்தன. சனவரி மாதத்துடன் தொடர்பான தரவுகள் கிடைக்கவில்லை

இவ்வாண்டில் மத்திய வங்கிக்கு வழங்கப்படட திறைசேரி உண்டியகளின் பெறுமதி ரூபா 244,010 இலட்சமாக விளங்கியது. இதில் ரூபா 81,250 இலட்சம் சிறப்பு வழங்கல் ஒன்றாக மத்திய வங்கிக்கு நேரடியாக ஒதுக்கப்பட்டது. இதேவேளையில் 1996 இல் மத்திய வங்கி அல்லா முதலீட்டாளர்களுக்கான வழங்கல் ரூபா 1,841,930 இலட்சமாக விளங்கியது.

1996 இறுதியில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் ரூ. 710,030 இலட்சம் (56.8 சதவீதம்) 12 மாத முதிர்ச்சியைக் கொண்டனவாக

அட்டவணை II.18

## மூலங்களின்படி திறைசேரி உண்டியல்களின் ஏலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக் கோரல்கள் – 1996

(ரூ. ப. இலட்சங்களில்)

| மூலம் | முதிர்ச்சிக்காலம் (மாதங்கள்) 3 | 6 | 12 | ஏனைய | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| 1. உள்நாட்டு வங்கிகள் | 63,170 | 3,782 | 31,707 | 0 | 98,659 | 47.3 |
| 1.1 அரச வங்கிகள் | 44,781 | 2,867 | 23,911 | 0 | 71,559 | 34.3 |
| 1.2 தனியார் வங்கிகள் | 18,389 | 915 | 7,796 | 0 | 27,100 | 13.0 |
| 2. வெளிநாட்டு வங்கிகள் | 14,433 | 644 | 8,213 | 0 | 23,29 | 11.2 |
| 3. வங்கியல்லாதவை | 19,225 | 1,524 | 10,091 | 0 | 30,870 | 14.8 |
| 4. நேரடி விலைக் கோரல்கள் (அ) | 8,356 | 407 | 9,596 | 0 | 18,359 | 8.8 |
| 5. செல்வாக்குக்குட்பட்ட முதலீட்டாளர்கள் (ஆ) | 7,887 | 2,307 | 2,309 | 0 | 12,503 | 6.0 |
| 6. மத்திய வங்கிக் கொள்வனவுகள் (இ) | 0 | 0 | 0 | 24,401 | 24,401 | 11.7 |
| 7. ஏனையவைகள் | 0 | 0 | 511 | 0 | 511 | 0.2 |
| மொத்தம் | 113,114 | 8,664 | 62,427 | 24,401 | 208,593 | 100.0 |
| % | 54.2 | 4.2 | 29.9 | 11.7 | 100 | |

(அ) தே. சே. வங்கி, ஊ. ந. நிதியம், தே. கூ. சபை

(ஆ) மத்திய வங்கியினால் முகாமை செய்யப்பட்ட நிதியம்.

(இ) இலங்கை மத்திய வங்கிக்கு நேரடியாக ஒதுக்கப்பட்ட தொகையையும் உள்ளடக்கும்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

இருந்தன. எஞ்சிய 43.2 சதவீதம் அல்லது ரூ. 539,920 இலட்சம் மூன்று மாத (23 சதவீதம்) ஆறுமாத (4.2 சதவீதம்) முதிர்ச்சிகளையும் இலங்கை மத்திய வங்கி வசமிருந்த ஏனைய முதிர்ச்சிகளையும் (16சதவீதம்) உள்ளடக்கியிருந்தன.

1996 ஆம் ஆண்டில் 3 மாத, 6 மாத, 12 மாத திறைசேரி உண்டியல்களுக்கான நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதங்கள் முறையே 11.98 – 19.27 சதவீதத்திற்கும் 13.06 – 19.05 சதவீதத்திற்கும் 14.40 – 19.05 சதவீதத்திற்குமிடையில் தளம்பலுற்றன. முதிர்ச்சிகளின்படி

அட்டவணை II.19

### மொத்தப் பொதுப்படுகடன் உள்ளடக்கம்

| ஆண்டு | முதிர்ச்சிக் காலம் (மாதங்கள்) 3 | 6 | 12 | பொதுவான சராசரி |
|---|---|---|---|---|
| 1992 | 17.84 | 18.02 | 18.83 | 18.34 |
| 1993 | 19.18 | 19.09 | 20.53 | 20.15 |
| 1994 | 14.32 | 14.75 | 15.90 | 14.89 |
| 1995 | 16.31 | 17.43 | 17.63 | 16.84 |
| 1996 | 16.04 | 16.46 | 17.17 | 16.46 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

நிறையேற்றப்பட்ட ஆண்டு சராசரி விளைவு வீதங்கள் பொதுவான சராசரியுடன் அட்டவணை 11.20 இல் தரப்பட்டுள்ளன. 1996 இல் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பேரிலான மொத்த வட்டிக் கடப்பாடுகள் ரூ. 185,160 இலட்சமாக விளங்கின.

1996 இல் மூன்று மாத முதிர்ச்சிக்காக பெறப்பட்ட விலைக்குறிப்பீடுகளின ஆகக் குறைந்த மற்றும் ஆகக் கூடிய சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் முறையே ஆண்டொன்றுக்கு 11.02 சதவீதமாகவும் 18.35 சதவீதமாகவும் காணப் பட்டன. இதே காலப்பகுதியில் ஆறு மாத முதிர்ச்சிக்கான ஒப்பிடத்தக்க வீதங்கள் ஆண் டொன்றுக்கு 12.22 மற்றும் 18.51 சதவீதங்களுக்கிடையில் தளம்பலுற்றன. இதே வேளையில் 12 மாத வகைக்கான நிறையேற்றப் பட்ட சராசரி விளைவு வீதங்கள் ஆண் டொன்றுக்கு 12.74 – 18.13 சதவீதங்களுக் கிடையிலான வீச்சினைக் கொண்டிருந்தன.

அட்டவணை II.20

ரூபான் கடன்களை திரட்டல் - 1996

(ரூ. ப. இ.)

| வட்டி | முதிர்ச்சி ஆண்டுகள் | கடன்களின் எண்ணிக்கை | திரட்டப்பட்ட தொகை | உதவப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 14.0 | 5 - 7 | 2 | 19,000 | 19,000 |
| 14.0 | 4 - 6 | 6 | 11,000 | 10,317 |
| 13.0 | 7 - 8 | 2 | 6,500 | 5,400 |
| 15.0 | 2 | 7 | 12,000 | 12,000 |
| 14.0 | 1 - 10 | 2 | 19,393 | 19,393 |
| 14.0 | 10 | 1 | 4,480 | 4,480 |
| மொத்தம் | | 20 | 72,373 | 70,589 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## ரூபாக்கடன்கள்

1996 இல் ரூ.723,730 இலட்சம் பெறுமதி கொண்ட மொத்தமாக இருபது ரூபாக்கடன்கள் திரட்டப்பட்டன. இவ்வாண்டில் இக்கடன் களுக்கான மொத்த உதவுதொகை ரூ. 705,890 இலட்சமாக இருந்தது. இதில் ரூ. 238,730 இலட்சம் கொண்ட தொகை இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மற்றும் அட்டன் நசனல் வங்கி என்பவற்றிற்கான அரசின் கடப்பாட்டினைத் தீர்ப்பனவு செய்வதற்காக திரட்டப்பட்ட சிறப்புக் கடன்களுடன் தொடர்பானதாக இருந்தது.எஞ்சிய ரூபாக் கடன்களின் முக்கிய உதவுநர்களாக ஊழியர் சேம நிதியமும், தேசிய சேமிப்பு வங்கியும் விளங்கின. ரூ. 434,7980 இலட்சம் அல்லது மொத்த உதவுதொகையில் 93.1 சதவீதம் இவ்விரு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களிடமிருந்து கிடைத்தது. இவ்வாண்டில் திரட்டப்பட்ட அனைத்துக் கடன்களிலும் இரண்டு ரூபாக் கடன்கள் முழுமையாக உதவப்பட்டன.

மூன்று சிறப்புக் கடன்களும் ஆண்டிற்கு 14 சதவீத வட்டி வீதத்தினைக் கொண்டிருந்தன. இக் கடன்களில் இரண்டு கடன்கள் 1 - 10 ஆண்டுகளைக் கொண்ட விருப்புக்குரிய முதிர்ச்சிக் காலத்துடன் திரட்டப்பட்ட வேளையில் மற்றையவை 10 ஆண்டுகளைக் கொண்ட நிர்ணயிக்கப் பட்ட முதிர்ச்சிக் காலத்தைக் கொண்டிருந்தன. ரூபாக் கடன்கள் தொடர்பான திரட்டல் மற்றும் பெறப்பட்ட உதவுதொகை என்பன தொடர்பான தகவல்கள் கீழேயுள்ள அட்டவணை II.20 இல் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II.21

ரூபான் கடன்களின் முதிர்ச்சி அமைப்பு 1996 இல் உள்ளவாறு

| முதிர்ச்சி ஆண்டுகளில் | தொகை (ரூபா. மி) | சதவீதம் |
|---|---|---|
| 2 | 12,000 | 5.8 |
| 3 | 5,000 | 2.4 |
| 4 | 17,000 | 8.3 |
| 4 - 5 | 16,000 | 7.8 |
| 5 | 12,005 | 5.9 |
| 5 - 6 | 14,977 | 7.2 |
| 4 - 6 | 10,316 | 5.0 |
| 6 | 5,500 | 2.7 |
| 5 - 7 | 52,215 | 25.4 |
| 6 - 7 | 5,000 | 2.4 |
| 7 - 8 | 5,400 | 2.6 |
| 8 - 10 | 1,000 | 0.5 |
| 1 - 10 | 19,393 | 9.4 |
| 10 | 5,979 | 2.9 |
| 30 | 24,088 | 11.7 |
| மொத்தம் | 205,975 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

ஆய்விற்குரிய காலப்பகுதியில் ரூ. 225,430 இலட்சங்கொண்ட பதினொரு ரூபாக்கடன்கள் மீளச் செலுத்தப்பட்டன. இதன்படி, ரூபாக் கடன்களுக்கான தேறிய உதவு தொகைகள் ரூ. 480,460 இலட்சமாக இருந்ததுடன் இத்தொகை இரு அரச வங்கிகளுக்கும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் வழங்கப்பட்ட ரூ. 238,730 இலட்சங் கொண்ட சிறப்புக் கடன்களையும் உள்ளடக்கும். இதன் விளைவாக 1996 இன் இறுதியில் மொத்த வெளி நின்ற ரூபாக் கடன்கள் ரூ. 2,059,750 இலட்சத்திற்கு அதிகரித்தன. மொத்த வெளிநின்ற ரூபாக் கடன்களின் முதிர்ச்சியமைப்பு அட்டவணை II.21 இல் எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

1996 இல் ரூபாக் கடன்கள் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் வட்டிக் கொடுப்பனவுடன் ஒப்பிடுகையில் ரூ. 225,430 இலட்சமாக விளங்கி ரூபா 480,460 இலட்சம் (10.5 சதவீதம்) அதிகரித்துக் காணப்பட்டது.

## திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள்

6 மாத, 12 மாத முதிர்ச்சிக் காலங்களுக்காக வழங்கப்பட்ட திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் ஆண்டொன்றிற்கு முறையே 17.15 சதவீத, 18.06 சதவீத விளைவு வீதங்களைக் கொண்டிருந்தன. ஆய்விற்குரிய ஆண்டில் மொத்த விற்பனைகளின் முகப்புப் பெறுமதி ரூ. 1,797 இலட்சமாக விளங்கியதுடன் இதில் ரூ. 130 இலட்சம் மற்றும் ரூ. 1,667 இலட்சங் கொண்ட தொகை முறையே மத்திய வங்கியின் நாணயத் திணைக்களத்தினாலும் தேசிய சேமிப்பு வங்கியினாலும் விற்பனை செய்யப்பட்டன. 1996 இல் திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் மொத்த மீள் கொடுப்பனவுகள் ரூ. 1,415 இலட்சங் கொண்ட முதல் தொகையையும் ரூ. 261 இலட்சம் கொண்ட வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியிருந்தன. வெளிநின்ற திறைசேரி வைப்புச் சான்றிதழ்களின் தொகை 1995 இறுதியின் ரூ. 2,003 இலட்சத்திலிருந்து 1996 இறுதியில் ரூ. 2,124 இலட்சத்திற்கு அதிகரித்தது.

## ஏனைய உள்நாட்டுப் படுகடன் கருவிகள்

இவ்வாண்டில் அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை மற்றும் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை என்பனவற்றின் முறிகள் தொடர்பாக வழங்கலோ அல்லது மீளக் கொடுப்பனவுகளோ இடம்பெறவில்லை. 1996 இறுதியில் இம்முறிகள் தொடர்பாக வெளிநின்ற தொகைகள் முறையே ரூ. 5,000 இலட்சமாகவும் ரூ. 1,410 இலட்சமாகவும் ரூ. 830 இலட்சமாகவும் காணப்பட்டன.1996 இறுதியில் வெளிநின்ற வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் தொகை ரூ. 70 இலட்சமாகும். 1996 இல் மத்திய வங்கி பிணைகளின் வழங்கலோ அல்லது மீள் கொடுப்பனவோ காணப்படவில்லை.

## வெளிநாட்டுப்படுகடன்

1996 இறுதியில் மொத்த வெளிநின்ற வெளிநாட்டு அரச படுகடன் ரூ. 3,594,750 இலட்சமாக விளங்கி 1995 இறுதியில் காணப்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 130,360 இலட்சம் (3.8 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது. 1996 இறுதியில் வெளிநின்ற மொத்தத் தொகையில் இருபுடைக் கடன்கள் ரூ. 1,886,220 இலட்சமாக (52.5 சதவீதம்) விளங்கிய வேளையில் பல்புடை மற்றும் வர்த்தகக் கடன்கள் முறையே ரூ. 1,603,990 இலட்சமாகவும் (44.6 சதவீதம்) ரூ. 104,540 இலட்சமாகவும் (2.9 சதவீதம்) காணப்பட்டன. இருபுடை வகையில் முக்கிய கடன் வழங்குனர்களாக யப்பான், ஐக்கிய அமெரிக்க நாடுகள், சேர்மனி என்பன காணப்பட்டன. இம் மூலங்கள் மொத்த இருபுடைக் கடன்களில் 88.2 சதவீதத்திற்கு வகைகூறின. பல்புடைக்கடன் வகையில் மிகப் பெரும் கடன் வழங்குனராக விளங்கும் சருவதேச அபிவிருத்தி அமைப்பு ரூ. 859,610 இலட்சம் அல்லது மொத்தப் பல்புடைப் படுகடனில் 53.6 சதவீதத்திற்கு வகைகூறியது.

நிதியங்களின் பயன்பாட்டுப்படி வகைப் படுத்துகையில் மொத்த அரச வெளிநாட்டு படுகடனில் செயற்றிட்ட நிகழ்ச்சித்திட்ட மற்றும் பண்டக் கடன்கள் முறையே ரூ. 2,638,530 இலட்சமாகவும் (73.4 சதவீதம்) ரூ. 386,180 இலட்சமாகவும் (10.7 சதவீதம்) ரூ. 308,340 இலட்சமாகவும் (8.6 சதவீதம்) காணப்பட்டன. அட்டவணை II.22 அரச வெளிநாட்டுப் படுகடனின் உள்ளமைப்பினை கொடை

அட்டவணை II.22

வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப் படுகடன்
1996 இல் உள்ளவாறு

| வகை | (ரூ. ப. இலட்சங்களில்) | % |
|---|---|---|
| 1. கொடை வகைப்படி | 359,475 | 100.0 |
| இருபுடை | 188,622 | 52.5 |
| பல்புடை | 160,399 | 44.6 |
| வர்த்தக | 10,454 | 2.9 |
| 2. நிதிகளின் பயன்பாட்டுப்படி | 359,475 | 100.0 |
| காசு | 1,481 | 0.4 |
| பண்டம் | 30,834 | 8.6 |
| உணவு | 24,528 | 6.9 |
| நிகழ்ச்சித்திட்டம் | 38,618 | 10.7 |
| செயற்றிட்டம் | 263,852 | 73.4 |
| தொழில்நுட்ப உதவி | 156 | ... |
| ஏனைய | 6 | ... |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

வழங்குனர் மற்றும் நிதியின் பயன்பாட்டு என்பவற்றின்படி காட்டுகிறது. 1996 இல் மொத்த முதல் தொகையின் மீள் கொடுப்பனவு, வட்டி, மற்றும் வெளிநாட்டு அரசபடுகடன் மீதான கட்டணங்கள் என்பன முறையே ரூ. 89,640 இலட்சமாகவும், ரூ. 68,280 இலட்சமாகவும் விளங்கின. 1996 இல் மொத்தப் பகிர்ந்தளிப்பு ரூ. 239,340 இலட்சமாக விளங்கின.

## பிரதேச அலுவலகங்கள்

கொழும்பிலுள்ள மத்திய வங்கி தலைமை அலுவலகத்தை குண்டு வெடிப்புச் சேதமாக்கிய போதும் 1996 இல் மாத்தறை, அனுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களிலுள்ள மத்திய வங்கியின் மூன்று பிரதேச அலுவலகங்களும் எவ்விதத் தடங்கலுமின்றி தமது அலுவல்களை மேற்கொண்டன. பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய தொழிற்பாடுகள் அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகள் அதே போன்று அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட வழமையான மத்திய வங்கித் தொழில் நடவடிக்கைகள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கியிருந்தன. இவை நாணயத் தொழிற்பாடுகள், காசோலைத் தீர்ப்பனவு நடவடிக்கைகள், தரவுச் சேகரிப்பு, நுகர்வோர் நிதி சமூக பொருளாதார அளவீட்டில் பங்கேற்பு, நன்மை பெறுநர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் நடவடிக்கைகளைப் பரீட்சித்தல், பிரதேச அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு உதவுதல் தொடர்பான பிரதேசங்களில் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டிருக்கும் அரச திணைக்க ளங்கள் மற்றும் முகவராண்மைகள் அமைப்புக்கள் என்பனவற்றுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தல் என்பனவற்றை உள்ளடக்கும்.

மாத்தறைப் பிரதேச அலுவலகம், சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம், உள்நாட்டு உண்டியல் திட்டம், தென்மாகாண கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் சிறு வேளாண்மையாளர் நில மற்றோர் கொடுகடன் செயற்றிட்டம் என்பனவற்றுடன் தொடர்பான நடவடிக்கையைக் கையாண்டது. சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டத்தினால் வழங்கப்பட்ட நிதிகளின் முழுமையான பயன்பாட்டினை மேம்படுத்தும் நோக்குடன் காலி, மாத்தறை மாவட்டங்களில் பிரதேச அலுவலகம் பல கொடுகடன் அமர்வுகளை மேற்கொண்டதன் வாயிலாக பல நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டது. இவ்வாறான நடவடிக்கைகளில் பிரதேச அலுவலகத்திற்கு தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி மேலாண்மைச் சபையும் கிராமிய கொடுகடன் திணைக்களமும் உதவின. பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களின் அலுவல்களும் சிறு உடைமையாளர்களும் இக்கொடுகடன் அமர்வுகளில் பங்கேற்றனர். பிரதேச அலுவலகம் இப்பிரதேசத்தில் அரச திணைக்களங்கள், வர்த்தக வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றைய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் உதவியது. மேலும், பிரதேச அலுவலகம் பி. கி. அ. வங்கிகளினது பல கிளைகளின் பரீட்சிப்பு வேலைகளையும் மேற்கொண்டது. பிரதேச அலுவலகத்தின் நாணயப் பிரிவு இப்பிரதேசத்திலுள்ள வர்த்தக வங்கிகளுக்கு நாணய வைப்பு மற்றும் மீளப்பெறல் வசதிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. இவ்வாண்டுக் காலப் பகுதியில் மாத்தறையிலுள்ள பிரதேச காசோலை தீர்வகத்தில் ரூ. 27,230 இலட்சம் பெறுமதியான 191,380 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டன.

அநுராதபுரம் பிரதேச அலுவலகம் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ள அரச திணைக்களங்கள் மற்றும் முகவர்களுடன் இணைந்து 1,000 இற்கு மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்ட 23 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதன் மூலம் பொருளாதார ரீதியில் ஆற்றல் வாய்ந்த தொழில் முயற்சிகளை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் வறிய கிராம மக்களை வழிநடத்தி அறிவூட்டுவதற்கு முயற்சி செய்தது. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வேளாண்மைக் கால்நடை வளர்ப்பு, அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி ஆகிய துறைகளுடன் தொடர்புபட்டனவாக இருந்தன. சமூர்த்தி மற்றும் அநுராதபுரம் மாத்தளை விவசாய நிகழ்ச்சித் திட்டங்களின் மீது சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. சமூர்த்தி முகாமையாளர்களுக்கும் வழிகாட்டிகளுக்கும் வங்கித்

தொழில், கிராமியக் கொடுகடன் மற்றும் செயற்றிட்டங்களை இனங்காணல் என்பனவற்றில் பயிற்சி வழங்கப்பட்டது. சமூர்த்தி நன்மை பெறுவோரும் வேளாண்மை அபிவிருத்தி மேலாண்மைச் சபை மற்றும் வேளாண்மைப் பணிகள் திணைக்களம் என்பனவற்றின் ஒத்துழைப்புடன் சுயவேலைவாய்ப்பு செயற்றிட்டங்களில் பயிற்சி பெற்றனர். தெரிந்தெடுக்கப்பட்ட இளைஞர்கள் அநுராதபுரம், மாத்தளை விவசாய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்றிட்ட இனங்காணல், கணக்கிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல் போன்றவற்றில் பயிற்சிகளைப் பெற்றனர். பிரதேச அலுவலகத்தினால் நடத்தப் பட்ட மற்றைய நான்கு பயிற்சித் திட்டங்களில் 700 இற்கு மேற்பட்ட பங்கேற் பாளர்கள் கலந்து கொண்டதுடன் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்வி சார்ந்த கல்விசார் ஆய்வரங்குகள் பெண்களுக்கான செயற்றிட்டங்களில் சட்டப் பண்புகள் மற்றும் வங்கி அலுவலர்களுக்கான சட்டப் பண்புகள் மீதான ஆய்வரங்குகள் என்பனவற்றையும் இவை உள்ளடக்கியிருந்தன. 1996 இல் பிரதேச அலுவலகம் மாவட்டத்திலுள்ள பங்கேற்கும் கிராமிய அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கண்காணிப்பினையும் பொறுப்பேற்றுக் கொண்டது. மேலும் பிரதேச அலுவலகம் புத்தளம், குருநாகல், அநுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலுள்ள பி. கி. அ. வங்கிக் கிளைகளின் பரீட்சிப்புக்களையும் மேற்கொண்டது. பிரதேச அலுவலகம் வர்த்தக வங்கிகளுக்கு நாணயத்தினை வழங்கியதுடன் வர்த்தக வங்கிகளின் வைப்புக்களையும் ஏற்றுக் கொண்டது. இவ்வாண்டில் பிரதேச தீர்வகம் ரூ. 19,070 இலட்சம் பெறுமதி கொண்ட 190,563 காசோலைகளைத் தீர்ப்பனவு செய்தது.

மாத்தளைப் பிரதேச அலுவலகம் அதன் அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகளை தீவிரமாக்கியது. பிரதேச அலுவலகம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக வழங்கப்பட்ட உதவிகளின் மீது சிறப்புக் கவனத்தைச் செலுத்தியது. எடுத்துக்காட்டாக, இவ்வாண்டுக் காலத்தில் பிரதேச அலுவலகம் மூலவளங்கள் அதேபோன்று இப் பிரதேசத்தின் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதியின் (தெரணியகல) தொழில் வாய்ப்பற்ற ஆட்கள் ஆகிய இரண்டினையும் தொழில் வாய்ப்பற்ற ஆட்களிலிருந்து இனங்காணப்பட்ட குழுவினரால் தெரிந்தெடுக்கப்பட்ட தொழில் வாய்ப்புக்கான துறைகளையும் இனங் கண்டு கொண்டது. பிரதேசத்தின் மூலவளங்களை அபிவிருத்தி செய்யவும் தொழில் வாய்ப்பற்றோர்களினால் அவர்களின் தொழில் வாய்ப்பிற்காக தெரிவு செய்யப்பட்ட பாற் பண்ணை, இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைகத்தொழில்கள், ஊர்தி ஓட்டுதல், கொத்தனார், மரவேலை போன்றவற்றில் பயிற்சியளிக்கவும் ஏற்ற விதத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைக்கப்பட்டன. பயிற்சி வழங்கத்தக்க முக்கிய துறையாக இரத்தினக்கல் கைத்தொழிலை பிரதேச அலுவலகம் இனங்கண்டுள்ளது. இரத்தினக் கற்களை வெட்டுதல் மற்றும் பட்டை தீட்டல் நகை செய்வதற்கான கைவினையாற்றல் ஆகியவற்றில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் இது மாத்தளையில் அகழ்ந் தெடுக்கப்பட்ட பட்டை தீட்டப்படாத இரத்தினக் கற்களின் விற்பனைக்கெதிராக வெட்டப்பட்டு பட்டை தீட்டப்பட்ட இரத்தினக் கற்களினதும் அதே போன்று ஆபணரங்களினதும் வருவாயை யும் விற்பனைகளையும் உயர்த்தும். இலங்கை இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் மேலாண்மைச் சபையின் உதவியுடன் இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்கள் கண்காட்சியொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. பிரதேச அலுவலகம் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் அலுவர்களுக்காக பல பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் பாற்பண்ணை அபிவிருத்தி மற்றும் சிறிதளவு அரிசி பதனிடல் என்பனவற்றிற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடத்தியது. பிரதேச அலுவலகம் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திக் கொடுகடன் திட்டம் மற்றும் நிரந்தர பயிர் அபிவிருத்தி கொடுகடன் நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றுடன் தொடர்பான திட்டங்களையும் கையாண்டது. பிரதேச அலுவலகம் கண்டி பி. கி. அ. வங்கிக் கிளைகளின் நடவடிக்கைகளை பரிசோதித்ததுடன் பிரதேசத்தி லுள்ள பி. கி. அ. வங்கிகளின் நடவடிக்கைகளையும் பரீட்சித்தது. மாத்தளையிலும் கண்டியிலுமுள்ள இரு தீர்வகங்களும் முறையே ரூ. 15,740 இலட்சம் கொண்ட 124,831 காசோலைகளையும் ரூ. 197,090 இலட்சங் கொண்ட 632,624 காசோலைகளையும் தீர்ப்பனவு செய்தன.

# செயலகம்

1996 ஆம் ஆண்டு திணைக்களத்துக்கு ஒரு சவாலான ஆண்டாக விளங்கியது. 1996 ஆம் ஆண்டு சனவரி 31 ம் நாளன்று இடம் பெற்ற குண்டு வெடிப்பு மத்திய வங்கிக் கட்டிடத்தை கடுமையாக சேதப்படுத்தியதுடன் அதன் பெரும்பாலான தளபாடங்களையும், கருவி களையும் ஆவணங்களையும் அழித்துவிட்டது. கட்டடத்தை மீள அமைப்பதற்கான செலவு ரூ. 20,000 இலட்சங்களென மதிப்பிடப்பட்டுள்ளது. வங்கியின் பொதுவான நிருவாகத்திற்கு திணைக்களமே பொறுப்பாக இருந்து வருவ தனால் வங்கியின் தொழிற்பாடுகளை வழமை நிலைக்கு திருப்பி கொண்டுவரும் பாரிய பொறுப்பு செயலக திணைக்களத்தை சார்ந்ததாக இருந்தது.

குண்டு வெடிப்பில் 41 ஊழியர்கள் தம் உயிரை இழந்ததுடன் மேலும் 20 பேர் நிரந்தர ஊனமடைந்ததுடன் உரிய காலத்திற்கு முன்பே அவர்கள் ஓய்வு பெற் நிர்பந்திக்கப்பட்டனர். ஊழியர்கள் தொடர்பாக அரசினால் பின்பற்றப் பட்ட முறைகளை பெருமளவுக்கு ஒத்த முறையில் இறந்தவர்களில் தங்கியிருந்தவர்களுக்கும் ஊன முற்றோருக்கும் நிதியியல் நிவாரணங்களைக் கொண்ட திட்டமொன்றினை வங்கி நடைமுறைப் படுத்தியது. குண்டுவெடிப்பில் இறந்தவர்களில் தங்கியிருப்போருக்கு அத்தகைய ஊழியர்கள் அவர்கள் ஓய்வு பெறும் தற்காலிகமாக வயது வரை பெறக்கூடிய சம்பளங்களும் நன்மைகளும் வழங்கப்பட்ட வேளையில் நிரந்தர ஊனமடைந்த ஊழியர் களுக்கும் அவர்களது ஓய்வு பெறும் வயது வரை அத்தகைய நன்மைகள் வழங்கப் பட்டன. இதற்கு மாற்றாக விரும்புமிடத்து தற்போதைய பெறுமதியில் ஐந்தாண்டு மொத்தச் சம்பளத்துக்கு சமமான முழுத்தொகை ஒன்று வழங்கப்பட்டது. ஓரளவுக்கு ஊனமடைந்த ஊழியர்களுக்கு வைத்தியசபையின் விதந்து ரைப்பிற்கிணங்க அவர்களது வருவாய் இயல ளவினது சதவீத இழப்பீட்டின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் உடல் நிலை நலன் புரி என்பனவற்றையும் வங்கி தொடர்ந்து கவனித்தது.

கொழும்பு கோட்டையில் அமைந்திருந்த வங்கியின் பெரும்பாலான திணைக்களங்கள் இராசகிரியாவிலுள்ள கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியில் தற்காலிகமாக அமைவு பெற்றன. மட்டுப்படுத்தப்பட்ட இட வசதியே இருந்தமையின் காரணமாக சில ஊழியர்கள் முறைமாற்று அடிப்படையில் வேலை செய்வதற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. இதேபோன்று ஊழியர்களின் வரவு விடுப்புப் பயன்பாடு என்பன குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தளர்த்தப்பட்டன. 1996 நவம்பரில் வங்கி அதன் தலைமை அலுவலகத்தை கொழும்பு கோட்டை எச்சலன் சதுக்கத்திலுள்ள உலக வர்த்தக நிலையத்தில் மீள அமைத்துக் கொண்டது.

திணைக்களம் மற்றைய திணைக்களங் ளுக்குத் தேவைப்பட்ட தளபாடங்கள் மற்றும் கருவிகளின் கொள்வனவினை அவசர அடிப் படையில் கவனிக்க வேண்டியிருந்தது. இந் நோக்கத்திற்காக வங்கியின் வழமையான கொள்வனவு நடைமுறைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன. கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கோரலின் அடிப்படையில் கொள்வனவு களுக்கு ஒப்புதல் வழங்குவதற்கு நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். கணனி கள், அச்சுப் பொறிகள் , மின்னியல் தட்டைச்சுகள், வசன செயல்முறைக்கருவிகள் போன்ற மூலதன செலவினத்தைக் கொண்ட மிகத் தேவையான விடயங்கள் இவ் வழிகளில் குறைவாகக் கொள்வனவு செய்யப்பட்டன. பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் திணைக்களம் தள பாடங்களை வாடகைக்கு எடுக்க வேண்டி யிருந்தது.

சொத்துக்கள், தளபாடங்கள், கருவிகள் என்பனவற்றிற்கு ஏற்பட்ட பெரும் சேதங்களை கருத்திற்கொண்டு 1996 இலும் அதனைத் தொடர்ந்து வந்த ஆண்டிலும் கணிசமான மூலதனச் செலவினத்தை செலவிட வேண்டி யிருந்தது. இவ்வழங்கல்கள் கவனமாகக் கண்காணிக்கப்பட்ட நிர்வாகம் மற்றும் மூலதன செலவின வரவு செலவுத் திட்டம் என்பனவற்றிற்கு உட்பட்டி ருந்தமையின் காரணமாக இவற்றின் கொள்வன வுகள் மீது வங்கி கடுமையான சிக்கன நடவடிக்கைகளைக் கையாண்டது.

## தகவலும் வெளியீடுகளும்

தகவல் திணைக்களம் 31.01.96 இல் இடம் பெற்ற குண்டு வெடிப்பினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. திணைக்களம் அதன் பத்து அலுவலர்களை இழந்ததுடன் சமூகப் பொருளாதார அபிவிருத்தித் துறையில் இலங்கையின் மூலவள நிலையமாகக் கருதப்பட்ட மத்திய வங்கி நூலகமும் திணைக்களத்தின் விற்பனைப் பிரிவு மற்றும் தொடர்புப் பிரிவு ஆகிய இரண்டும் முழுமையாக அழிக்கப்பட்டன.

திணைக்களம் தகவல் சேகரிப்பது மற்றும் பரப்புவது என்ற அதன் பங்கினைத் தொடர்ந்தும் மேற்கொள்ளுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. நூலகத்தை மீள நிறுவுவதற்காக மத்திய வங்கி நூல்களையும் வெளியீடுகளையும் சருவதேச அமைப்புக்களிலிருந்தும் நிறுவனங்க ளிலிருந்தும் அன்பளிப்பாகப் பெற்றுள்ளது. திணைக்களம் நூலகத்திற்காக தற்போதைய பருவகால வெளியீடுகளையும் அடிப்படை உசாத்துணை நூல்களையும் வாங்கியுள்ளதுடன் ஆண்டின் இறுதிப் பகுதியில் வங்கியின் அலுவலர் களுக்கான அதன் பணிகளையும் தொடங்கக் கூடியதாக இருந்தது. தகவல் திணைக்களத்தி னூடாக பின்வரும் மத்திய வங்கி வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

1. ஆண்டறிக்கை (1995) சிங்களம், தமிழ், ஆங்கிலம்.
2. பொருளாதார அளவீடு 1996 இன் முதல் அரைப் பகுதி (சிங்களம், தமிழ், ஆங்கிலம்)
3. மாதாந்தச் செய்தித் திரட்டு (சிங்களம், தமிழ், ஆங்கிலம்.)
4. சமூகப் பொருளாதார தரவு மடிப்பு - 1995 (சிங்களம், தமிழ், ஆங்கிலம்.)
5. இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள 1996 (ஆங்கிலம்)
6. தர்ஷண தொகுதி II சிங்களம்

திணைக்களத்தின் சொந்த வெளியீடுகளான சட்டகன, செய்தி அளவீடு, மத்திய வங்கிச் செய்திக் கடிதம் என்பன புதிய வடிவில் மாதாந்தம் வெளியிடப்பட்டன.

தொடர்புப் பிரிவு நாளாந்தச் செலாவணி வீதங்கள், உணவு மற்றும் காய்கறி விலைகள், திறைசேரி உண்டியல் ஏலங்கள் பற்றிய தகவல்கள் மற்றும் வங்கியின் ஏனைய விளம்பரங்கள் என்பனவற்றை செய்தித்தாள்களுக்கும் மின்னியல் தொடர்பு சாதனங்களுக்கும் வழங்குகின்ற அதன் தொழிற்பாட்டினைத் தொடர்ந்தும் மேற் கொண்டது. இப்பிரிவு 31.01.96 இன் நிகழ்வின் தீங்கியல் விளைவுகளைப் பற்றியும் 11ஆம் உலக யுத்த காலத்தில் இலங்கையின் பொருளாதாரம் பற்றியும் செய்திப் படங்களைத் தயாரித்தது. பின்னைய படம் தொலைக்காட்சியில் ஒளி பரப்பப்பட்டது.

கட்புல ஒவியப் பிரிவு முகப்பு அட்டைப் படங்களையும் விளம்பரச் சுவரொட்டிகளையும் மத்திய வங்கி வெளியீடுகளின் மேலட்டை பக்கங்களையும் தொடர்ந்தும் வடிவமைத்தது.

அச்சகம் மத்திய வங்கியின் பெரும்பாலும் அனைத்து அச்சிடல் வேலைகளையும் மேற் கொண்டதுடன் இவ்வாண்டில் மத்திய வங்கி ஆண்டறிக்கை (சிங்களம், ஆங்கிலம்) பொரு ளாதார அளவீடு 1996 இன் முதலரைப்பகுதி (ஆங்கிலம், சிங்களம், தமிழ் மாதாந்தச் செய்தித் திரட்டு (ஆங்கிலம்) மற்றும் ஏனைய புள்ளி விபரவியல் ஆவணங்கள் என்பன உட்பட 440 அச்சிடல் பணிகளை நிறைவு செய்தது. அச்சகம் முதன் முறையாக மத்திய வங்கியின் 1997 ஆம் ஆண்டிற்கான சிறிய நாட் குறிப்பேட்டினை அச்சிடும் வேலைகளையும் பொறுப்பேற்றுக் கொண்டது.

## ஆராய்ச்சி நடவடிக்கைகள்

1996 சனவரி 31ஆம் நாள் இடம் பெற்ற பயங்கரவாதிகளின் தாக்குதலைத் தொடர்ந்து, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் அதன் இன்றியமையாத தொழிற்பாடுகளை மீளக் தொடங்குவதிலும் அதன் தரவுத் தளத்தை மீள கட்டி யெழுப்புவதிலும் பெரும் சவால்களை எதிர் நோக்கியது. 1996 இற்கான வங்கியின் ஆண்டறிக்கையை சட்டரீதியாக 1996 ஏப்பிரல் 30 ஆம் நாளுக்கு முன்னர் வெளியிடப்பட

வேண்டியிருந்ததே திணைக்களத்தின் உடனடியானதும் முக்கியமானதுமான பொறுப்பாக இருந்தது. கடினமான வேலைச் சூழல் காணப்பட்டபோதும் திணைக்களம் சேதமடைந்த கோபுரத்திலிருந்து ஆவணங்களையும் பதிவுகளையும் உடனடியாக மீட்டதுடன் வெளி மூலகங்களிலிருந்தும் தேவையான மூலங்களைத் திரட்டிக் கொண்டது. மூல ஆவணங்கள், கணனிகள் அதேபோன்று தொடர்பூட்டல் வசதிகள் போதாமை போன்ற மூலவளங்களின் கிடைக்கும் தன்மை வரையறுக்கப்பட்டிருந்தமையானது பணிகளுக்கு மேலும் சவால் விடுவதாயிருந்தது. எனினும், அலுவலர்கள் அர்ப்பண சிந்தையுடன் ஒருங்கிணைந்த மனோபாவத்துடன் வேலை செய்தமையுடன் திணைக்களத் தொழிற்பாடுகள் மறுபடியும் தொடங்கியமையானது ஆண்டறிக்கையினைச் சரியான நேரத்தில் தயாரித்தமை மட்டுமன்றி புதிய பண்புகள், கூடியளவு தகவல்கள் மற்றும் மிக நுட்பம் வாய்ந்த நவீன அமைப்பு என்பன சேர்க்கப்பட்டதன் மூலம் நிரூபிக்கப்பட்டது.

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் பொருளாதார மற்றும் நிதியியல் புள்ளி விபரங்களின் சேகரிப்பிற்கும் பகுப்பாய்விற்கும் பொறுப்பாக இருப்பதுடன் கொள்கை வடிவமைப்பில் ஆளுநரினதும் நாணயச்சபையினதும் வழிகாட்டல்களுக்கான பொருளாதார ஆராய்ச்சிகளை நடாத்தியதுடன் பொதுமக்களுக்கான தகவல்களையும் வழங்கியது. ஆண்டறிக்கைக்கு மேலதிகமாக திணைக்களம் மாதாந்தச் செய்தித்திரட்டு 1996 இன் முதலரைப்பகுதிக்கான பொருளாதார அளவீடு என்பவற்றிற்குப் பொறுப்பாக இருந்ததுடன் அதே போன்று வாராந்த நிதியியல் புள்ளி விபரங்களைச் செய்தித் தாள்களினூடாகப் பொதுமக்களுக்கு வழங்கியது. திணைக்களம் நியதித் தேவையொன்றான வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் செத்தெம்பர் 15 ஆண்டறிக்கையை நிதியமைச்சுக்கு தயாரித்துச் சமர்ப்பித்தது.

மேலும் திணைக்களம் சருவதேச பண்ட விலைகள் மீதான வாராந்தக் குறிப்பு, இறக்குமதி ஏற்றுமதிகள் மீதான மாதாந்த வர்த்தகப் புள்ளி விபரங்கள் சருவதேச சந்தைகளில் தேயிலை, இறப்பர் ஏலங்களின் மீதான வாராந்த அறிக்கைகள், மாதாந்த பண்ட ஆய்வுகள் என்பனவற்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தியதுடன் பல்வேறுபட்ட பொருளாதார விடயங்கள் பற்றிய கவனிப்புக்களையும் விதந்துரைப்புக்களையும் நாணயச் சபைக்கும், கேட்டுக் கொள்ளப்படுமிடத்து அமைச்சுக்களுக்கும் ஏனைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கும் அறிக்கையாக வழங்குகின்றது. இவ்வாண்டில் கைத்தொழில் உற்பத்திகள் மீதான அரையாண்டு மற்றும் ஆண்டு அளவீடுகள் தொடர்ந்தும் நடத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக 1996 யூனில், 1991 – 96 காலப்பகுதியை உள்ளடக்கிய தயாரிப்புத்துறையில் அண்மைக்கால கைத்தொழில் உறவு முறை மற்றும் தொழிலாளர் உற்பத்தித் திறன் என்பன தொடர்பாக தொழில் தருநர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுவதற்காக திணைக்களத்தினால் கைத்தொழில் உறவு முறையும் ஊழியர் உற்பத்தித் திறனும் என்ற மாதிரி அளவீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. திணைக்களம் சருவதேச நாணய நிதியத்திற்கு ஒழுங்கான அடிப்படையில் தொடர்ந்தும் தரவுகளை வழங்கியது. திணைக்களம் 1996 மேயில் சருவதேச நாணய நிதிய பேராளர் குழுவுடன் அரசின் கலந்துரையாடலுக்கான இணைப்பை ஏற்படுத்தியது. மேலும் ஏனைய சருவதேச நிறுவனங்களுக்கான தரவு ஏற்பாடு, அத்தகைய நிறுவனங்களுடனான உறவு முறைகளை இணைத்தல் ஆகிய வழமையானவை தொடர்ந் தும் இடம் பெற்றன. அத்துடன் திணைக்களம் 1996 திசெம்பரில் இந்திய ஒதுக்கு வங்கியின் நிருவாகப் பணிப்பாளர் முனைவர் வாசுதேவவினால் நடத்தப்பட்ட "நிதியியல் துறையின் சீராக்கங்களை சிறப்பாக தொடர்பு படுத்திய விதத்தில் இந்தியாவில் நாணய முகாமைத்துவத்தில் சில விடயங்கள்" என்ற விடயத்தின் மீது கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்தது. மேலும் திணைக்களம் " அண்மைய பொரு ளாதார அபிவிருத்திகளும் நடைமுறைப் பொருளாதார விடயங்களும் " என்பது பற்றி பொருளாதார பகுப்பாய்வு மற்றும் நிதியியல் செய்திகளுடன் தொடர்புபட்ட வெகுசனத் தொடர்புத்துறை ஆட்களுக்காக 1996 யூலையில் கொழும்பில் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் இரு கலந்துரையாடல்களை நடத்தியது.

திணைக்களத்தின் அலுவலர்கள் நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவு, திறைசேரி உண்டியல் விலைக்கோரல் குழு, சென்மதி நிலுவைக்குழு,

செலாவணி வீதக்குழு, மற்றும் நிதியியல் துறை கண்காணிப்பாளர் பிரிவு போன்ற கொள்கை விடயங்கள் பற்றிய உள்ளகக் குழுக்களிலும் பணி யாற்றினர். அலுவலர்கள் உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் நடாத்தப்பட்ட ஆய்வரங்குகளில் பொருளாதார விடயங்கள் பற்றிய ஆய்வறிக்கை களையும் சமர்ப்பித்தனர்.

இலங்கைக்கு பேரண்டப் பொருளாதார, மாதிரியொன்றை விருத்தி செய்வதற்காக 1996 இல் திணைக்களம் பேரண்டப்பொருளாதார மாதிரி அலகு ஒன்றை உருவாக்கியது. இது விருத்தி செய்யப்பட்டவுடன் எதிர்வு கூறலுக்கும் கொள்கை உருவாக்கத்துக்கும் பயன்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## அளவீகளும் தரவுச் சேகரிப்பும்

புள்ளி விபரவியல் திணைக்களம் தேசிய கணக்குகள் உட்பட விலைகளும் கூலிகளும் மற்றும் தொழில் நிலை என்பனவற்றை உள்ள டக்கிய சமூக பொருளாதார தரவினைத் திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல், வெளியிடுதல் என்பன தொடர்பான அதன் தொழிற்பாட்டி னைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. இவ் வாண்டில் நாட்டின் முதன்மைச் சந்தைகளில், உணவு விடயங்களின் மொத்த, சில்லறை விலைகளை நாளாந்த அடிப்படையில் செய்தித் தாள்கள் மற்றும் மின்னியல் தொடர்பு சாதனங்களின் வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கை யாதெனில் நாட்டின் பொருளாதார நிலைமைகள் பற்றிய புள்ளி விபரத் தகவல்களின் முக்கிய மூலமாக விளங்கும் 1996/97 இற்கான நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு நடத்தப்பட்டமையேயாகும்.

### நுகர்வோர் நிதி மற்றும் சமூக பொருளாதார அளவீடு

நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொரு ளாதார அளவீடு 1996/97 இன் தரவு சேகரிப்பு வேலைகள் 1996 ஒக்தோபரில் புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் தொடங்கப்பட்டது. இது, 1953 இலிருந்து இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கான கால இடைவெளியில் நடத்தப்படும் நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார அளவீட்டுத் தொடரில் இது ஏழாவது தொட ராகும். இத் தொடரில் கடைசி அளவீடு 1986/87இல் நடத்தப்பட்டது. இவ்வளவீட்டின் முக்கிய குறிக்கோள் குடிப்பரம்பல் பண்புகள், குடும்ப அலகுகளின் வருமானம், செலவினம், நுகர்வு, தொழில் நிலை சேமிப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய சமூகப் பொருளாதார நிலைமைகள் மீதான அனைத்தையும் உள்ளடக்கிய தரவுகளைச் சேகரிப்பதேயாகும். இவ்வளவீட்டின் கீழ் சேகரிக்கப்பட்ட மாகாண தரவுகள் மாகாண மட்டங்களிலமைந்த சமூகப் பொருளாதார தரவு மட்டத்தினை வலுவாக்க உதவும்.

நான்கு சுற்றுக்களை உள்ளடக்கிய இவ்வள வீடு நகரம், கிராமம், மற்றும் பெருந்தோட்டத் துறைகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 8,800 மாதிரிக் குடும்ப அலகுகளை உள்ளடக்குகின்றது. இவ்வளவீடு வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய இடங்களிலேயே மேற்கொள்ளப் படுகின்றது. மாதிரியில் ஏறத்தாழ 25 சத வீதத்தினை உள்ளடக்குகின்ற 2,000 குடும்ப அலகுகளிலிருந்தான அளவீடுகளைக் கொண்ட சுற்று - 1 இன் தரவுச் சேகரிப்புக்கள் ஏற்கனவே முடிவடைந்து விட்டதுடன் சுற்று - 2 இன் தரவுச் சேகரிப்புக்கள் நடைபெற்று வருகின்றன. அளவீட்டின் கள வேலை 1997 ஒற்றோபரளவில் நிறைவு செய்யப்படுவதற்கு அட்டவணையிடப் பட்டுள்ளது.

### நாடளாவிய தரவு சேகரிப்புத் திட்டம்

1978 இல் புள்ளி விபரவியல் திணைக்களத்தி னால் தொடங்கப்பட்ட நாடளாவிய தரவு சேகரிப்புத் திட்டம் அதன் தொழிற்பாட்டில் பதினெட்டாவது ஆண்டினை நிறைவு செய் துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நுகர்வுப் பொருட்களின் சில்லறை விலைகள் கூலி வீதங்கள் என்பன மீதான தரவுகளும் தகவல்களும் மற்றும் முறைசாராத் துறைகள் தொடர்பான உற்பத்தி குறிகாட்டிகள் என்பன இத்திட்டத்தின் கீழ் புள்ளிவிபரவியல் பரிசோதகர்களாகத் தொழிற் படும் பள்ளிக்கூட ஆசிரியர்களைக் கொண்ட தீவு முழுவதற்குமான வலையமைப்பினூடாக கிரமமான அடிப்படையில் சேகரிக்கப்படுகின்ற இத்திட்டம் நெல், தேயிலை, இறப்பர், மற்றும்

தெங்குப் பயிர்ச்செய்கை சிறி அளவுக் கட்டட வாக்கத்துறை என்பனவற்றையும் துணைத் துறைகளாக உள்ளடக்கியது. இத் திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட தரவுகள் அச்சு மற்றும் மின்னியல் வெகுசனத் தொடர்பு சானங்களின் ஊடாக கிரமமான முறையில் வெளியிடப்படு கின்றன. இத் திட்டத்தின் கீழ் கண்டியிலும் அநுராதபுரத்திலுமுள்ள பிரதேச அலுவலகங் களின் ஒத்துழைப்புடன் முறையே 1996 சனவரியிலும் யூலையிலும் திணைக்களம் பல ஆய்வரங்குகளை நடாத்தியது.

வேளாண்மையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் நுகர்வோருக்கு தகவல்களைப் பரப்பு வதனையும் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை விலை என்பனவற்றிற்கு இடையேயான வேறுபாடுகளைக் கண்காணிப்ப தனையும் கருத்திற் கொண்டு நாளாந்த அடிப்படையில் புறக்கோட்டைச் சந்தை மற்றும் முக்கிய உற்பத்தி நிலையங்களிலிருந்து முக்கிய உணவுப் பொருட் களின் மொத்த விற்பனை விலைகளை சேகரிப் பதற்காக புதிய திட்டமொன்றினைத் திணைக்களம் தொடங்கியது. இத்தரவுகள் மத்திய வங்கியின் வெளியீடுகளில் காணப்படுகின்றன. இத்தரவுகள் தேசிய கணக்குகள், விலைகள் மற்றும் கூலிகளின் சுட்டெண்ணைத் திரட்டுவதற்கும் பயன்படுத்தப் பட்டது.

## தேசிய கணக்குகள்

உற்பத்தி மற்றும் செலவின அணுகுமுறை களைப் பயன்படுத்தி திணைக்களம் தொடர்ந்தும் தேசிய கணக்குகளைத் திரட்டுகிறது. தேசிய கணக்குகளின் மதிப்பீடுகளைத் திரட்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட தரவுத்தளத்தினை திணைக் களம் வலுப்படுத்தியுள்ளது. நோக்கிய முதற் படியாக, நாட்டில் தோன்றியுள்ள பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்கு வதற்காக கள மட்டங்களில் தகவல்களைச் சேகரிப்பதற்கு திணைக்களம் நடவடிக்கைகளைத் தொடங்கி யுள்ளது.

மேலும், 1993 இன் ஐக்கிய நாடுகள் புள்ளி விபரவியல் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட தேசிய கணக்குகளின் செயல் முறையிலுள்ள வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீட்டு நடைமுறைகளின் திருத்தத்திற்கு அவசியமான தரவுகளைச் சேகரிப்பதிலும் முறை யில் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

## தொழில்நிலைப் புள்ளி விபரங்கள்

அரச திணைக்களங்கள், அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்துறையிலுள்ள தொழில் நிலைப் போக்குகளை உறுதியாக அறிந்து கொள்ளுவதற்காக அரசதுறைத் தொழில் நிலை மீதான வருடாந்த அளவீடு 1996 இல் மேற்கொள்ளப்பட்டது.

## வெளியீடுகள்

திணைக்களம் “இலங்கை சமூகப் பொரு ளாதார தரவு 1996” மற்றும் “இலங்கையின் பொருளாதார சமூகப் புள்ளி விபரங்கள்” என்ற பெயர்களில் அதன் ஆண்டு வெளியீடுகள் இரண்டினை வெளியிட்டது. இவை குடித் தொகைப் பரம்பல் தொழிற்படையும் தொழிலும், தேசிய வருமானமும் செலவும், வேளாண்மை, கைத்தொழில், வெளிநாட்டு வர்த்தகம், விலைகள் மற்றும் கூலிகள், பணம், வங்கித் தொழில், அரச நிதி, சமூகப் பொரு ளாதார பணிகளும் மூலதனச் சந்தையும் என்பனவற்றை உள்ளடக்கிய சமூகப் பொரு ளாதார மாறிலிகள் மீதான அனைத்தையும் உள்ளடக்கிய காலத் தொடர் மற்றும் குறுக்குப் பிரிவுத் தரவுகளையும் தருகின்றன. இவ் வெளியீடுகளில் உள்ள தரவுத் தளங்கள் பிராந்திய தேச பொருளாதார சமூகங்களுக்கான ஒப்பீட்டு புள்ளி விபரங்களை உள்ளடக்கியுள்ளன.

## தரவு செய்முறைப்படுத்தல்

மத்திய வங்கியின் தலைமை அகத்தில் அமைந்திருந்த திணைக்களத்தின் ஐ. பீ. எம். 4361 முதன்மை அடிச்சட்ட கணனி முறை, தனியாட்கள் கணனிகள், தரவு நிரற் படுத்தல் முறை மற்றும் ஏனைய அனைத்துக் கருவிகளும் 1996 சனவரி 31 அன்று சேதமடைந்து விட்டன. கணனிச் செய்முறைகளும், செய்முறைப்படுத்தப் பட்ட தரவுகளும் நாடாக்களில் பதியப்பட்டு மத்திய வங்கிக் கட்டிடத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருந்தன. மிக முக்கியமான வேலை

களைச் செய்முறைப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கிக் கட்டடத்தில் இருந்ததையொத்த கணனியை மீள அமைப்பதே தரவு செய்முறைப் படுத்தல் திணைக்களத்தின் முதற் பணியாக இருந்தது. குடிமதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உதவியை மத்திய வங்கி நன்றியுடன் ஏற்றுக்கொண்டது. இது வங்கியினுடையதையொத்த கணனி வடிவ மைப்பினை வழங்கியதுடன் மத்திய வங்கி அலுவலர்கள் பிரயோக கணனி செய்முறைகளை குறுங் காலத்தில் மேற்கொள்ளவும் உதவியது.

உயர்ந்த அளவிலான தரவுத் தளங்களை செய் முறைப்படுத்தும் நோக்குடன் வாடகை அடிப்படையில் ஐ. பீ. எம். இனால் கிடைக்கச் செய்யப்பட்ட கருவிகளுடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணனி தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் கணனியை அமைக்கும் நடவடிக்கை களை மத்திய வங்கி முன்னெடுத்துச் சென்றது. கணனி தொழில் நுட்பவியல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட உதவியை மத்திய வங்கி நன்றியுடன் ஏற்றுக் கொண்டது.

ஐக்கிய நாடுகள் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஐ. அமெரிக்க நாடுகளின் அரசாங்கம் கணனிக் கருவிகளையும் அதனுடன் தொடர்பான உற்பத்திகளையும் கொள்வனவு செய்வதற்காக ஐ. அ. டொலர் 350,000 கொண்ட கொடையை வழங்கியது. இதன்படி மூன்று ஏ. எஸ். 400 நவீன கணனி அமைப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் பரம்பிய விதத்தில் செய் முறைப்படுத்தும் கொள்கையைப் பேணுகின்ற விதத்தில் பல்வேறு இடங்களிலும் நிறுவப்பட்டது. இதே கொடையின் கீழ் நிதியியல் கணக்கீடு மற்றும் தயாரிப்புக் கணக்கீட்டு முறை 400 ஐஎச்ஆர்எம் (ஒருங்கிணைக்கப்பட்ட மனித மூலவள முகாமைத்துவம்) மென் கணனித் தொகுதியும் கொள்வனவு செய்யப்பட்டது. பழகிக் கொள்வதும் நடைமுறைப்படுத்துவதும் திருப்தி கரமாக நடைபெற்று வருகின்றன.

தரவு செய்முறைப்படுத்தல் திணைக்களம் மத்திய வங்கிக்காக ஒருங்கிணைக்கப்பட்ட பரந்தளவிலான உள்ளக வலையமைப்பு, பரந்த பிரதேச வலையமைப்பு இன்ரநெற்றை அடைதல் ஈ மெயில் மற்றும் தகவல் வழங்கும் வசதிகளுடன் புதிய நவீன அலுவலக சுற்றாடலை அமைப்ப தற்கான திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு வேலைகளில் ஈடுபட்டுள்ளதுடன் இது 1997 இல் நிறுவப்படவுள்ளது.

## இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம்

ஆய்விற்குரிய காலப்பகுதியில், செயல் முறைப்படுத்தப்பட்ட காசோலைகளின் எண்ணிக்கை 1,734,557 விடயங்களினால் அதிகரிக்கப்பட்டமையினால் மொத்த எண்ணிக்கை 27,527,822 இற்கு உயர்ந்தது. கருவிகள் தரமுயர்த்தப்பட்டதன் விளைவாகவும் 1995 இன் பிற்பகுதியில் புதிய தீர்வை அமைப்பு ஊக்கு விப்புக்களையும் தண்டங்களையும் ஒருங்கி ணைத்தல் அறிமுகப்படுத்தப்பட்டதினாலும் இலங்கைத் தன்னியக்க தீர்வகம் காசோலை களைக் கையாளும் நேரத்தை மேலும் ஒரு மணித்தியாலத்தினால் குறைக்கக் கூடியதாக இருந்தது. உள்வரும் காசோலைகளும் அறிக்கை களும் விரைவு அஞ்சல் பணிகள் மூலம் சேகரிக் கப்பட்டு தூரப்பிரதேசங்களுக்கு அதே இரவி லேயே கொண்டு செல்லப்படுவதனால் இவ்வாறு ஒரு மணித்தியாலத்தினால் குறைக்கப்பட்டி ருப்பதானது வர்த்தக வங்கிகள் அவற்றின் தேறாத காசோலைகளை வழமையான நேரத் திற்கு முன்னாலேயே அனுப்புவதற்கு பெரும் உதவியாக இருந்தது.

1996 இல் நிலவிய சூழ்நிலைகளின் காரண மாக இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப் பனவு முறை விரிவாக்கப்படாத போதிலும் இலங்கைத் தன்னியக்கத் தீர்வகம் பயன்படுத்து னர்களின் நன்மை கருதி இலங்கை வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவு முறையின் நடை முறைக் கையாளலை அபிவிருத்தி செய்யக் கூடியதாக இருந்தது. இலங்கை வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவு முறை சம்பளங்களின் கொடுப்பனவு மற்றும் வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவுகளை மேற் கொள்ளப் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றது. ஆண்டின் பின்னரைப் பகுதியில் ஊழியர் சேம நிதியமும் ஊழியர்களுக்கு சேமநிதிய மீளளிப்புக்களை வழங்குவதற்காக இலங்கை வங்கிகளுக் கிடையிலான கொடுப்பனவு முறையில் இணைந்து கொண்டது.

## பயிற்சி

ஆய்விற்குரிய ஆண்டில், கல்வி சார்ந்த அதே போன்று கல்வி சாராத துறைகளில் அலுவலர்களுக்கு பயிற்சியளிக்கின்ற அதன் கொள்கையை மத்திய வங்கி தொடர்ந்தது. கல்வி சார்ந்த பயிற்சியானது வெளிநாட்டிலுள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகங்களில் பொருளா தாரம் மற்றும் அதனுடன் இணைந்த விடயங்களில் பட்டப்பின் படிப்புடன் தொடர்புடையதாகக் காணப்பட்ட இவ் வாண்டில் முதுமாணிப் பட்ட நெறிகளுக்காக 7 அலுவலர்கள் வெளிநாடு பயணமாகினர். இவை வங்கித் தொழில், வர்த்தகம், நிதியியல், கணக்கியல் போன்றவற்றிலான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா கற்கை நெறிகளை உள்ளடக்கியிருந்தன. மேலதிகமாக ஒரு அலுவலர் இந்தியாவிலுள்ள சர்வதேசப் புள்ளி விபரவியல் கல்வி நிலையத்தில் புள்ளி விபரவியல் டிப்ளோமா கற்கை நெறிகளைப் பயின்றார்.

குறுங்கால கற்கை நெறிகள், ஆய்வரங்குகள், செயலமர்வுகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு கற்கைச் சுற்றுலாக்கள் என்பனவற்றை உள்ள டக்கிய கல்வி சாரா பயிற்சியானது வங்கி யுடன் தொடர்புபட்ட குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பானதாக இருந்தது. 1996 இல் குறுகிய கால பயிற்சிக்காக மொத்தமாக 46 அலுவலர்கள் வெளிநாடுகளுக்குப் பயணமாகினர். கணனிப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் 258 அலுவலர் களும், உள்நாட்டு நிறுவனங்களில் நடத்தப்பட்ட ஆய்வரங்குகள் மற்றும் செயலமர்வுகளில் 98 அலுவலர்களும் பங்கேற்ற வேளையில் 85 அலுவலர்கள் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரியினால் நடத்தப்பட்ட கற்கை நெறிகளில் பங்கேற்றனர்.

பட்டப்பின் படிப்பு கற்கைகளுக்காக வெளி நாடுபயணமாக எண்ணியுள்ள அலுவலர்களுக் காக பொருளாதாரம் மற்றும் கணித வகுப்புக் களைத் திணைக்களம் நடாத்தியது. சில குறிப்பிட்ட வகையான ஊழியர்களின் பதவி உயர் விற்கான பரீட்சைகளையும் உயர்பதவி அலுவலர்களுக் கான பட்டப்பின்படிப்பு புலமைப் பரிசில் தகைமைப் பரீட்சைகளையும் நடத்தும் அதன் வழமையான தொழிற்பாடுகளைத் திணைக்களம் தொடர்ந்தும் மேற்கொண்டது.

## முகாமைத்துவக் கணக்காய்வு

குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட இடர்ப் பாடுகளுக்கு மத்தியில், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களம் அதன் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களின்படி அதனது வேலை களை மேற்கொண்டது. கணக்காய்வின் போது திணைக்களம் வங்கியினால் பின்பற்றப்பட்ட நடைமுறைகளில் காணப்பட்ட குறைபாடுகளையும் பிழைகளையும் சுட்டிக்காட்டியதுடன் சாத்திய மானவிடத்து விதந்துரைப்புக்களையும் மேற் கொண்டது. இவ்வாண்டில் திணைக்களம் அதன் வேலைகளை மேற்கொள்கையில் குண்டு வெடிப்பின் விளைவாகத் தோன்றிய விடயங்க ளிலும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்ட மீட்பு வழி முறைகளிலும் சிறப்புக் கவனத்தை ஈர்க்க வேண்டியிருந்தது. இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மருத்துவ நன்மைகள் போன்றவற்றின் தொடர்பான விடயங்களைத் தீர்த்து வைப்பதில் இது செயலக மற்றும் நலன் புரித் திணைக்களங்களுடன் மிக நெருங்கிய முறையில் தொழிற்பட வேண்டியிருந்தது.

மேற் குறிப்பிட்டவற்றிற்குப் புறம்பாக, பின்வரும் ஆய்வுகளும் /அளவீடுகளும் பொறுப் பேற்கப்பட்டன. அவற்றில் சில திணைக்களத்தி னாலேயே தொடக்கி வைக்கப்பட்ட வேளையில் மேலும் சில முகாமைத்துவத்தினால் சாட்டப் பட்டன.

அ. பணிமனைத் திணைக்களத்தின் போக்கு வரத்துப் பிரிவுதொடர்பான ஆய்வு ஒன்று.

ஆ. குண்டு வெடிப்பினால் சேதமடைந்த தெரிந் தெடுக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பீடு

இ. திணைக்களங்களில் கிடைக்கத்தக்கதாக வுள்ள தளபாடங்களைச் சரிபார்த்தல்.

ஈ. விடுப்புப் பதிவேடுகளை மீளவமைப்பது பற்றிய ஆய்வு.

## பணிமனை

கோட்டையிலுள்ள தலைமைக் கட்டடம் பயங்கரவாதிகளின் தாக்குதலுக்குட்பட்டதன் விளைவாக பல்வேறுபட்ட திணைக்களங்களையும்

தற்காலிக பணி மனைகளில் மீள அமைப்பதில் 1996 இல் இத் திணைக்களம் முக்கியமாக ஈடுபட்டிருந்தது. இதற்குப் புறம்பாக இது வழமையான பேணல் வேலைகள் இராசகிரியா விலுள்ள வங்கிப் பணி மனைகள், பிரதேச அலுவலகங்கள் விடுமுறை இல்லங்கள் என்பன வற்றை ஒழுங்காக வைத்திருத்தல் என்பன வற்றிலும் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

### சேதமடைந்த தலைமை அலுவலகக் கட்டடம்

குண்டு வெடிப்பு கட்டடத்திற்குப் பெரு மளவு சேதத்தினை விளைவித்துள்ளது. சேத மடைந்த தூண்கள் சிதைவுகளினால் தாங்கப் பட்டிருந்தமையினால் தூண்களுக்கு பக்கபலம் வழங்குவதற்காக உடனடி புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் அனைத்து மாடிகளிலுமுள்ள சிதைவுகளும் அகற்றப்பட்டன.

அடித்தளத்தில் சேரும் நீரை வெளியேற்று வதற்காக நீர்ப்பம்பிகள் நிறுவப்பட்டதுடன் இதற்குப் புறம்பாக முன் பக்கத்தின் தாங்கு சுவர் மீள அமைக்கப்பட்டதுடன் அடித்தளத்தில் நீர் சேருவதனைத் தடுக்கும் பொருட்டு சேத மடைந்த தரைமாடித் தளத்தினை மூடி தற்காலிக கூரை அமைக்கப்பட்டது.

### தலைமை அலுவலகக் கட்டட விரிவாக்கல்

1994 இல் தொடங்கிய தலைமை அலுவலகக் கட்டடத்தினை விரிவாக்கும் கட்டுமான வேலைகள் 1996 இலும் தொடர்ந்தன. பெருமளவு எண்ணிக்கையான கற்பாளங்கள் காணப்பட்டமை, செங்குத்தான பாறைகள் பாதுகாப்புக் காரணங் களுக்கான வேலைகள் நிறுத்தப்பட்டமை போன்ற எதிர்பாராத தள நிலைமைகளின் காரணமாக வேலைச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. விரிவாக்கக் கட்டடம் 1998 திசெம்பரில் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இக்கட்டட வேலைகள் முற்றுப் பெற்றதும் தற்பொழுது வாடகைக் கட்டடங்களில் அமைந்துள்ள அதன் அனைத்து திணைக்களங்களுக்கும் இதில் இடமளிப்பதற்கு வங்கிக்கு இயலுமாக இருக்கும்.

### இராசகிரியாவில் புதிய இரண்டு மாடிக் கட்டடம்

ஏறத்தாழ 7,725 ச. அடி மொத்தப் பரப்புக் கொண்ட இக் கட்டடம் 1996 இன் முற் பகுதியில் முற்றுப் பெற்றது. இது கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி யினால் நடத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்க ளில் தங்கியிருந்து பயிற்சி பெறுவோர்க்கு மாற்றுத் தங்குமிடங்களை வழங்குவதற்காக அமைக்கப் பட்டது. எனினும் குண்டு வெடிப்பின் விளைவாக பல திணைக்களங்கள் தற்காலிகமாக இக் கட்டடத்தில் நிறுவப்பட்டன.

## நலன்புரி

கடந்த காலங்களைப் போன்று, 1996 இலும் மத்திய வங்கியின் நலன்புரித் திணைக்களம் வங்கி ஊழியர்களுக்கு தொடர்ந்தும் நலன்புரி வசதிகளை வழங்கியது. குண்டு வெடிப்பினை அடுத்து திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வசதிகள் மேலும் அதிகரிக்கப்பட்டன.

திணைக்களம், ஊழியர்களின் வீடமைப்பு, ஊர்தி மற்றும் ஏனைய தேவைகளுக்கு சலுகைக் கடன்களை வழங்கியதோடு அலுவலர் மருத்துவ நன்மைத் திட்டத்தின் கீழ் ஊழியர்களினதும் அவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட அனுமதிப் பங்கிற்கு உட்பட்ட மருத்துவச் செலவுகளையும் செலவீடு செய்தது. எனினும் குண்டு வெடிப்பின் பின்னர் குண்டு வெடிப்பினாலும் தீயினாலும் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் மருத்துவ தேவைக்கு இடமளிக்கும் பொருட்டு அத்தகைய உச்ச எல்லைகள் நெகிழ்ச்சியாக்கப்பட்டன. அதனைவிட குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலவச மதிய உணவுப் பணி வழங்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஊழியர் களின் நன்மைக்காக உதவிக் கொடுப்பனவு டனான உணவக வசதிகள் வழங்கப்பட்டன. புகைவண்டி மற்றும் பேருந்து பருவகாலச் சீட்டுக்களை கொள்வனவு செய்வதற்காக 75 சதவீத உதவிக் கொடுப்பனவும் புகைவண்டிப் பயண ஆணைச்சீட்டும் இவ்வாண்டும் தொடர்ந்தது.

குண்டு வெடிப்பின் பின்னர் மத்திய வங்கியின் பல திணைக்களங்கள் சேதமடைந்த தலைமை அலுவலகத்திலிருந்து வேறு இடங்களுக்கு மாறின. ஊழியர்கள் எங்கு வேலைக்காக அமர்த்தப்பட்டார்களோ அங்குள்ள தேவைகளுக்கேற்ப நலன்புரித் திணைக்களம் வசதிகளை வழங்கியது. எனினும் மத்திய வங்கியின் மருத்துவ நிலையம் ஏறத்தாழ ஒரு வருடமாக இயங்கவில்லை. மருத்துவ நிலையத்தின் பெரும்பாலான கருவிகள் தீயினால் சேதமடைந்தமையின் விளைவாக மருத்துவ நிலையத்தினால் வழங்கப்பட்ட பணிகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. எனினும், குண்டு வெடிப்பினால் காயமடைந்த ஊழியர்களின் மருத்துவச் செலவுகளை செலவீடு செய்யும் விடயம் முன்னுரிமையையும் தாராளமான அணுகு முறையையும் பெற்றது.

மேலும், குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உள்நாட்டு மருத்துவ சிகிச்சைக்காக ரூ. 250,000/- வரையிலும் வெளிநாட்டுச் சிகிச்சைக்காக ரூ. 250,000/- வரையிலுமான மருத்துவச் செலவுகளை செலவீடு செய்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டன. இதனைத் தவிர மேற்குறிப்பிட்ட எல்லைக்கு மேலேயும் மருத்துவத் தேவைகளை வேண்டி நிற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு சிறப்பு நிதியமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

குண்டு வெடிப்பினால் தமது வாகனங்கள் பாதிக்கப்பட்ட மத்திய வங்கி ஊழியர்களில் வாகனச் சொந்தக்காரர்களுக்கு நிவாரணத் தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

அனைத்து அலுவலர் நன்மைத் திட்டங்களுடனும் தொடர்பான திணைக்களத்தின் தரவுத் தளம் மற்றும் கணக்கிடல் முறை ஆகியன தீயினால் சேதமடைந்தன. எனினும் திணைக்களம் மற்றைய மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாக விருந்த தகவல்களுடன் மிகக் குறுகிய காலத்திற்கிடையில் கணக்கிடல் முறையை மீள அமைக்கக் கூடியதாக இருந்தது. ஆண்டின் இறுதியளவில் திணைக்களத்தின் பெரும்பாலும் அனைத்து நடவடிக்கைகளும் வழமைக்குக் கொண்டு வரப்பட்டன.

## பாதுகாப்பு

### மீள் பயிற்சி.

பாதுகாப்பு அலுவலர்களுக்கு பின்வரும் விடயங்களில் புதிய பயிற்சி வழங்கப்பட்டது.

(அ) தீயணைக்கும் கருவிகளைக் கையாளல்.

(ஆ) அடிப்படை முதலுதவி

(இ) ஆயுதங்களைக் கையாளுதல்

(ஈ) உடன் துப்பாக்கிச் சூடு

(உ) பாதுகாப்பு அலுவலர்களின் கடமைகளும் பொறுப்புக்களும்

### வேலையிலமர்த்தல்

1996 சனவரி 31அன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு நிகழ்வின் பின்னர், முன்னைய அமைவிடங்களுக்கு மேலதிகமாக பின்வரும் பணிமனைகளுக்கும் பாதுகாப்பு வழங்கும் பொருட்டு பாதுகாப்பு அலுவலர்களின் பணி விரிவாக்கப்பட்டது.

(அ) ஊ. சே. நிதிய திணைக்களம் - இல. 64, பிரதான வீதி, பத்தரமுல்ல.

(ஆ) வங்கி மேற்பார்வைத் திணைக்களம் - இல. 20 ஆர். ஏ. த மெல் மாவத்தை, கேமச்சந்திரக் கட்டடம், கொழும்பு 3.

(இ) கிராமிய வங்கித் தொழில் அலுவலகப் பயிற்சிக் கல்லூரி புதிய கட்டடம், இராசகிரிய.

(ஈ) நாணயத் திணைக்களம் - மக்கள் வங்கி, ஏரிக்கரைக் கிளை, டபிள்யூ. ஆர் விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு 1.

(உ) நாணயத் திணைக்களம் - ஸ்ராண்டட் சார்டட் வங்கிக் கட்டடம், சனாதிபதி மாவத்தை, கொழும்பு 1.

(உ) உலக வர்த்தக நிலையம் - எச்சலன் சதுக்கம், கொழும்பு 1.

### வழிப்பாதுகாப்புக் கடமைகள்

நாணயத்தையும் தங்கத்தையும் கொண்டு செல்கையில் பொலிஸ் உதவியுடன் திணைக்களமும் வழிப் பாதுகாப்பினை வழங்கியது. திணைக்களம் ஆளுநருக்கும் மத்திய வங்கிக்கு வருகை தந்த வெளிநாட்டுப் பேராளர்களுக்கும் வழிப்பாதுகாப்பினை வழங்கியது.

## ஆளணி

1996 இல் நிறுவனத் திணைக்களம் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகள் ஓய்வு பெறல் மற்றும் தனிப்பட்ட விடயங்களுடன் தொடர்புபட்ட அதன் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற் கொண்டது.

1996 சனவரி 31 இல் இடம்பெற்ற குண்டு வெடிப்பு அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தீ என்பனவற்றின் காரணமாக அழிந்து போன தனியாள் கோவைகள் மற்றும் ஏனைய ஆவணங்களை மீண்டும் உருவாக்கும் பெரும் வேலையைத் திணைக்களம் பொறுப்பேற்றுள்ளது.

1996 இல் ஆளுநர் திரு ஏ. எஸ். ஜயவர்த்தன பின்வரும் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

(அ) ஐக்கிய அமெரிக்காவின் வாசிங்டன் நகரில் 1996 ஏப்பிலல் 14 ஆம் நாளிருந்து 28 ஆம் நாள்வரை நடைபெற்ற சருவதேச நாணய நிதியம் மற்றும் உல வங்கியின் ஆண்டுக் கூட்டங்கள்.

(ஆ) சிங்கப்பூரில் 1996 மே 6 ஆம் நாளிலிருந்து 12 ஆம் நாள்வரை நடைபெற்ற 31 ஆவது தென்கிழக்காசிய மத்திய வங்கி ஆளுநர் களின் மாநாடு மற்றும் சிங்கப்பூர் நாணய அதிகாரசபை 25 ஆவது ஆண்டுவிழா கருத்தரங்கு.

(இ) ஐக்கிய இராச்சியம் இலண்டன் இங்கிலாந்து வங்கியில் 1996 யூன் 6 ஆம் நாள் தொடக்கம் 7 ஆம் நாள்வரை நடைபெற்ற மத்திய வங்கி ஆளுநர்கள் கருத்தரங்கு.

(ஈ) சுவிறிசர்லாந்தில் பாஸ்லேயில் 1996 யூன் 8 ஆம் நாள் தொடக்கம் 10 ஆம் நாள்வரை நடை பெற்ற சருவதேச தீர்ப்பனவிற்கான வங்கியின் அறுபத்தாறாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் .

(உ) வாசிங்டன் நகரில் 1996 செத்தெம்பர் 25 ஆம் நாள் தொடக்கம் ஒத்தோபர் 8 ஆம் நாள்வரை நடைபெற்ற சருவதேச நாணய நிதிய உலக வங்கிக் கூட்டங்கள் .

(ஊ) பெங்களுர் இந்தியாவில் 1996 ஒத்தோபர் 28 ஆம் நாள் தொடக்கம் நவெம்பர் 2 ஆம் நாள் வரை நடைபெற்ற அப்ரகாவின் 35 ஆவது நிறைவேற்றுக் குழுக் கூட்டம் மற்றும் அப்ரகா சாதாரண ஆண்டுப் பொதுக் கூட்டம்.

(எ) பரிஸ், பிரான்சில் 1996 நவெம்பர் 17 ஆம் நாள் முதல் 28 ஆம்நாள்வரை இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பிரான்சிய அரசாங்கத்துடன் அலுவலகக் கலந்துரையாடல்கள் .

### நியமனங்கள்

(அ) திரு. டபிள்யூ.. ஏ. விஜயவர்த்தன பணிப் பாளர், கிராமியக் கொடுகடன் தமது கடமைகளுக்கு மேலதிகமாக 1996 பெப்புருவரி 28 ஆம் நாளிலிருந்து ஊழியர் சேம நிதியத் திணைக்களத்தின் பதில் கண்காணிப்பாளராகவும் நியமிக்கப் பட்டார்.

(ஆ) திரு. வை. ஏ. பியதிஸ்ஸ சிறப்பு அலுவலர் மூலதனம் மற்றும் நிதியியல் சந்தை அபிவிருத்தி, தமது கடமைகளுக்கு மேலதிக மாக 1996 மார்ச்சு 1 ஆம் நாளி லிருந்து பாதுகாப்புப் பணிகளின் பணிப்பாள ராகவும் நியமிக்கப்பட்டார்.

(இ) திரு. ஜி. ஏ. பெரேரா பணிப்பாளர் பாதுகாப்புப் பணிகள் 1996 மார்ச்சு 1 ஆம் நாளிலிருந்து சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

(ஈ) திரு. டி. போயாகொட பணிப்பாளர் கிராமிய வங்கித் தொழில் அலுவலர் பயிற்சிக் கல்லூரி அவரது கடமைக்கு மேலதிகமாக 1996 ஏப்பிரல் 24 ஆம் நாளிலிருந்து பயிற்சித் திணைக்களத்திற்கு பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(உ) திரு. எம். ஐ. எம். கமீட் பணிப்பாளர் முகாமைத்துவக் கணக்காய்வு 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து பணிமனைத் திணைக் களப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஊ) திரு. எஸ். ரூபசிங்க பணிப்பாளர் நலன்புரி 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக் களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

(எ) முனைவர் என். எல். சிறிசேன பணிப்பாளர் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திலிருந்து 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து அபிவிருத்தி நிதி திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஏ) திரு. ஜே. ஈ. டீ. கருணரத்ன பணிப்பாளர் தகவல் திணைக்களம், 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்க ளத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டார்.

(ஐ) திருமதி. எம். என். ஆர். கூறே மேலதிகப் பணிப்பாளர் வங்கித் தொழில் அபிவி ருத்தித் திணைக்களம் 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து தகவல் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஒ) திரு. டபிள்யூ. எஸ். எல். பர்னாந்து மேலதிகப் பணிப்பாளர் கிராமியக் கொடு கடன் திணைக்களம், 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து நலன்புரித் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

(ஓ) திரு. ரி. சவுந்தரநாயகம் பணிப்பாளர் அபிவிருத்தி நிதித் திணைக்களம் 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து செயலாளராக நியமிக்கப்பட்டார்.

(ஔ) திரு. ரி. எச். டீ. பீரிஸ் பணிப்பாளர் பணிமனைத் திணைக்களம் 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

(க) முனைவர் ஏ. ஜே. எம். சுகைர் பணிப்பாளர் பயிற்சித் திணைக்களம் 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

(ங) திரு. கே. சி. எம். குணசேகரா கண்காணிப் பாளர் ஊழியர் சேம நிதியத் திணைக்களம் 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

(ச) திரு. சி. ஈ. ஜயசூரிய செயலாளர் 1996 யூன் 1 ஆம் நாளிலிருந்து சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார்.

(ஞ) திரு. கே. சி. எம். குணசேகரா சிறப்பு அலுவலர் 1996 செத்தெம்பர் 9 ஆம் நாளி லிருந்து பயிற்சித் திணைக்களத்திற்குப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட பின்னர் 1996 நவெம்பர் 11 ஆம் நாளிலிருந்து மீண்டும் சிறப்பு அலுவலராக நியமிக்கப் பட்டார்.

(ட) முனைவர் எல். எல். குணரத்ன சிறப்பு அலுவலர் 1996 நவெம்பர் 11 ஆம் நாளி லிருந்து பயிற்சித் திணைக்களத்திற்கு பணிப்பாளராக நியமிக்கப்பட்டார்.

## ஓய்வு பெறல் பதவி விலகல்

திணைக்களத் தலைவர் முனைவர் ஏ. ஜே. எம். சுகைர் 1996 ஓகத்து 29 ஆம் நாளி லிருந்து மத்திய வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

திணைக்களத் தலைவர் திரு. சி. ஈ. ஜயசூரிய 1996 நவெம்பர் 16 ஆம் நாளி லிருந்து வங்கிப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

## விடுவிப்பிலுள்ள / விடுமுறையில் உள்ள அலுவலர்கள்

முனைவர் டி. ஜே. ஜி. பர்னாந்து மக்கள் வங்கியின் தலைவராகவும் பணிப்பாள ராகவும் கடமையாற்றுவதற்காக நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. சி. த. எஸ். ஜயவர்தன நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

திரு. பி. ஜி. ஜயசூரிய முதலீடுகளின் உதவிப் பொது முகாமையாளராக கடமையாற்றுவதற்காக தேசிய சேமிப்பு வங்கிக்கு.

திருமதி. ரி. எம். அபேரத்ன சனாதிபதி செயலகத்திற்கு.

முனைவர் பி. பீ. ஜயசுந்தர திறைசேரியின் துணைச் செயலாளராக கடமையாற்று வதற்காக பகுதி நேர அடிப்படையில் நிதி திட்டமிடல் அமைச்சிற்கு.

முனைவர் ( திருமதி) ராணி ஜெயமக, சிறப்பு அலுவலர் இலண்டன் பொதுநலவாய நாடுகளின் அலுவலகத்தில் பணிபுரிவதற் காக விடுப்பில் உள்ளார்.

திரு பீ. ரீ. சிறிசேன மாலைதீவுகள் நாணய மேலாண்மைச் சபையில் பணி புரிவதற்காக விடுப்பில் உள்ளார்.